விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 12 சனிக்கிழமை (26.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 038

## அரசியலமைப்பு பேரவையினால் நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது

### பாராளுமன்றில் பிரதமர் ரணில்



(கொழும்பு)

அரசியலமைப்பு பேரவை ஸ்தாபிக்கப்பட்டதன் காரணமாக நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். மேலும் நாட்டில் நீதிமன்றங்கள் சுயாதீனமாக இயங்குவதாகவும் குறிப்பிட்டார். (23-ம் பக்கம்...)

### போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என

## திடமான சான்றை ஜெனிவாவில் அரசு முன்வைக்க வேண்டும்

### உலக தேசப்பற்றாளர் இலங்கை மன்றம் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40-வது கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் இடம்பெறவிருக்கும் நிலையில் இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என்பதற்கான திடமான சான்றுகளை அரசாங்கம் சமர்ப்பித்து நாட்டுக்கு சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஏற்பட்டுள்ள அபகீர்த்தியை போக்குவதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என உலக தேசப்பற்றாளர் இலங் 23☛

## இந்த ஆண்டுக்குள் வடக்கில் 17 ஆயிரம் வீடுகள் கட்டத்திட்டம்

### பிரதமர் - கூட்டமைப்பு சந்திப்பில் முடிவு

(கொழும்பு)

இவ்வாண்டு இறுதிக்குள் 17 ஆயிரம் வீடுகளை வடக்கு-கிழக்கிலுள்ள மக்களுக்கு ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று விசேட பேச்சுவார்த்தை ஒன்றினையும் நடத்தியுள்ளது.

வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பது குறித்த பேச்சுவார்த்தை நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் கடந்த காலங்களில் அதற்கான சாத்தியம் இருக்கவில்லை. இந்நிலையில் வடக்கு, கிழக்கில் வீடு 23☛

## மாகாண சபை தேர்தலை உடன் நடத்தக் கோரி

### சபையில் ஒத்திவைப்பு பிரேரணை

(கொழும்பு)

நாட்டில் வடக்கு-கிழக்கு உள்ளிட்ட ஆறு மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியினால் மாகாண சபைகளை நடத்தக்கோரிய சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை கொண்டுவரப்பட்டது.

எனினும் நேற்றைய விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சிகள் பங்குபற்றவில்லை. 23☛

### யுத்தம் முடிந்து பத்து வருடங்களாகின்றது

## நீதிக்காக மக்கள் எவ்வளவு காலம்தான் காத்திருக்க வேண்டும்?

### சர்வதேச மன்னிப்புச்சபை அதிருப்தி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் 2015 ஆம் ஆண்டில் வாக்களித்தவாறு உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டினை ஈடுசெய்தல் உள்ளிட்ட பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குரிய காலம் கடந்து கொண்டிருக்கின்றது.

யுத்தம் முடிவடைந்து இவ்வருடத்தின் மே மாதத்துடன் பத்து வருடங்கள் பூர்த்தியடையும் நிலையில், பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் எவ்வளவு காலம் உண்மைக்காகவும், நீதிக்காகவும் காத்திருப்பது? என்ற கேள்வி எழுகின்றது என சர்வதேச மன்னிப்புச்சபை அதிருப்தி வெளியிட்டுள்ளது. 23☛

## பதவியாசை எனக்கில்லை பாராளுமன்றில் சம்பந்தன்

(கொழும்பு )நானோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களோ பதவி ஆசை பிடித்தவர்கள் அல்ல. எதிர்க்கட்சி பதவி குறித்து நாம் தொடர்ச்சியாக கேள்வி எழுப்ப பதவி ஆசை காரணம் அல்ல.நாங்கள் ஒருபோதும் பதவிகளை நாடினவர்கள் அல்ல.

ஆனால் பேரினவாதத்தினை விதைக்கும் ஒரு சிலரின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அரசியல் அமைப்பினையோ ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் சாசன நடைமுறைகளையோ சாசனங்களையோ திரிபுபடுத்தி திசை திருப்புவதன் மூலம் சிறுபான்மை கட்சிகளினதும் சிறு 24☛

## பிரதம நீதியரசரை பரிந்துரைக்கவில்லை

### சபையில் பிரதமர் ரணில்

(கொழும்பு) அரசியலமைப்பு சபையில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை. பாராளுமன்றமே அதுதொடர்பில் இறுதித்தீர்மானம் எடுக்கும். அத்துடன் நான் பிரதம நீதியரசராக எவருடைய பெயரையும் பரிந்துரைக்கவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியலமைப்பு சபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று 23☛

### தேர்தலை நடத்தாது

## மக்கள் உரிமையை அரசு பறிக்கின்றது

### தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு) மாகாணசபை தேர்தலை நடத்தாது இழுத்தடித்து மக்களின் ஜனநாயக உரிமைகளை பறிக்கும் செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றதென எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் வரையில் வேறு எந்த தேர்தலையும் நடத்தாது காலம் கடத்தவே அரசாங்கம் முயற்சித்து 23☛

## எனது தீர்மானம் சட்டபூர்வமானது

### சபாநாயகர் கரு ஜயசூரிய

(கொழும்பு)

அரசியலமைப்பு சபையில் என்னால் எடுக்கப்பட்ட அனைத்து தீர்மானங்களும் சட்டபூர்வமானது எனத் தெரிவித்த சபாநாயகர் கரு ஜயசூரிய பக்கச்சார்பாக எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் கரு ஜயசூரிய தலை 23☛


## அரசியலமைப்பை மாற்றுவதற்கு முன் மக்களின் பிரச்சினைகளை தீர்க்குக

### அஸ்கிரிய மகாநாயக்க தேரர் மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

அரசியலமைப்பு சீர்திருத்தத்தினை விட நாட்டு மக்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் நேற்று மீண்டும் வலியுறுத்தினார்.

தாம் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது, அவர்கள் இலங்கைக்குள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்றே கோரியதாகவும் நாட்டைப் பிரிக்கும் எண்ணம் தமக்கில்லை என குறிப்பிட்டதாகவும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரக்காகொட ஞானரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)



## காலநிலை மாற்றம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது

### ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில், குறிப்பாக எமது பிராந்தியத்தின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் துறைகளில் காலநிலை மாற்றம் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, காலநிலை 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அஸ்டோனியாவின் சுற்றாடல் அமைச்சரை சந்தித்த மைத்திரி



(கொழும்பு)

அஸ்டோனியாவின் சுற்றாடல் அமைச்சரும் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் குழுவின் நான்காவது கூட்டத் தொடரின் தலைவருமான Slim kiisler க்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று சிங்கப்பூரின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தேசிய அபிவிருத்தி அமைச்சர் டெஸ்மன்ட் லீ ஆகியோரை சந்தித்திருந்தார்.

மேலும் ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் பிராந்திய சுற்றாடல் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் நிறுவன தலைவர்கள் மாநாட்டில் நேற்று முதன்மை உரையாற்றியிருந் தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மகிந்த அணியினரே இனவாதத்தை தூண்டுகின்றனர்

## ரோஸி குற்றச்சாட்டு




(கொழும்பு)

மகிந்த ஆதரவு எதிரணியினர் நாட்டில் இனவாதத்தை தொடர்ச்சியாக பரப்பி வருவதாக கொழும்பு மாநகரசபை மேயர் ரோஸி சேனாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்தோடு, ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து ஆயத்தங்களையும் ஐக்கிய தேசிய கட்சி முன்னெடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன் போது மேலும் தெரிவித்த அவர், "புதிய அரசியலமைப்பினால் நாடு பிளவடையும் என கூறுகிறார்கள். இது முற்றிலும் பொய்யான ஒரு கருத்தாகும். எந்தவொரு அரசியல்வாதியும் தனது நாடு பிளவடைவதைப் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார். அவ்வாறு இருக்கும்போது ஏன் பொய்யான தகவல்களை ஊடகங்கள் வாயிலாக பரப்ப வேண்டும்?

அதையும் மீறி, புதிய அரசியலமைப்பினால் நாடு பிளவடையும் என கூறும் தரப்பினர், தாராளமாக நிபுணர்களுடன் பகிரங்கமாக ஊடக விவாதமொன்றுக்கு செல்லலாம்.

தற்போது அரசியலமைப்பு தொடர்பான வரைபொன்றுகூட வரவில்லை. இந்த நிலையிலேயே தேவையில்லாத இனவா தத்தை எதிரணியினர் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறான இனவாதத்தினாலேயே ஜனாதி பதித் தேர்தலுக்கும் அந்த தரப்பினர் உடனடியாக சென்றார்கள் என்று கொழும்பு மாநகரசபை மேயர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாககணித்துத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932, 021 223 2222

உரும்பிராய். (7272)

**ஏணிகள் செய்து தரப்படும்**

அனைத்து வகையான ஏணிகளும் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு :-

076 803 4923 (7277)

**கணித வகுப்புக்கள்**

தரம் 6 - O/L மாணவர்கட்கான பிரத்தியேக மற்றும் குழு கணித வகுப்புக்கள் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியையினால் கற்பிக்கப்படும். (7279)

தொடர்புகளுக்கு :- 072 653 0247

**வீடு வாடகைக்குத் தேவை**

கொக்குவில் பகுதியில் 2 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு :

077 999 4603

**வாடகைக்கு**

நல்லூர் ஆலயத்திற்கு அண்மையில் 2 அறைகள் (A/C, Non A/C) பெரிய கோல், சாப்பாட்டு அறை கொண்ட வீடு கிழமை/மாத வாடகைக்கு உண்டு. சமைக்க கூடிய வசதி, சில்வர் பாத்திரம், Gas, Hotwater உண்டு.

வெளியிலிருந்து வருபவர்களுக்கு ஏற்றது

070 586 8900 (7278)

**கணினி திருத்தம்**

உங்கள் அலுவலகங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம். 0779086737

யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார்

GUNA BEST PC

LAPTOP, COMPUTER, CCTV CAMERA

SALE,REPAIR,INSTALLATION,PURCHASE

522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்.

43 பாங்சால் வீதி சந்தை மேல்மாடி சின்னக்கடை யாழ்ப்பாணம். (C-5303)

**விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி**

இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

A/L 2019 தொழினுட்பப் பிரிவுக்கு அனைத்துப் பாடங்களுக்குமான வினாத்தாள் வகுப்புக்கள் ஆரம்பம்

26.01.2019 சனிக்கிழமை

மேலதிக தகவல்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

077 248 7774 / 021 221 7860 (C-5304)

**வைத்திய சேவையும் பராமரிப்பும்**

உங்கள் வீடுகளில் வைத்து பராமரிக்க கஷ்டமான வயதுவந்த முதியவர்களை எங்கள் இடத்தில் வைத்து வைத்திய சேவையுடன் பராமரிக்கலாம்.

அழையுங்கள் : 077 873 0129 (7282)

## விநாயகர் சனசமூக நிலையம்

### கலை நிகழ்வுக்கு விண்ணப்பம் கோரல்

உடுப்பிட்டி இமையாணன் மேற்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் விநாயகர் முன்பள்ளியினால் கலைவிழா நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக எமது முன்பள்ளியில் கற்று கடந்த டிசம்பர் மாதம் சாதாரணதர பரீட்சை எழுதியவர்கள் வரை அதில் பங்குபற்றலாம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக 2006ஆம் ஆண்டு எமது முன்பள்ளியில் இணைந்து கற்றவர்கள் எல்லோரும் தயவு செய்து இவ்வறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக் கொண்டு, இக் கலைவிழா நிகழ்வில் பங்கு பற்ற விரும்புபவர்கள் உங்களது பெயர் பதிவுகளை வரும் 15.02.2019 இற்குள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அது சம்பந்தமான தொடர்புகளுக்கு கீழ் வரும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-

077 254 6157, 076 986 0367 (C-5305)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் சட்ட ஆலோசனை வழங்குநர்களை பதிவு செய்தல் 2019

சபையானது 2019 ஆண்டிற்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்கு சட்ட ஆலோசகர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

வழங்குநர்கள் விண்ணப்பங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 28.01.2019 ஆம் திகதி தொடக்கம் 10.02.2019 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ. 1000.00 (VAT நீங்கலாக) ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் **"சட்ட ஆலோசனை வழங்கலுக்கான விண்ணப்பம் 2019"** எனக் குறிப்பிட்டு **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 11.02.2019 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.'

க. தர்சன்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(C-530)

## 80ஆவது பிறந்த நாளும் 3ஆம் ஆண்டு நினைவலைகளும்



### அமரர் வைத்திய கலாநிதி தெய்வேந்திரம்

நீங்கள் மறைந்து ஆண்டுகள்
மூன்று சென்றாலும்
செய்த சேவைகள் எங்கள் மனதில்
கனதியாக நிற்கின்றது.
சிரித்த முகத்துடன் ஒளி வீசிக்கொண்டே
இருக்கின்றீர்கள்.
குடும்பங்களுக்கு உயிர் கொடுத்த உத்தமர்
வைத்திய கலாநிதி தெய்வேந்திரம் ஐயாவின்
ஜனன தினத்தை நினைவு கூருகின்றோம்.
ஐயா பங்குனி உத்தர நன்னாளில்
மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்களுடன்

(7280)

**யாழ்.மாநகர சபை குடும்ப நல உதவியாளர்கள், மருந்தாளர்கள்.**

# புதிய அரசியலமைப்பு மூலமே தீர்வு!

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்து கூட்டமைப்பிற்கு சபாநாயகர் விளக்கம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பின் ஊடாகவே தீர்வு காண முடியும் என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.



எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்து முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் கேள்வி எழுப்பியிருந்த நிலையில் அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே சபாநாயகர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வுகள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை கூடியது.

இதன்போது, எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்து சபாநாயகர் இதுவரை விளக்கமளிக்கவில்லை என சம்பந்தன் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாகத் திகழ முடியாது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவராக ஜனாதிபதி காணப்படுகின்ற நிலையில், அக்கட்சியின் உறுப்பினர் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட முடியாது.

எதிர்க்கட்சியாக கணிக்கப்படும் ஒரு கட்சி இரண்டாவது பெரும்பான்மை கட்சியாக திகழ வேண்டியதுடன், அதிலுள்ள எவரும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கக் கூடாது.

இவ் வாறானதொரு நிலையில் அரசியலமைப்பை வைத்துக் கொண்டு சிறுபான்மை மக்களும், சிறுபான்மை அரசியல் கட்சிகளும் பிழையாக வழிநடத்தப்படக்கூடாது. சிறுபான்மையினரின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்" எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இது தொடர்பான தெளிவுபடுத்தலை வழங்கிய சபாநாயகர், "ஐ.ம.சு. கூட்டமைப்பின் செயலாளரின் வேண்டுகோளுக்கு அமைய இன்றி பெரும்பான்மை அடிப்படையிலேயே மகிந்த எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

கடந்த டிசெம்பர் 18 ஆம் திகதி ஐ.ம.சு.கூ. தேசிய அரசாங்கத்திலிருந்து விலகி எதிர்க்கட்சியில் அமரத் தீர்மானித்ததற்கமைய பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட எதிர்க்கட்சியாகக் கருதப்பட்டது.

ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையிலும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நியமனம் இடம்பெற்றது இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னர் முன்னாள் ஜனா திபதி டி.பி.விஜேதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க ஆட்சிக் காலங்களிலும் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர்.

இந் நிலையில், எதிர்க்கட்சி பதவி வகிக்க முடியாது என மகிந்தவுக்குக் கூறினால் அது அவரது உரிமையை உதாசீனப்படுத்துவதாக அமையும். அவர் எதிர்க்கட்சியில் இருக்கும் அதிகாரத்தை நாம் மீற முடியாது. எனவே, புதிய அரசியலமைப்பின் மூலமே இப்பிரச்சினைக் குத் தீர்வு காண முடியும்" எனத் தெரிவித்தார். (இ-7)

### "தூய்மையான தேசவிரோத செயற்பாடு"

## அரசியல்வாதிகள் பொதுச்சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ததாக சஜித் புகார்



(கொழும்பு)

பொதுச்சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்து, கடந்த காலங்களில் தூய்மையான தேசவிரோத செயற்பாடு மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில், நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, மேலும் தெரிவித்த அவர், "கடந்த காலங்களில் அரச சொத்துக்கள் எவ்வாறு பங்கிடப்பட்டன என எம் அனைவருக்கும் தெரியும்.

இந்தச் சொத்துக்கள் பொது மக்களுக்கன்றி, அரசியல்வாதிகளுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதனை நாம் நிரூபித்துக்காட்டியுள்ளோம். அதற்கான சாட்சிகளும் இருக்கின்றன. வீட்டுத்திட்டங்கள் எல்லாம் மக்களுக்காகவன்றி, அமைச்சர்களின் உறவுகளுக்கே வழங்கப்பட்டன.


இவ்வாறானதொரு கலாசாரமே கடந்த காலங்களில் நாட்டில் நீடித்திருந்தது.

இவ்வாறான செயற்பாடுகளானது தூய்மையான தேச விரோதம் என்றே நான் கருதுகிறேன்.

மக்களின் நிதிதான் இதற்காகப்பயன்படுகிறது எனவே, இதன் பயன் மக்களைத்தான் சென்றடையவேண்டுமே ஒழிய ஏனைய தரப்பினருக்கு அல்ல" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான நடவடிக்கைகள் மீள் பரிசீலனை

### வெளிவிவகார அமைச்சர் மாரப்பன கோரிக்கை



(கொழும்பு)

பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக அந்நாட்டு நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மீள் பரிசீலனைக்கு உட்படுத்துமாறு வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரித்தானியா வாழ் தமிழர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக வெஸ்ட் மினிஸ்டர் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான நடவடிக்கைகளை மீள் பரிசீலனைக்கு உட்படுத்துமாறு இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரின் ஊடாக பிரித்தானிய நீதிமன்றத்தில் அறிவிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ தரப்பு நியாயங்களை ஆதாரங்களுடன் வழங்குமாறு திலக் மாரப்பனவிடம், பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கோரியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## இராணுவத்தளம் அமைக்க அமெரிக்காவுக்கு அவசியமில்லை

### அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இராணுவத் தளம் அமைப்பதற்கான அவசியம் இல்லை. இதனை அமெரிக்காவும் உறுதிப்படுத்தியுள்ளது என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமெரிக்க இராணுவ முகாம் அமைக்கப்படின் அது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என நடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் எச்சரித்தார்.

அத்துடன், இது தொடர்பாக முழுமையான தெளிவுபடுத்தல் அவசியம் என்றும் மன்றை கோரியிருந்தார்.



இந்நிலையில், அவரது குற்றச்சாட்டு தொடர்பாக பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அமெரிக்காவிற்கும், இலங்கைக்கும் இடையே சிறந்த இருதரப்பு உறவு காணப்படுகிறது. நாம் சர்வதேச சட்டங்களைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளோம். இந்நிலையில், இலங்கையில் அமெரிக்க இராணுவத்தளமொன்றை அமைப்பதற்கான எவ்வித விருப்பமும் இல்லை.

அதுவும் கிழக்கு மாகாணத்தில் இராணுவத் தளம் அமைப்பதற்கான அவசியம் இல்லை. அவ்வாறானதொரு கருத்தை நாம் வெளியிடவில்லை. அமெரிக்கத் தூதரகமும் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

எனவே, இவ்வாறான விடயங்கள் குறித்து உரையாற்றுவதற்கு முன்னர் அது தொடர்பாக தெளிவடைய வேண்டியது அவசியம்" எனத் தெரிவித்தார். (இ-7)

## அமெரிக்க இராணுவத்தளம் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### நாடாளுமன்றில் டக்ளஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் அமெரிக்க இராணுவத் தளம் அமைக்கப்படின் அது நாட்டின் இறையாண்மைக்கும், தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையும் என, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை கூடிய நாடாளுமன்ற அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



"இராணுவத் தளமொன்றை ஸ்தாபிப்பது தொடர்பாக அமெரிக்கத் தூதரகமும், இலங்கை அரசாங்கமும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதுவும் அமெரிக்க இராணுவ முகாமை கிழக்கில் திருகோணமலையில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதில்உண்மைத்தன்மை இருப்பின், அது நாட்டின் இறையாண்மைக்கும், தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையும். எனவே இது தொடர்பான முழுமையான தெளிவுபடுத்தல் அவசியம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்தியா – நியூசிலாந்து இரண்டாவது போட்டி இன்று

இந்தியா- நியூசிலாந்து அணிகள் மோதும் 2ஆவது ஒருநாள் போட்டி இன்று மவுண்ட் மன்கன்யில் நடக்கிறது. இப்போட்டி இந்திய நேரப் படி காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இந்திய கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. 5 போட்டி கொண்ட ஒருநாள் தொடரில் நேப்பியரில் நடந்த முதல் ஆட்டத்தில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் இந்தியா 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இரு அணிகள் மோதும் 2ஆவது ஒருநாள் போட்டி இன்று மவுண்ட் மன்கன்யில் நடக்கிறது. இப்போட்டி இந்திய நேரப்படி காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இந்திய அணி துடுப்பாட்டத்தில் ஷிகர் தவான், ரோகித் சர்மா, அணித்தலைவர் விராட் ஹோலி, அம்பதி ராயுடு, கேதர் ஜாதவ், டோனி ஆகியோர் உள்ளனர்.

பந்து வீச்சில் முகமது சமி, சாகல், குல்தீப் யாதவ் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். மேலும் புவனேஸ்வர்குமார், சகலதுறை வீரர் விஜய் சங்கர் ஆகியோரும் உள்ளனர்.

பெண்கள் குறித்து சர்ச்சை கருத்து கூறி இடைநீக்கம் செய்யப்பட்ட ஹர்த்திக் பாண்ட்யா, லோகேஷ் ராகுல் மீதான நடவடிக்கையை கிரிக்கெட் வாரியம் ரத்து செய்துள்ளது.

இதையடுத்து ஹர்த்திக் பாண்ட்யா நியூசிலாந்துக்கு புறப்பட்டு இந்திய அணியுடன் இணைகிறார். ஆனால் இன்றைய போட்டியில் அவருக்கு வாய்ப்பு கிடைக்குமா? என்பது சந்தேகம்தான்.

முதல் போட்டியில் வெற்றி பெற்றதால் இந்தியா நம்பிக்கையுடன் களம் இறங்கும். ஆனால் நியூசிலாந்து திடீரென எழுச்சி பெற கூடிய அணியாகும். இதனால் இந்தியா கவனமுடன் விளையாட வேண்டியது அவசியம். இன்றைய போட்டியிலும் இந்தியாவின் அதிரடி தொடருமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து முதல் ஆட்டத்தில் தோற்றதால் நெருக்கடியில் உள்ளது. அந்த அணி துடுப்பாட்டத்தில் வில்லியம்சனை தவிர மற்ற வீரர்கள் முதல் ஆட்டத்தில் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்கள்.

இதனை சரி செய்ய அந்த அணி வீரர்கள் முயற்சிப்பார்கள். இன்றைய ஆட்டத்தில் தோற்றால் நியூசிலாந்து கடும் நெருக்கடிக்கு தள்ளப்படும். இதனால் வெற்றி பெற கடினமாக போராடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம். (வ-து)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்கான விதிகளின்படி யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகிய செல்வி. பரீன் ஹஸ்ஸானா அப்துல் சமீயூ ஆகிய நான் 2018.06.30ஆம் திகதிய 2077/55 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என் மீது பாரிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் துணைவிதிப்பிரிவு 23க்கு அமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவிற்கான கிளை பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- 'கிளைப் பொதுச்சபை கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கில் ஒரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (9) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையில் கோருவார். இவ் ஒன்பது உறுப்பினர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (2) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (9) ஒன்பது பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக் கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டுமூலம் தெரிவு மேற்கொள்ளப் படும். தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்துமூலம் அறிவிப்பார்

## கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பானவிபரம் (27.01.2019)

**கூட்டம் நடைபெறும் திகதி :- 27.01.2019 ஞாயிற்றுக்கிழமை** **நேரம் :- முற்பகல் 10.00 மணி**

| கிளை இல | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் பெயர்கள் |
|---|---|---|---|
| 3 | சித்தன்கேணி | யா/ஸ்ரீகணேசவித்தியாலயம், சித்தன்கேணி | திரு.சந்திரலிங்கம் சுவர்ணன் |
| 4 | பனிப்புலம் | கிளை 04 பனிப்புலம், கிளைக்கட்டடம் | திரு.கந்தசாமி சசிகரன் |
| 5 | பண்ணாகம் | கிளை 05 பண்ணாகம், கிளைக்கட்டடம் | திரு.இராசரத்தினம் வேல்குமார் |
| 6 | சுழிபுரம் வட கிழக்கு | வீரபத்திர முன்பள்ளி, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் | திரு.பாக்கியராசா குருபரன் |
| 7 | சுழிபுரம் மத்தி | மீளளிப்புகடன் திட்டநிறுவனம், கிளை 07ற்கு அருகாமை | திரு.விநாசித்தம்பி சிவபாலன் |
| 8 | சுழிபுரம் குகன் | கலைமகள் சனசமூகநிலையம், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் | திரு.நாகமுத்து ஜெயவதனன் |
| 9 | சுழிபுரம் மேற்கு | பாரதிகலை மன்றம், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் | திரு.கணபதிப்பிள்ளை செந்தூரன் |
| 10 | பொன்னாலை | கலாச்சார மண்டபம், பொன்னாலை | திரு.மயில்வாகனம் கபிலன் |
| 11 | மூளாய் | கிளை 11 மூளாய், கிளைக்கட்டடம் | திரு.வடிவேல் கிருஷாந் |
| 12 | தொல்புரம் | கிளை 12 தொல்புரம், கிளைக்கட்டடம் | திரு.சிவலிங்கம் பிரதீபன் |
| 12A | நெல்லியான் | கிளை 12 தொல்புரம், கிளைக்கட்டடம் | திருமதி.உதயகுமார் சுபாசினி |
| 14 | தொல்புரம் மத்தி | தொல்புரம் மத்தி சனசமூகநிலையம், சுழிபுரம் | திரு.வல்லிபுரம் நிதர்ஷன் |
| 15 | தொல்புரம் கிழக்கு | விக்னேஸ்வரா சனசமூகநிலையம், தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் | திரு.ஜெயபாலன் சதீஸ் |
| 16 | வட்டுபிளவத்தை | கற்பகச்சோலைசனசமூகநிலையம்வட்டுவடக்கு,சித்தன்கேணி | திரு.நாகலிங்கம் குமணதாசன் |
| 17 | வட்டுசிவன் | கிளை 17 வட்டுசிவன், கிளைக்கட்டடம் | திரு.கணேஸ் சுரேஸ்பாபா |
| 18 | வட்டுகிழக்கு | கிளை 17 வட்டுசிவன், கிளைக்கட்டடம் | திரு.கனகேந்திரம் உமைநேசன் |
| 19 | வட்டு மூளாய் | ஸ்ரீகணேச வாசிகசாலை மூளாய் வீதி வட்டுக்கோட்டை | திரு.சோமசுந்தரம் தங்கேஸ்வரன் |
| 20 | வட்டு மேற்கு | மூன்றாம் பனைஐக்கியநாயண சங்கமண்டபம், வட்டுக்கோட்டை | திரு.பாலரத்தினம் சிவபாலன் |
| 21 | வட்டுக்கோட்டை | மூன்றாம் பனைஐக்கியநாயண சங்கமண்டபம், வட்டுக்கோட்டை | திரு.இராமநாதன் சுரேஸ் |
| 22 | அராலி மேற்கு வடக்கு | கிளை 22 அராலி மேற்கு வடக்கு, கிளைக்கட்டடம் | திரு.சபாரத்தினம் அருள்நாதன் |
| 23 | அராலி வடக்கு | யா/அராலி வடக்கு அ.மி.த.க. பாடசாலை, வட்டுக்கோட்டை | திரு.ஐயாத்துரை மயூரன் |
| 24 | அராலி தெற்கு கிழக்கு | கிளை 24 அராலி தெற்கு கிழக்கு, கிளைக்கட்டடம் | திரு.சுந்தரலிங்கம் அகிலன் |
| 25 | அராலி விக்னேஸ்வரா | கிராம அபிவிருத்திச் சங்கம் அராலிதெற்கு, வட்டுக்கோட்டை | திரு.தங்கராசா கண்ணதாசன் |
| 26 | அராலி ஐயனார் | கலைமகள்சனசமூகநிலையம், அராலிகிழக்கு, வட்டுக்கோட்டை | திரு.இராசையா உதயகுமார் |
| 27 | செட்டியாமடம் | அராலி வடக்கு சனசமூகநிலையம் , வட்டுக்கோட்டை | திரு.ஜோசப் ஜெகதாஸ் |
| 28 | துணவி | யா/சின்னம்மா வித்தியாசாலை சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு.இரத்தினசிங்கம் கஜேந்திரன் |
| 29 | சங்கரத்தை துணவி | யா/சின்னம்மா வித்தியாசாலை சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு.கணேசராசா பரநிருபன் |
| 30 | சங்கானை கிழக்கு மத்தி | நலன்புரிச்சங்க வாசிகசாலை, சங்கானை | திரு.கந்தசாமி பிரதீபன் |
| 31 | நிற்சாமம் | நிற்சாமம், சரஸ்வதி சனசமூக நிலையம் | திரு.அரியரட்ணம் வசீகரன் |
| 32 | சிலம்புப்புளியடி | யா/சிவப்பிரகாசா மகாவித்தியாலயம் சங்கானை | செல்வி.லாவண்யா சத்தியசீலன் |
| 33 | சங்கானை கிழக்கு | யா/சிவப்பிரகாசா மகாவித்தியாலயம் சங்கானை | திருமதி.சுஜிவன் கஸ்தூரி |
| 34 | தொல்புரம் மேற்கு | கிளை 34 தொல்புரம் மேற்கு, கிளைக்கட்டடம் | திரு.செகராசா பகீதரன் |

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்குச் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் எவரேனும் மேற்குறிப்பிட்ட தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அறிவித்தல் கிடைக்காது விடினும் குறித்த கூட்டத்தில் இந்த அறிவித்தலை அடிப்படையாக கொண்டு சமுகமளிக்க முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**கூ.அ.உ ஆணையாளர் பணிமனை**
**857, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**09.01.2019**

**ஒப்பம் செல்வி. பரீன் ஹஸ்ஸானா அப்துல் சமீயூ**
**கூட்டுறவு அபிவிருத்தி உ.தவி ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்.**

# இறுதிப் போட்டியில் ஒசாகா- கிவிட்டோவா
## இன்று மோதல்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் ஜப்பானின் ஒசாகா, செக்குடியரசின் கிவிட்டோவா மோது கின்றனர்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில், நடப்பு ஆண்டின் முதலாவது கிராண்ட் ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் உலகின் 'நம்பர்-4' ஜப்பானின் நவோமி ஒசாகா, 8ஆவது இடத்தில் உள்ள செக்குடியரசின் கரோலினா பிலிஸ்கோவா மோதினர். முதல் செட்டை ஒசாகா 6:2 எனக் கைப்பற்றினார். பின் எழுச்சி கண்ட பிலிஸ்கோவா, 2ஆவது செட்டை 6:4 என தன்வசப்படுத்தி பதிலடி தந்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3ஆவது செட்டில் சுதாரித்துக் கொண்ட ஒசாகா 6:4 என வென்றார்.

ஒரு மணி நேரம், 53 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய ஒசாகா 6:2, 4:6, 6:4 என்ற கணக்கில் வெற்றி பெற்று அவுஸ்திரேலிய ஓபனில் முதன்முறையாக இறுதிக்கு முன்னேறினார். இதற்கு முன், கடந்த ஆண்டு 4ஆவது சுற்றோடு திரும்பினார். தவிர இது, இவரது 2ஆவது கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டி. கடந்த ஆண்டு நியூயோர்க்கில் நடந்த யு.எஸ்., ஓபனில் இறுதிப்போட்டிக்கு நுழைந்த இவர்கிண்ணம் வென்றார்.

**கிவிட்டோவா அசத்தல்**

மற்றெரு அரையிறுதியில் உலகின் 'நம்பர்-6' செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, 35ஆவது இடத்தில் உள்ள அமெரிக்காவின் டேனியல் கோலின்ஸ் மோதினர். ஒரு மணி நேரம், 34 நிமிடம் நீடித்த போட்டியில் அபாரமாக ஆடிய கிவிட்டோவா 7:6, 6:0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று முதன்முறையாக அவுஸ்திரேலிய ஓபனில் இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார். இதற்கு முன், 2012இல் அரையிறுதியோடு திரும்பினார். தவிர இது, இவரது 3ஆவது கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டி. ஏற்கனவே 2 முறை (2011, 2014) விம்பிள்டனில் இறுதிப்போட்டி வரை சென்று கிண்ணம் வென்றிருந்தார். இதனையடுத்து இன்றைய இறுதிப்போட்டியில் ஒசாகா, கிவிட்டோவா மோதுகின்றனர்.

# காணி சுவீகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் அளவீட்டுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தம்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுங்குளம் பகுதியிலுள்ள 300 பரப்புடைய தனியார் காணியை சுவீகரிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட காணி அளவிடும் நடவடிக்கை காணி உரிமையாளர்களின் எதிர்ப்பால் நேற்று தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவின் கீழ் நெடுங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள சுமார் 300 பரப்பு காணி பல காலமாக உரிமம் கோரப்படாமல் இருந்துள்ளது. குறித்த காணி பிரதேச செயலரால் அடையாளப்படுத்தப்பட்டு அந்த இடத்திலே முதற்கட்டமாக புதிய குடியேற்றத் திட்டமொன்று அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் குறித்த காணிகயைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் அந்த 300 பரப்புக் காணியில் தன்னுடைய சுமார் 80 பரப்புக் காணி இருப்பதாக பெண் ஒருவர் யாழ்.அரச அதிபரிடம் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார். அதனடிப்படையில் அங்குள்ள காணிகளுக்கு உரிமையாளர்கள் இருந்தால் அதற்கு நட்ட ஈடு வழங்குவதாக அரச அதிபர் தெரிவித்தார். ஆயினும் அந்த 80 பரப்புக் காணியின் உரிமையாளர் தனக்கு நட்ட ஈடுகள் எவையும் வேண்டாம் என்றும் தன்னுடைய காணியே தனக்கு வேண்டுமெனக் கேட்டதற் கமைய அவருடைய காணியை விடுத்து ஏனைய 220 பரப்புக் காணியை சுவீகரித்து அங்கு புதிய குடியேற்றத் திட்டமொன்று மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு நேற்று நில அளவீடு செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த காணியின் ஏனைய உரிமையாளர்கள் அனைவரும் நேற்று காலை அப்பகுதியில் ஒன்று கூடி தமது காணியை அளவீடு செய்ய வேண்டாம்என எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனவே நில அளவை மேற்கொள்ள வந்த அதிகாரிகள் காணி அளப்பதை நிறுத்திவிட்டு, பிரதேச செயலாளருக்கு மகஜர் ஒன்றினைத் தருமாறும் கோரியிருந்தனர். அதனடிப்படையில் காணி உரிமையாளர்கள் குறித்த சுவீகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கடிதம் ஒன்று எழுதி அதில் கையொப்பம் இட்டு அதிகாரிகளிடம் கையளித்தனர்.

இந்த போராட்டத்தில், யாழ்.மாநகர பிரதி முதல்வர் மற்றும் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் மாநகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு, ஆதரவு வழங்கியிருந்தனர். (இ-9-101)

## அங்கொடை லொக்காவின் சகா 'சுரத்தல்' கேரள கஞ்சாவுடன் கைது

(முல்லேரியா)

பாதாள உலகக்குழு தலைவர் அங்கொடை லொக்காவின் சகா என அறியப்படும் "சுரத்தல்" எனப்படுபவர் ஒரு கிலோ கிராமிற்கும் அதிக பெறுமதியான கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லேரியா - உடமுல்லை பகுதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் திட்டமிடப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் 31 வயதுடைய இல .62-சீ , மல்கமை பாதை, முல்லேரியா பகுதியைச் சேர்ந்த கருகொடை ஆராச்சிலாகே அறுன சமீரப்பெரேரா எனப்படும் சுரத்தல் என அறியப்படுபவரென விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. அவரிடமிருந்து ஒரு கிலோ 15 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)


## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு

### அமரர் தியாகராஜா-கதிர்காமத்தம்பி

தாயின் மடியில் 1932 - 01 - 04

சிவனடியில் 2019 - 01 - 06



கடந்த 06.01.2019 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் **தியாகராஜா-கதிர்காமத்தம்பி** அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் (26.01.2019) இன்று சனிக்கிழமை அதி காலை 6 மணியவில் கீரிமலையில் உள்ள அந்தியேட்டி மடத்திலும் சபிண்டீகரண நிகழ்வு 27.01.2019 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

பிரதான வீதி,
பருத்தித்துறை.
021 226 4920, 077 129 8201

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(7248)



## ஓராண்டு நினைவு நாள்

### அமரர் செல்லர்-சிவராசா (சுட்டி)

தோற்றம்: 17.10.1957 மறைவு: 05.02.2018



என்றும் எம்முடனே
சிரித்து மகிழ்ந்த செல்வம்
இன்று எமைத் தவிக்கவிட்டு
எங்கே சென்றதுவோ
ஏங்கித் தவிக்கின்றோம்
உன் அன்பு முகம் காணாமல்

லோட்டன் மில் ஒழுங்கை,
நவாலி வடக்கு, மானிப்பாய். (7257)

தகவல்: மனைவி, பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளை.


## இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மேடம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்:** பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், அருமையான நாள், பூர்வீகச் சொத்துக்களால் அனுகூலமுண்டு.

**மிதுனம்:** பொதுக் காரியங்களில் நாட்டம் செல்லும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கும்பம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பிரயாண பயமுண்டு.

**இராசி பலன்** — கிரகநிலை, சந்திராஷ்டமம்

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| | | | ராகு |
| கேது, புத, சூரி | | | |
| சனி | குரு, சுக் | | சந் |

26.01.2019
தை 12, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 10.59 மணிக்கு
அத்தம் முன்னிரவு 9.23 மணிவரை
சுபநேரம் 3.36-5.06 மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை
வளவன்

**கடகம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், போசன சுகமுண்டு, நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவிற்கு வரலாம்.

**மகரம்:** ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், ரோக பயமுண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பேச்சில் இனிமை தென்படும்.

**தனுசு:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் ரீதியிலாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும், கட்டடப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், சகோதர ஒற்றுமை கூடும், விருந்தினர் வருகையுண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**துலாம்:** ஒரு சில வேலைகளுக்கு நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், வேலைச்சுமை அதிகரிக்கலாம், சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், சிந்தனை ஆற்றால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு.



கல்வி அமைச்சின் அனுசரணையுடன் ஜனாதிபதி செயலகத்தின் பணிப்பின் பேரில் போதைப் பொருள் தடுப்பு வாரத்தின் 3 ஆம் நாள் நிகழ்வில் பொலிஸாரின் பங்களிப்புடன் யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் நடத்திய போதைப் பொருள் தடை செய்வதற்கான பேரணியில் கல்லூரி அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்களுடன் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் கலந்து கொண்டார்.

# தெரிவுப் பரீட்சை நாளை

(யாழ்ப்பாணம்)

வியாபார முகாமைத்துவமாணி (வெளிவாரி)-2017-2018 பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான தெரிவுப் பரீட்சை நாளை 27.01.2019 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பான அனுமதி அட்டைகள் ஏற்கனவே தபால் மூலம் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும் என திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையப் பிரதிப் பதிவாளர் து. அதியமான் அறிவித்துள்ளார். (இ






யாழ்.கோண்டாவில் இராமகிருஸ்ணா மகா வித்தியாலயத்தில் போதைப் பொருள் எதிர்ப்புப் பேரணி நேற்றுக் காலை இடம்பெற்றது.

# வகுப்பறைத் தொகுதி திறப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் அமைக்கப்பட்டு வந்த வகுப்பறைக் கட்டடத்தொகுதித் திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும்.

பாடசாலை அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித்சிங் சந்து, வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-30)

# பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும்படி குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவையின் 431 (2) ன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

தொ.இல-01,வழக்கு இல. MC/791/MT/18, சான்றுப்பொருள் இல.-PR/29518, மறுதவணை-04.03.2019, வாகன இல.-NPWT 0237 இலக்க மோட்டார் சைக்கிள்-01, தொ.இல-02, வழக்கு இல MC/2082/PC/18 (BR/570/PC/18),சான்றுப்பொருள் இல.-PR/633/18, மறுதவணை-04.03.2019, வாகன இல.-69968453 இலக்க லூமாலா வர்க்க துவிச்சக்கர வண்டி-01, தொ.இல-03,வழக்கு இல. MC/1569/PC/17 (BR/1396/PC/16),சான்றுப் பொருள் இல.-PR/612/16 மறுதவணை-04.03.2019, வாகன இல-69825168 இலக்க துவிச்சக்கரவண்டி-01 மன்றின் கட்டளைப் படி பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

# தமிழ்மொழிமூல பாடசாலைகளுக்கு 249 ஆசிரியர்கள் இன்று நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக வடமாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவினால் 2018.10.08 ஆம் திகதி கோரப்பட்ட ஆட்சேர்ப்பு விளம்பரத்திற்கு அமைவாக விண்ணப்பித்தவர்களில் இருந்து தகைமை பெற்றோர் 160 பேர் ஆசிரியர் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 06.08.2018 இல் இருந்து நடைமுறைக்குவரும் வகையில் வழங்கப்பட்ட கலைப் பட்டதாரிகளில் காத்திருப்போர் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள 89 பட்டதாரிகள் உள்ளடங்கலாக 249 பட்டதாரிகளுக்கான ஆசிரியர் பதவிக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் வைபவம் எதிர்வரும் 2019.01.26 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்/வேம்படி பெண்கள் பாடசாலையில் நடைபெறும். எனவே தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் அன்றையதினம் காலை 8.30 மணிக்கு யாழ்/வேம்படி பெண்கள் பாடசாலைக்கு தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணத்துடன் (தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு) அறிக்கையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

எனவே தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள்/பெண்கள் இள வர்ண சாறியுடனும்- முஸ்லிம் பெண்கள் தமக்குரித்தான கலாசார உடைகளுடன் சமுகமளிக்கலாம்.ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சட்டையும் (சேட்) அணிவதுடன் கழுத்துப்பட்டி (Tie) அணிதல் வேண்டும். குறித்த திகதியில் தவறாது யாழ்/வேம்படி பெண்கள் பாடசாலைக்கு சமுகமளித்து தங்களுக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் பெயர் விபரங்களை வட மாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www. edumin.np.gov.lk எனும் முகவரியில் பார்வையிட முடியும்என கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-7)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி.எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை பொறியியலாளர் வி. உமாபதி (ஜே.பி,பழைய மாணவர் சங்கப் பொருளாளர்),கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் கே.சிவதாசன் (பழைய மாணவர்) ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி. ல.முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.விஜயகலா மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கௌரவ விருந்தினராக சமூகதிலகம் லயன் அ.கிருபாகரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-30)

# கீழ் பாலியாற்று வடிநிலத்திலிருந்து யாழ்.குடாநாட்டுக்கான குடிநீர் விநியோகம்

## ஆளுநருக்கு அவைத் தலைவர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்ட நீர் விநியோகத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தி குடாநாட்டுக்கான நீர் விநியோகத்தை துரிதகதியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுக்கு வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பிய கடிதத்தில், மிக அண்மித்த காலத்தில் யாழ். குடாநாட்டுக்கான குடிநீர் விநியோகம் என்ற விடயம் முக்கியபேசு பொருளாகியுள்ளது.

கடந்த 6 தசாப்தங்களுக்கு மேலாகவே இது ஒரு பேசு பொருளாகவே இருந்து வந்தாலும் யாழ். குடாநாட்டுக்கான நீர் விநியோகத் தேவை பூர்த்தியாக்கப்படாத ஒன்றாகவுள்ளது.

எனினும் கடந்த 2005/2006 ஆம் ஆண்டுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நிறைவேற்ற எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர்விநியோகத் திட்டமும் கிளிநொச்சி கமக்காரர் அமைப்புக்களின் ஆட்சேபனைகள் காரணமாக தடைப்பட்டு நிற்கின்றது.

இந்த நிலையில் கடந்த 26.02.2018 ஆம் திகதி முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற Cascade system தொடர்பான கலந்துரையாடலில் வருடம் பூராகவும் கடலுக்கு சென்றடையும் நீரை தடுத்து திருப்பி ஒரு நீர் நிலை (Reservoir) உருவாக்குவதன் மூலம் எதுவித எதிர்ப்புக்களும் தடைகளும் இன்றி குடாநாட்டுக்கான நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்ற கருத்து எம்மால் முன்வைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதற்கமைய வேண்டிய பூர்வாங்க ஆய்வுகள் பிரதம செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர் பொறியியல் சேவைகள் ஆகியோரின் வழிகாட்டலில் மாகாண நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்டது.

இவை தொடர்பான அறிக்கை பிரதமர் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஆராயப்பட்டு ஏற்று அங்கீகரிக்கப்பட்டதுடன் இத்திட்டத்தின் மேல் நடவடிக்கைக்கான சாத்தியக்கூற்று ஆய்வுக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் ஒப்புதல் தெரிவித்து மேல் நடவடிக்கை தொடர்கின்றது.

இந்தத் திட்டம் தொடர்பான பிரேரணை 04.10.2018 ஆம் திகதி நடைபெற்ற வடமாகாண சபையின் 133 ஆவது அமர்வில் எம்மால் முன்மொழியப்பட்டு முதலமைச்சரால் வழிமொழியப்பட்டு ஏகமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ் விடயங்களை முழுமையாகத் தெரிவுபடுத்தும் என்று நம்பப்படுகின்றது. இந்தத் திட்டம் சம்பந்தமான ஏனைய பல விடயங்களும் இங்கே விவாதிக்கப்பட்டமையையும் காணலாம். வட மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு குடிநீர் விநியோகத்திட்டம் இது மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே ஏனைய திட்டங்கள் சந்தித்த தடங்கல்கள் ஏதுமில்லாத வட மாகாண சபையால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டத்தை துரிதமாக முன்னகர்த்தி பூர்த்தியாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-9)

# ஈ.பி.ஆர்.எல்.எப்.பிராந்திய மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கியதான பிராந்திய மாநாடு அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கட்சியின் அரசியல் பீட உறுப்பினர் கலாபூஷணம் க.அருந்தவராசா தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் விசேட விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

மாநாட்டில் சிறப்பு விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், அக்கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன், கட்சியின் உப தலைவரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான இரா.துரைரட்ணம், கட்சியின் பொருளாரும் மன்னார் நகர சபையின் உறுப்பினருமான சம்பூரணம் இரட்ணசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

மாநாட்டில் வரவேற்புரையை கட்சியின் வலி. கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் இராசதுரை கோமதியும், தலைமையுரையை கட்சியின் அரசியல் பீட உறுப்பினர் க.அருந்தவராசாவும், பிராந்திய அறிக்கையை கட்சியின் உப செயலாளரும் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சருமான கலாநிதி சர்வவேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (இ-7)

# நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு முதலாம் திகதி முதல் புதிய நடைமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளில் அனுமதிக்கப்படும் நோயா ளர்களுக்கு ஏற்படக் கூடிய தொற்றுக்கள், விடுதியில் கடமையாற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்களின் இடையூறற்ற கடமையை மேற்கொள்வது, வைத்தியசாலை வளாகத்தில் ஏற்படும் சன நெருக்கடியை குறைப்பது ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் தொடர்பான தற்போதைய நடைமுறை எதிர்வரும் 01.02. 2019 ஆம் திகதி முதல் மாற்றப்படவுள்ளது.

இதன் அடிப்படையில் நோயாளர் ஒருவர் விடுதியில் அனுமதிக்கும் சந்தர்ப்பத்தில் அவருக்கு வெளி நோயாளர் பிரிவில் விடுதியில் அனுமதியளிக்கும் பத்திரத்தோடு இரண்டு பார்வையாளர் அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்படும். அவ்வனுமதிப் பத்திரங்களுடன் குறிப்பிட்ட ஒரு நோயாளியுடன் ஒரு சமயத்தில் இரண்டு பார்வையாளர் மாத்திரமே பார்வையாளர் நேரத்தில் விடுதியில் அனுமதிக்கப்படுவர்.

காலை வேளைகளில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். நோயாளருக்கு உணவு வழங்க மாத்திரம் ஒருவர் காலை 6 மணி முதல் 6.30 மணி வரை அனுமதிக்கப்படுவர்.

பார்வையாளர் நேரம்:

மதியம்- நண்பகல் 12.00 மணி- பிற்பகல் 1.00 மணி

மாலை- பிற்பகல் 5.00- பிற்பகல் 06.00 மணி என யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார். (இ)

# போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்படும்

## பொலிஸ் பேச்சாளர் ருவான் தெரிவிப்பு




(கொழும்பு)

முக்கிய போதைப்பொருள் கடத்தல்காரர்கள் 24 பேர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள முக்கிய போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனவரி மாதத்தில் 107 கிலோ ஹெரோயின்போதைப் பொருட்களுடன் 2895 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



போதைவஸ்து ஒழிப்பு வார இறுதி நாள் நிகழ்வு கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையில் செயற்பட்டு மகிழ்வோம் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை முன்றலில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக அ.ஜெயரட்ணம் (பழைய மாணவர் லண்டன்), சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் கு.சிவகுமார், வலயப் பிரதிநிதி ஆசிரிய ஆலோசகர் ந.புலன் சிறிந்திரன், வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர் இ.குணேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# இணங்கிய விடயங்களுக்கு மேலாக மாற்று விடயங்கள் 19 இல்-சாந்த

(கொழும்பு)

19 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் இரு தரப்பினரும் இணங்கிய விடயங்களுக்கு மேலாக மாற்று விடயங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார குற்றம்சாட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுக் காலை இடம் பெற்ற ஊடகசந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கணனி அறைத் திறப்பு விழா

ஜேர்மன் நம்பிக்கை ஒளி அமைப்பு அன்பளிப்பு செய்த கணனியை தும்பளை திருவள்ளுவர் சன சமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், சிக்கன கடனுதவிச் சங்கம், மாதர்சங்கம் ஆகியன இணைந்து நடைமுறைப்படுத்தும் கணனி அறைத் திறப்பு விழா நாளை 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர், ச.சுகிர்தனும், புலோலி பிரதேச சபைத் தவிசாளர் அ.தா.அரியகுமாரும் இணைந்து அறையைத் திறந்து வைப்பதோடு, தும்பளை நாவலடி சக்தியம்மன் ஆலய வீதியையும் திறந்து வைப்பர். (இ-5)

# பனை வெல்லத்துக்கு ஏன் மானியம் வழங்கவில்லை

## அரசிடம் விசனத்துடன் கேள்வி

(யாழ்ப்பாணம்)

கித்துள் வெல்லத்துக்கு மானியம் வழங்கும் அரசாங்கம் வடமாகாண பனை வெல்லத்துக்கு மானியம் வழங்கவில்லையென தெல்லிப்பழை பனை தென்னைக் கூட்டுறவு சமாசத்தின் தலைவர் நாகன் கணேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தை உள்ளடக்கி 4 ஆயிரம் தொழிலாளர்கள் இத்தொழிலில் நேரடியாக ஈடுபடுவதாகவும் ஏறக்குறைய 50 ஆயிரம் பேர் இத் தொழிலை நம்பி தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதாகவும் தெரிவித்தார்.

காலம் காலமாக தமது வாழ்வாதாரத் தொழிலாகவும் பரம்பரைத் தொழிலாகவும் கொண்டு வாழும் இம் மக்களுக்கு அரசாங்கமோ, அதிகாரிகளோ அவர்களின் தேவைகள் குறித்து ஆராயத் தயங்குவதாகவும் இம் மக்களை சமூகத்திலிருந்து ஓரங்கட்ட நினைப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற 90 ஆம் ஆண்டு இடம் பெயர்வுகளுக்கு முன் தெல்லிப்பழைப் பிரதேசத்தை உள்ளடக்கிய பகுதிகளில் 17 பனை தென்னை சமாசக் கிளைகள் காணப்பட்டதாகவும் தற்போது சேந்தான்குளம், சிற்றியம் புளியடி, கணேஸ்வரம் ஆகிய மூன்று பிரதேசங்களில் மட்டும் தமது சங்கக் கிளைகள் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

தமது உற்பத்திப் பொருட்கள் வெளிநாட்டு மக்களும் உள்நாட்டு மக்களும் விரும்பி உண்ணக் கூடிய வகையிலும் பருகக்கூடிய வகையில் பாதுகாப்பான வழிமுறைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் மதுபான உற்பத்தியை அதிகரிக்கும் அரசாங்கம் தமது பனை வெல்ல நீரை அதிகரிப்பதற்கு நடவடிக்கையெடுத்தால் உடல் நலத்துக்கு கேடற்ற பானத்தை சந்தைப்படுத்த முடியுமெனத் தெரிவித்ததோடு இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் பனை பதநீரை விரும்பி அருந்துவதாகவும் தெரிவித்தார்.

இவ் வருடம் இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளை நோக்காகக் கொண்டு பதநீர் உற்பத்தியை இரு மடங்காக அதிகரிக்க எண்ணியுள்ளதாகவும் சுற்றுலா மையங்களை அண்டியுள்ள பகுதிகளில் புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பானங்களை இறக்குமதி செய்யும் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் எமது உற்பத்திப் பொருட்களையும் சந்தைப்படுத்துவதற்கு உதவி செய்தால் எமது தொழிலை அழியாமல் வளர்க்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)



கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: 62 சூரிசெவ் 1இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:பொறியியல் பீடம்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/9159 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 47 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:B.Sc, Software Engineer<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி,அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/2039 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 36 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L, Manager<br>தொ.இ: B/9160 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா:14.25செவ் 2இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:B.Sc, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு,பட்டதாரி, Doctor,Engineer<br>தொ.இ: G/2041 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L, கப்பல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/9163 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 27 1/2 உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: சித்த மருத்துவத்துறை, வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/2047 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: பட்டதாரி Eng (Mechanical), விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/9164 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 24 3/4 உயரம்:160cm<br>தகைமை/தொழில்:நுண்கலைமாணி, ஆசிரியர் எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம்<br>தொ.இ: G/2057 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழில் ஆரம்பம்





(யாழ்ப்பாணம்)

சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்று யாழ். மாநகர சபை மைதானத்தில் ஆரம்பமாகியது.

பத்தாவது தடவையாக யாழில் நடத்தப்படும் மேற்படி கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து நூலகத்தில் இருந்து விருந்தினர்கள் ஊர்வலமாக மாநகர சபை முன்றலில் உள்ள கண்காட்சிக் கூடத்தை வந்தடைந்தனர். அதனைத் தொடர்ந்து யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த கண்காட்சியில் நிர்மாணம், விருந்தோம்பல், உணவு, பான வகை, பொதியிடல், மோட்டார் வாகனம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், நிதியியல் சேவைகள், ஆடையணி, விவசாயம், நுகர்வோர் பொருட்கள் எனப் பல வகையான பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இம்முறையும் இந்தியாவிலிருந்து வருகை தந்த வர்த்தகர்கள், தொழில் முயற்சியாளர்கள் கைத்தொழில் மற்றும் மருத்துவ கூடங்களை குறித்த கண்காட்சியில் அமைத்துள்ளனர்.

அத்துடன் இந்தக் கண்காட்சியில் சிறுவர்களுக்கு விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள இடம் மற்றும் கொண்டாட்ட நிகழ்வு, இலவச முக அலங்கார அழகுக் குறிப்புக்கள் மற்றும் ஆலோசனை, குலுக்கல் முறை பரிசுகள் என்பன விசேடமாக இடம்பெறவுள்ளன.

குறித்த கண்காட்சி நாளை 27 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ-9-89)

# மக்களுக்கு தோட்டங்களை பிரித்து வழங்க வேண்டும்

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



சிறுதேட்டத் தொழிலாளர்களைப் போன்று பெருந்தோட்ட மக்களுக்கும் தோட்டங்கள் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என விசேட அபிவிருத்தித் திட்டங்களுக்கான அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பெருந்தோட்ட மக்களின் சம்பளப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டும்.


ஆயிரம் ரூபா வழங்க முடியுமாக இருந்தால் சந்தோஷம். என்றாலும் நியாயமான சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

அதேபோன்று சிறு தோட்ட மக்களுக்கு அந்த தோட்டங்களில் சுயாதீனமாக செயற்பட முடியுமாக இருக்கின்றபோதும் பெருந்தோட்ட மக்களுக்கு அந்த உரிமை இல்லை.

அதனால் சிறுதோட்ட மக்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் சுதந்திரத்தை பெருந்தோட்ட மக்களுக்கும் வழங்குவதுடன் தேயிலை தோட்டங்களை பெருந்தோட்ட மக்களுக்கும் பிரித்து வழங்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

அத்துடன் கம்பனிகள் பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தை 625 ரூபாவாக வழங்க ஒத்துக்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது. இது போதுமானதாக இல்லை" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மதிய உணவில் மட்டத்தேள்!



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் வாங்கிய மதிய உணவுப் பொதியில் மட்டத்தேள் காணப்பட்டதாக வாடிக்கையாளர் ஒருவர் மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் முறைப்பாடு செய்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அருகில் உள்ள உணவகத்தில் வாடிக்கையாளர் ஒருவர் நேற்று மதிய உணவு கொள்வனவு செய்துள்ளார். பின்னர் தான் வேலை செய்யும் வங்கிக்கு சென்று உணவுப் பார்சலை பிரித்து பார்த்த போது, கறிகளுக்கு இடையே மட்டத்தேள் காணப்பட்டுள்ளது.

இதனால் அவர் வாடிக்கையாக செல்லும் அந்த உணவகத்திற்குச் சென்று உரிமையாளரிடம் முறையிட்டுள்ளார்.

எனினும் உணவக உரிமையாளர், வாடிக்கையாளரை உதாசீனம் செய்ததுடன் உணவுப் பொதியை மீளப்பெற்று வீசி அச்சுறுத்தியுள்ளார்.

உணவக உரிமையாளர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினரிடம் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு செய்துள்ளார். (இ-9)

# தேர்தல் நடத்த காலதாமதம் ஏன்?

## நாடாளுமன்றில் முஜிபுர் விளக்கம்

புதிய தேர்தல் முறையில் நடத்தத் தீர்மானித்ததால்தான் மாகாணசபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்த முடியாமல்போனது. விரைவில் நடத்த வேண்டும் என்றால் பழைய முறையில் நடத்த தீர்மானிக்க வேண்டும். அத்துடன் நாட்டில் அரசியல் பிரச்சினை இருப்பதென்றால் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதன் மூலம் அதனைத் தீர்த்துக் கொள்ளலாம் என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துவது தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் அரசியல் பிரச்சினை இருப்பதாக தெரிவிக்கின்றனர். அரசியல் பிரச்சினை இருப்பதென்றால் அதனை தீர்த்துக்கொள்ள இருக்கும் சிறந்த முறை ஜனாதிபதி தேர்தலுக்கு செல்வதாகும். இதன்மூலம் அரசாங்கத்தை மாற்ற முடியும். அதனால் விரைவில் நடத்த முடியாத தேர்தலை நடத்துவதைவிட ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்று அரசாங்கத்தை மாற்றியமைக்க ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே சிறந்ததாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெள்ளவத்தையில் கோத்தாவுக்கு தனிப்பட்ட காரியாலயம் இல்லை

## மிலிந்த ராஜபக்ஷ மறுப்பு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு வெள்ளவத்தையில் தனிப்பட்ட காரியாலயமொன்று அமைக்கப்படுவதாக கூறியதில் எந்தவொரு உண்மையும் இல்லையென அவரது ஊடகப் பேச்சாளர் மிலிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை டபிள்யூ.ஏ. சில்வா மாவத்தையில் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரில் காரியாலயம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிலர் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த கருத்துக்கு கோத்தபாயவின் ஊடகப் பேச்சாளர் மிலிந்த ராஜபக்ஷ மறுப்புத் தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ, காரியாலயம் அமைக்க எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை எனவும் காரியாலயம் அமைப்பது தொடர்பில் வேறு எவருக்கும் பொறுப்புக்களை கையளிக்கவில்லை எனவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். (இ-7)

# போதை அரக்கன்



இன்று உலகை உலுக்கிக் கொண்டிருக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைக் களுக்குள் போதைவஸ்துப் பாவனை பூதாகரமாக உருவெடுத்துள்ளது. இந்த போதைவஸ்து பிரச்சினைகளுக்குள்ளாகி சிக்கித் தவிக்கும் நாடுகளுள் நம் நாடும் ஒன்று. போதை அரக்கனினால் நம் வருங்காலப் பிரஜைகளாகிய இளைஞர்கள் அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை அறிகின்றோம் கொலை, களவு, பாலியல் பலாத்காரம், வாள்வெட்டு போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுத் தங்கள் ஆண்மை, பண்பாடு, கல்வி ஆகியவற்றிலிருந்து இளைஞர் சமுதாயம் விலகிச் சென்று கொண்டிருக்கிறது.

கடந்த நான்கு வருடங்களாக அரசாங்கங்களும் போதைவஸ்துப்பாவனையை ஒழிப்பதற்கு சட்டம் மூலம் நடவடிக்கை எடுத்துள்ளது. எனினும் ஒழிக்க முடிந்ததா? இல்லையே. பதிலுக்கு நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வரு கிறது. ஆரம்ப காலத்தில் அபின், கஞ்சா கடத்தல் பாவனை செயலாக இருந்தது. தற்போது ஹெரோயின், பொப்பி, மாபாபாக்கு என்பன பலவகையாக பெருகி மேலும் மேனாட்டிலிருந்து பலவித போதை குளிசைகளாகவும், போதை சொக்லெட்டுக்களாகவும், பவுடர்களாகவும் பல்கிப் பெருகிக் கொண்டிருக் கின்றன. போதை கடத்தலுக்குத் தூக்குத் தண்டனை என அரசதலைவர் அறிவித்திருந்தும் போதைப்பொருள் பாவனையும் கடத்தலும் தினம்தினம் நாடு பூராகவும் வியக்கத்தக்க வகையில் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கிறது.

கடத்தல்காரரை நாம் குறைகூறுவதும் அவர் களுக்குக் கடும் தண்டனை விதிப்பதாலும் போதைப் பாவனையை ஒழித்து விட முடியாது. பாவனையாளர்களை நாம் முதலில் இனம் காணவேண்டும். பாரிலிருந்து பாட்டான்வரைபோதைப் பாவனைக்கு விலக்கல்ல என்பதை யாவரும் அறிவர். இந்தச் சந்தர்ப்பத்தில் வையகத்தில் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த வள்ளுவப் பெருந்தகை கூறியதைச் சிந்தித்துப் பாருங்கள்!

"தினற் பொருட்டாற் கொள்ளாதுஉலகெனின்
விலைப் பொருடால்
ஊன் தருவாரில்"

ஒருவரும் ஊனைத் தின்னாதுவிட்டால் ஊனை விலைக்குவிற்பவரும் இருக்கமாட்டார்கள் என்று உறுதியாகக் கூறுகிறார்.

இந்த வள்ளுவர் கூற்று போதைவஸ்துப் பாவனையாளருக்கும் பொருந்தும். போதைவஸ்துப் பாவனையாளர்களை முதலில் கண்காணிக்க வேண்டும். அவர்களை கைது செய்ய வேண்டும். அவர்கள் மூலம் விற்பனையாளர்களையும் கடத்தல்காரர்களையும் பிடிக்கலாம். பாவனையாளர்களின் ஒரு பகுதியினரையேனும் கைது செய்து வைத்திய பரிசோதனைக் குள்ளாக்கி நன்னடத்தைப் பாடசாலைகள், காப்பகங்கள் போன்ற நிறுவனங்களில் ஒரு குறிப்பிட்ட காலத் துக்கு வைத்திருந்து போதை வஸ்தால் ஏற்படும் உடல், உள, சமூக தீமைகளை எடுத்துப் போதிக்கத் தொடங்கினால் இந்த நிகழ்வைக் கண்ணால் காணும் பாடசாலைச் சிறார்கள், இளைஞர்கள், சில பெரியவர்கள் போதை வஸ்துப் பாவனையை படிப்படியாகக் கைவிடுவர்.

நம் நாட்டின் ஜனாதிபதி பிலிப்பைன்ஸ் நாடு சென்ற பொழுது அங்கு போதை வஸ்து ஒழிப்பாக எடுக்கப்படும் மிகக் கடுமையான நடவடிக்கைகளை நம் நாட்டிலும் எடுக்கலாம் என்று அவர்களோடு தொடர் கொண்டுள்ளார்கள். இதனால் அங்கிருந்து ஒரு குழு இந்தப் பிரச்சினை தொடர்பான தொழில்நுட்ப நடவடிக்கைகளை இங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்து விளக்குவர்.

எனினும் போதை வஸ்துப் பாவனை உடனடியாக தீர்த்துக்கட்டக் கூடியதல்ல, நீண்டகாலத் திட்டமிடல் அவசியம். பாடசாலை மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை இதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைப் படிப்படியாக நகர்த்த வேண்டும். எடுத்துக்காட்டாக பாடசாலை விதானத்தில் போதை வஸ்து தொடர்பான பாட வேளை இடம் பெறவேண்டும்.

"ஈந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பர் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"

என்ற கூற்று அர்த்தமுள்ளது. மீண்டும் வள்ளுவர் வாய்மொழியைக் கேளுங்கள்.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார்கள் உண்பவர்"

எப்பொழுதும் கள் உண்பவர்கள் நஞ்சு உண்பவர்கள் ஆகிறார்கள். மதுவும் ஒருபோதை வஸ்து. அதுவே நஞ்சு உண்பதற்குச் சரி எனின் தினமும் நம் மத்தியில் கடத்தலாகவும் பாவனையாகவும் நடமாடிக் கொண்டிருக்கிற பொப்பி, கஞ்சா, ஹெரோயின் முதலிய தற்கால போதைப் பொருட்கள் கொடிய நஞ்சென்பதைச் சொல்லித்தான் தெரியவேண்டுமா?

இந்த நஞ்சுகளால் என்ன ஏற்படுகிறது, எண் சாண் உடம்புக்கே பிரதானமான தலையில் பலவித நோய்கள், ஆண்மைக் குறைபாடு, நரம்புத்தளர்ச்சி, உடலை இயக்கமுடி யாத பலவீனம் எனப் பலவித நோய்கள் பாவனையாளர்களுக்கு போதை வழங்கும் பரிசாகின்றன.

போதை வஸ்துப் பாவனையாலேயே மனமுறிவு, மணமுறிவு, விவாகரத்துப் போன்றவை பல்கிப் பெருகு வதாக வைத்தியர்கள் பலர் எச்சரித்துள்ளமையையும் ஊடகங்கள் வாயிலாக நாம் அறிந்து கொள்கிறோம்.

எனவே இந்தவிட யத்தில் அரசு எடுக்கும் நடவடிக்கைகள் போதும் என நாம் இராது ஒவ்வொரு பெற்றோரும் இந்தவிடயத்தில் தம்பிள்ளைகளைக் கவனிக்கவேண்டும்.

கடை களிலே விற்கப்படும் கண்ட கண்டபானங்கள், பக்கற் உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

பாடசாலைகளைச் சூழவுள்ள சமூக நிறு வனங்கள்,நலன் விரும்பி கள், சமூகசேவையாளர் கள், ஓய்வுபெற்ற அனுபவம் வாய்ந்த பெரியோர்கள் போதை ஒழிப்புப் பணியை தெய்வீகப் பணியைச் சிரமதானப் பணியாகக் கொண்டு செயற்பட வேண்டும்.

இப்ப டிச் செயற்பட்டால் எங்கள் குழந்தைகள் தெய்வீகக் குழந்தைகளாக வளர்ந்து நாட்டின் வளமான நற்பிரஜைகள் ஆவார்கள் என்பதில் ஐயமில்லை.

**திருமதி.ல.சிவபாதம்**
**பிரதி அதிபர்,**
**யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை**

---

### சுதந்திரதின கொண்டாட்டங்கள், தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரானது

# நாடு தழுவிய ரீதியில் கறுப்புக்கொடி போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்

### மலையக சமூக ஆய்வு மையம் கோரிக்கை

(ஹற்றன்)

பெருந்தோட்ட சமூகத்தை தொடர்ந்து கொத்தடிமைகளாக்கி அவர்கள் வாழ்வைப் பறிக்கும் கூட்டு ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்திக்கொண்டு வாழ்வதற்கான அடிப்படை சம்பளமாக அவர்கள் கேட்கும் ரூபாய் ஆயிரத்தை கொடுக்க மாட்டோம் என கம்பனிகள் கூறுவதும், அதனை அனுமதிக்கும் வகையில் ஆளுந் தரப்பு . பிரதமர் மற்றும் ஜனாதிபதி அமைதி காப்பதென்பது இதனை ஆமோதிப்பதாகவே அமைவதால் மலையக சமூக ஆய்வு மையம் வன்மையாகக் கண்டித்துள்ளது. அந்த வகையில் சுதந்திர தினத்தை முன்னிட்டு கறுப்புக்கொடி போராட்டத்தை ஆரம்பிக்குமாறு குறித்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அவர்கள் அனுப்பியுள்ள அறிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கான சம்பளத்தையும், ஏனைய கொடுப்பனவுகளையும் சுயமாகவே அதிகரித்துக் கொள்கின்றனர் என்பது அனைவரும் அறிந்ததே. இந்த அதிகரிப்பிற்கான பணமானது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் இரத்தம், வியர்வை மூலமும் பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்பதே உண்மை.

ஆட்சியாளர்கள், வெளிநாட்டுக்கடன் என்று கூறுகின்றார்கள். இந்தக் கடனில் எத்தனை வீதம், மலையக தொழிலாளர்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது என்ற கேள்வியை முன்வைப்பதோடு, இந்தக்கடனை அடைப்பதற்கு மலையக தொழிலாளர்களும் தமது வாழ்நாள் முழுவதும் பங்களிப்பு செய்துவருகின்றனர்

சம்பள விடயம் தொடர்பில் மலையக தொழிற் சங்கங்களுக்கிடையில் போட்டி நிலவுகின்றது. எதிர்த் தரப்பினரின் மூக்கு டைய வேண்டும் என்றே ஒவ்வொரு தரப்பும் எதிர் பார்க்கின்றன. இவர்கள் நடத்தும் ஊடக அறிக்கை நாடகத்தையும், தொழி லாளர்கள் அவதானித்தே வருகின்றனர். தகுந்த நேரத்தில்பாடம் படிப்பிக்க தொழிலாளர்கள் ஆயத்தமாகிவிட்டனர்.

தொழிலாளர்களின் வியர்வையை ரூபாவால் மதிப்பிட முடியாது என்பதோடு, அவர்கள் கேட்பது வாழ்வதற்கான சம்பளமே. தங்களுக்கான அடிப்படை சம்பளமாக ரூபா ஆயிரம் கோரிக்கையிலிருந்து பின்வாங்கப்போவதில்லை. மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக, மலையகத்துக்கு வெளியிலும் போராட்டங்கள் வெடித்துவிட்டன.

தொழிலாளர்களுக்கு சலுகைகாட்டி ஏமாற்றலாம் என இனியும் தொழிற்சங்கங்கள் கனவுகாணக் கூடாது. ஏனைய தொழில் துறை, தொழிலாளர் வர்க்கத்திடமிருந்து மலையக பெருந்தாட்டத் தொழிலாளர்களை பிரித்து தமது ஆளுகைக்குள் வைத்திருக்கலாம் என நினைத்தால் மிஞ்சுவது ஏமாற்றமே.!

சம்பளம் அதிகரிக்காவிட்டால் தற்கொலை செய்து கொள்வேன் என மண்ணெண்ணெய் உடன் நாடாளுமன்றத்தில் நாடகமாடியதும் அண்மையில் கட்சி தாவி மீண்டும் பழைய கட்சிக்கு திரும்பி தொழிற் சங்க மற்றும் அமைச்சு அதிகாரத்தைப் பெற்று நட்சத்திர அரசியல் நடத்துவதற்காக நடத்தப்படும் காட்சி அரசியல்மூலம் அவமானப்படுவது வாக்களித்த மக்களே!

மேலும் கூட்டு ஒப்பந்த சரத்துகள் பிழையென நாடாளுமன்றத்தில் வாதிட்டவர்கள், கடந்த இரண்டு வருடகாலமாக அதனை எதிர்த்து என்ன செய்தார்கள்? புதிய ஒப்பந்தம் செய்து கொள்வதை தடுத்து நிறுத்துவதற்கு திராணி அற்றவர்களாக இருப்பது ஏன்? உடனடியாக புதிய ஒப்பந்தம் தடுத்து நிறுத்தப்பட்டு சுயாதீன குழுவொன்றை அமைத்து தொழிலாளர் நலன் பாதுகாப்பு சரத்துக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர், ஒப்பந்தத்திற்கு வழிவகுக்க வேண்டும்.

அதுவரைக்கும் தொழிலாளர் கேட்கும் அடிப்படை சம்பளமான ரூபாய் ஆயிரத்துக்கான மேலதிக கொடுப்பனவை அரசு மானியமாக கொடுக்க அரசோடு ஒட்டிக் கொண்டிருப்பவர்கள், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

---



போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ். வளலாய் அ.மி.த.க பாடசாலையுடன் சி.சி.எச் நிறுவனமும் இணைந்து நேற்று நடைபவனி மேற்கொள்ளப்பட்டபோது.

# மாகாண திறைசேரியில் தேங்கி இருக்கும் வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை

(சாவகச்சேரி)

மாகாண திறைசேரியில் தேங்கி இருக்கும் சாவகச்சேரி நகரசபையின் வருமானத்தை முதலாம் காலாண்டுக்குள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கனகசபை கஜிதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபையின் 2018ஆம் ஆண்டின் வருமானங்களான முத்திரை வரி மற்றும் தண்டப் பணங்கள் ஆகியவற்றை 2019 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்குள் மாகாண திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்ள நகரசபையின் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிலுவையில் உள்ள பணத்தைக் கொண்டு நகர அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும். நாம் மாகாண திறை சேரியில் இருக்கும் நிதியை எடுக்கத் தவறும் பட்சத்தில் அந்த நிதி வருமானமாக மாற்றப்பட்டுவிடும்.

வருட இறுதிவரை தள்ளிப்போடாமல் உடனடியாக இதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

## சர்வதேச மனித உரிமை பேரவைக்கு அழுத்தம்

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் ஆர்ப்பாட்ட பேரணிக்கு அழைப்பு

(வவுனியா)

வடக்கு,கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரம் தொடர்பில் இலங்கை அரசு உரிய தீர்வை முன்வைக்க வலியுறுத்தி சர்வதேச மனித உரிமை பேரவைக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை வவுனியாவில் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணிக்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வடக்கு,கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு,கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அமைப்பின் 8 மாவட்ட பிரதிநிதிகளும், சிவில் சமூக பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வவுனியா வாடி வீட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போதே மேற்குறித்த தீர்மானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்பின் இணைப்பாளர் தேவராசா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஐ.நா. அமர்வின் 40 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ளது. காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் இனியும் இழுத்தடிப்பு செய்யாமல் இலங்கை அரசு உரிய தீர்வை தர வேண்டும்.

இதற்கு சர்வதேச மனித உரிமை பேரவையில் உள்ள நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியை முன்னெடுக்கவுள்ளோம்.

எனவே எமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் அனைத்து சிவில் அமைப்புக்கள்,மக்கள் பிரதிநிதி ஏற்றத்தாழ்வு பார்க்காமல் ஒத்துழைப்பு தர வேண்டும். பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பு எமக்கு நிறைந்துள்ளது.

அதேபோல் இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேசத்திலும் எமக்கான ஆதரவை வழங்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (2-9)

# போதைப்பொருள் பாவனை தொடர்பில் பாடசாலையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(மன்னார்)

தேசிய ரீதியில் ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்ட போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு போதை பொருள் தடுப்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பங்கு தொடர்பாக மாணவர்களுக்கு தெளிவூட்டும் வகையில் மன் பெரியமடு மகாவித்தியாலயதின் அதிபர் குலதீபன் தலைமையில் விழிப்புணர்வு கருத்தமர்வு மற்றும் விசேட கலந்துரையாடல் நிகழ்வு நேற்று முற்பகல் 10.00 மணியளவில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

குறித்த கருத்தமர்வில் பாடசாலை ரீதியில் மாணவர்கள் எவ்வாறு போதை பொருட்கள் பாவனையில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள முடியும் என்பது தொடர்பாகவும் போதை பொருள் பாவனை தொடர்பான குற்ற செயல் ஒன்றினால் பாதிக்கப்படும் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும் மன்னார் பொது அமைப்புக்களின் அதிகாரி மற்றும் ஊடகவியலாளர்களினால் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

அத்துடன் மாணவர்களுடைய கருதுக்களும் உள்வாங்கப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

தொடர்ச்சியாக குறித்த போதை பொருள் ஒழிப்பு வாரத்தில் நடைமுறை செயற்பாடுகள் மற்றும் விழிப்புணர்வு பேரணிகள் பொலிஸ் உள்ளூர் அரசியல்வாதிகள் ஆகியோரை நேரடியாக அழைத்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# கரைச்சிப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பனவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான 10 ஆயிரம் ரூபாய் உதவித் தொகைக் கொடுப்பனவு தற்போது வழங்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகள் அண்மையில் கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் உதவிக் கொடுப்பனவு வழங்கப்படும் என கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

அதற்கமைய கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் பாதிக்கப்பட்ட, தற்காலிக வீடுகளில் வசிக்கும் மக்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (2-26)

# ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையில் பீங்கான் கூட்டுத்தாபன பெயர்ப்பலகை நாட்டல்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையில் இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் என எழுதப்பட்ட பெயர்ப்பலகை நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஓட்டுத்தொழில் சாலை போரின் பின்னர் இயங்காத நிலையில் தொடர்ச்சியாக காணப்பட்டு வந்துள்ளது.

பலதரப்பினர் முயற்சிகள் மேற்கொண்டும் பலனளிக்காத நிலையில் குறித்த இடத்தை இலங்கை பீங்கான் கூட்டுத்தானபத்திற்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் தனது பெயர்ப்பலகையை நாட்டியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இல்மனைட்களை அகழ்வது தொடர்பில் அண்மைக் காலத்தில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன.

வடக்கு மாகாணசபை ஆட்சிக் காலத்தில் நாயாறு, செம்மலைப் பகுதிகளில் கனிய மணல்கள் படிந்துள்ளன. இவற்றை எடுப்பதற்கு கனியப்பொருள் கூட்டுத்தாபனத்தினர் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், நாயாறு, செம்மலைப் பகுதிகளில் எடுக்கப்படும் கனிய மணல்களை ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை பகுதியில் தொழிற்சாலை அமைத்து செயற்பட்டால் மக்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்று அன்று முன்னாள் வடக்கு மாகாணசபை க.சிவநேசனால் பரிந்துரைக்கப்பட்டு ள்ளது.

அதன் பின்னர் வடக்கு மாகாண சபையினால் அமைக்கப்பட்ட குழுவின் முடிவு தொடர்பில் எதுவித செய்திகளும் வெளியாகாத நிலையில் தற்போது ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையில் இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் என பெயர்ப்பலகை நாட்டிவைக்கப்பட்டுள்ளது. (2-281)

# சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் கைதாகினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கனகம்புளியடிப் பகுதியில் சட்டவிரோதமாக ஆடு ஒன்றை வெட்டி இறைச்சியாக்க முற்பட்ட நபரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

இதேவேளை சாவகச்சேரி மடத்தடிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி பனை மரங்களை தறித்த சந்தேகநபர் ஒருவரையும் சாவகச்சேரி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இக்கைது நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினர் மேற்கொண்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக வழ்க்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர். (2)

# போதைப்பொருள் பாவனையால் ஏற்படுகின்ற விளைவுகள் குறித்து துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்





(யாழ்ப்பாணம்)

யா/செம்பியன் பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் போதைப்பொருள் எதிர்ப்பு வாரம் கடைப்பிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

பாடசாலையில் போதைப்பொருள் எதிர்ப்பு தொடர்பாக பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

553ஆவது படைப்பிரிவு இராணுவத்தினரதும் மருதங்கேணி பொலிஸ் பிரிவினரதும் ஒழுங்கு படுத்தலில் 21 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை செம்பியன் பற்று பாடசாலையில் போதைப் பொருள் .எதிர் ப்பு தொடர்பான கருத்தமர்வுகள்,விசேட கூட்டங்கள் என்பனவும் இடம்பெற்றன.

பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் போதைப் பொருட்கள் உட்கொள்வதனால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான கருத்துக்களை வீதியில் இறங்கி போக்குவரத்தில் ஈடுபடுபவர்களுக்கு விளக்கங்களுடன் கூடிய துண்டுப் பிரசுரங்களுடன் விளக்கங்கள் கொடுத்து விநியோகித்தனர்.

அத்துடன் அடையாள பேரணியும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸார், இராணுவ உயரதிகாரிகள், இராணுவத்தினர், அதிபர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-64)

# சுனாமி குடியிருப்பு வீதி எப்போது திருத்தப்படும்?



(பொற்பதி)

நீண்டகாலமாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக உள்ள மருதங்கேணி சுனாமி குடியிருப்பு வீதி எப்போது திருத்தப்படுமென மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

பல வருடகாலமாக திருத்தப்படாது காணப்படுகின்ற சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான மருதங்கேணி நகர்பகுதியையும் சுனாமி குடியிருப்பையும் இணைக்கும் இந்த வீதியானது மிகவும் மோசமாக மக்கள் போக்குவரத்து செய்ய முடியாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இவ் வீதியூடாகவே மருதங்கேணி குடியிருப்பு மக்கள் வைத்தியசாலை,வங்கி, பிரதேச செயலகம் மற்றும் ஏனைய பல தேவைகளுக்கு மருதங்கேணி நகருக்கு செல்வதற்கு இவ் வீதியினையே பயன்படுத்துகின்றனர். இவ் வீதிக்கு ஆரம்பத்தில் போடப்பட்ட கற்கள் முழுமையாக கிளம்பி பாரிய கிடங்குகள் வீதியில் காணப்படுகின்றன.

இவ் வீதியானது பருத்தித்துறை பிரதேசசபைக்கு உட்பட்ட வீதியாகையினால் பிரதேசசபை வட்டார உறுப்பினர்களும் ஏனைய அரச அதிகாரிகளும் இந்த வீதியின் தேவையை கருத்தில் கொண்டு வீதியை திருத்தம் செய்ய அனைவரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-64)

# மன்னாரில் வெடிபொருட்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார், பேசாலை-நடுக்குடா கடலோரப் பகுதியில் ஒரு தொகை வெடி பொருட்களை மீட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல்களை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஒரு தொகை வெடி பொருட்களை நடுக்குடா கடற்கரையோரத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, சிலிக்கனைட் குச்சிகள், கிளைமோர் சுரங்கங்கள், ரப்பர் பூட்ஸ், ரொக்கெட் ஏவுதலகள் மற்றும் வெடிமருந்துகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பேசாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2)

# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் காணிகள் கையளிக்கும் நிகழ்வு ஜனவரியில்

## பதிவுகளை மேற்கொள்க

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் ஹலோ ரஸ்ட் (HALLO Trust) நிறுவனத்தினால் 225.31 ஏக்கர் நிலப்பரப்பு கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு தற்போது பாதுகாப்புவேலி அமைக்கப்பட்டு வருவதனால் அவ்விடங்களின் காணிகளை கையளிக்கும் நிகழ்வு ஜனவரி மாதத்தின் இறுதியில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் ப.ஜெயராணி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

வேம்பொடுகேணியில் ஏ-9 வீதியிலிருந்து தெற்கு நோக்கி ஏற்கனவே விடுக்கப்பட்ட 200 மீற்றர் பகுதியை அடுத்துள்ள மேலும் 300 மீற்றர் வரையான பகுதி விடுவிக்கப்படவுள்ளது.

முகமாலையில் ஏ-9 வீதிக்கு சமனான வடக்கு நோக்கி ஏற்கனவே விடுவிக்கப்பட்ட 200 மீற்றர் அம்பளாவளை கிராமத்தின் ஒரு பகுதி விடுவிக்கப்படவுள்ளது.

இத்தாவிலில் இத்தாவில் சந்தியிலிருந்து முருகையன் கோவிலிற்கு செல்லும் வீதிக்கு மேற்கு பக்கமாக, ஏற்கனவே விடுவிக்கப்பட்ட ஏ-9 வீதியிலிருந்து 200 மீற்றர் பகுதியைத் தொடர்ந்து மேலும் உயர் மின்வலு வலைமைப்பு வரையான 887 மீற்றர் விடுவிக்கப்படவுள்ளது.

ஆதலால் மேற்கூறப்பட்ட இடங்களுக்குரியவர்கள் மீள்குடியேற்ற செயற்பாடுகளை இலகுபடுத்தும் பொருட்டு மீள்குடியேற்றம் தொடர்பான பதிவுகளை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# படைப்புழுவை துரிதகதியில் கட்டுப்படுத்த கலந்துரையாடல்

## எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்






(கிளிநொச்சி)

படைப்புழுவைக் கட்டுப்படுத்துவதற்காக 50 ஆயிரம் துண்டுப்பிரசுரங்கள், விளக்கமளிக்கும் கலண்டர்கள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பகிரப்பட்டு வருகின்றது. இதேவேளை மாவட்ட மட்டங்களில் நடைபெறவிருக்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாக எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மாகாணப் பணிப்பாளர் ஊடாக சம்பந்தப்பட்ட அனைவரையும் கூடி கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வட பிராந்திய மேலதிக விவசாயப்பணிப்பாளர் (ஆராய்ச்சி) கலாநிதி சி.ஜே.அரசகேசரி தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலத்திலிருந்து அதிகமாக தாக்கிவரும் படைப்புழுவைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய மற்றும் மாகாண விவசாயத் திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் துரித நடவடிக்கைகள் சம்பந்தமாக சந்திப்பொன்று நேற்று முன்தினம் கிளிநொச்சி, இரணைமடுச்சந்தியில் அமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது படைப்புழுவானது பாரிய அளவில் சேதத்தை ஏற்படுத்தாத வகையில் துரிதகதியில் செயற்படுமாறு விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. டபிள்யூ.டபிள்யூ.எம். வீரக்கோன் பணித்துள்ளதாக இத்துரித நடவடிக்கைக்கு இணைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய மேலதிகப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது வடபிராந்தியத்தின் எல்லா மாவட்டங்களிலும் இப்படைப்புழுவின் தாக்கம் அறியப்பட்டுள்ளதாகவும் பெரும்பாலான பகுதிகளில் சோளப் பயிரே தாக்கப்பட்டதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இருப்பினும் மன்னார் பிரதேசத்தில் கௌபி, வவுனியா பகுதியில் கோவா, வவுனியா பகுதியில் பயறு போன்ற பயிர்களிலும் இத்தாக்கம் அறியப்பட்டதுடன் அவ்வப் பகுதி விவசாயப் போதனாசிரியர்களால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்டது.

இச்சந்திப்பில் இத்திட்டத்திற்காக வடபிராந்தியத்திற்கான வளவாளராக நியமிக்கப்பட்டிருக்கும் உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) சி.இராஜேஸ்கண்ணா கலந்து கொண்டு இக்கட்டுப்பாட்டு பொறிமுறைகள் பற்றிய தொழில்நுட்பரீதியான விளக்கங்கள் அவரால் அளிக்கப்பட்டது.

இந் நடவடிக்கைகளுக்காக ஐம்பதாயிரம் துண்டுப்பிரசுரங்களும் விளக்கமளிக்கும் கலண்டர்களும் இப்பிரதேசங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மாவட்ட மட்டங்களில் நடைபெறவிருக்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாக எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மாகாணப்பணிப்பாளர் ஊடாக சம்பந்தப்பட்ட அனைவரையும்கூடி கலந்துரையாடல்கள் மேற்கொள்ளவுள்ளதாக வடபிராந்திய மேலதிக விவசாயப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) கலாநிதி. சி.ஜே. அரசகேசரி தெரிவித்துள்ளார். (2)

# நந்திக்கடல் - வட்டுவாகல் பாலத்தை அடைத்து சட்டவிரோத மீன்பிடித்தொழில்

(பனிக்கன்குளம்)

நந்திக்கடல்-வட்டுவாகல் பாலத்தை அடைத்து சட்டவிரோத மீன்பிடித் தொழில் மேற்கொள்ளப்படுவதாக. வட்டுவாகல் கிராமிய கடற்றொழில் அமைப்பின் செயலாளர் சி.பன்னீர்ச்செல்வன் குற்றம்சாட்டியுள்ளார்.

அத்துடன் வட்டுவாகல் பாலத்தை சேதப்படுத்தும் நடவடிக்கையில் சட்டவிரோத கடற்றொழிலாளர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வட்டுவாகல் கிராமிய கடற்றொழில் அமைப்பினர் நேற்று முன்தினம் காலை வட்டுவாகல் பாலத்தை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது அவ்விடத்தில் நின்ற மீனவர்களுக்கிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

இதனால் பரந்தன்-முல்லைத்தீவு பிரதான வீதி போக்குவரத்தில் பாதிப்பு வட்டுவாகல் பாலத்தில் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இடத்திற்குச் சென்ற போக்குவரத்து பொலிஸார் போக்குவரத்தை சீர்செய்துள்ளதுடன் அங்கு சென்ற வீதி அபிவிருத்தி திணைக்கள ஊழியர்கள் வட்டுவாகல் பாலத்தை தற்காலிகமாக புனரமைப்பு செய்துள்ளனர்.

இதன்போது பாலத்தை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த வட்டுவாகல் கிராமிய கடற்றொழில் அமைப்பின் செயலாளர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்,

வட்டுவாகல் பாலம் மிக நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படவில்லை. இதனால் இந்த பாலம் பாரிய சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது.

இந்த நிலையில் நந்திக்கடல் நீரோட்டத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு சேதமாகிய பாலத்தை வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் ஏற்கனவே பாரிய கற்களால் தற்காலிகமாக புனரமைப்பு செய்திருந்தனர்.

இவ்வாறு புனரமைப்பு செய்யப்பட்ட பாரிய கற்களை சட்டவிரோத மீன்பிடித் தொழிலாளர்கள் பாலத்திற்குள் நகர்த்தி மண்மூடைகள் சகிதம் கடல் நீர் ஓட்டத்தை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இரவாக தடைசெய்துள்ளனர்.

இந்த நிலையில் கடல் நீரோட்டத்தை சீர் செய்ய பாலத்தைத் துப்புரவு செய்யும் பணி இடம் பெற்றுள்ளது என்று தெரிவித்தார். (2-281)




# அம்புலன்ஸ் சாரதியை தாக்கிய குற்றச்சாட்டில் மூவருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(மன்னார்)

மன்னார் பேசாலை பிரதேச வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி சாரதியை கடமை நேரத்தில் தாக்கி அம்புலன்ஸ் வண்டிக்கு சேதம் விளைவித்த மூன்று பேர் கொண்ட குழுவினரை தற்போது பிணையில் விடுவித்தால் அமைதிக்கு பங்கம் ஏற்படும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவித்து பிணைக்குப் பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்ததைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா சந்தேக நபர்களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மூவரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கானது நேற்று முன்தினம் வியாழக்கிழமை மீண்டும் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பேசாலை பொலிஸார் மன்றில் தெரிவிக்கையில்,

அம்புலன்ஸ்வண்டி சாரதி தாக்கப்பட்டதுடன் பொதுச் சொத்தாகிய அம்புலன்ஸ் வண்டியும் சேதமாக்கியதில் இரண்டு இலட்சம் ரூபா விற்கும் மேற்பட்ட தொகை நட்டம் ஏற்பட்டுள்ளதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் விரைந்து திருக்காவிடில் பாரிய சேதங்கள் ஏற்பட வாய்ப்பு காணப்பட்டதாகவும், திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட செயலாகக் கருதுவதாலும், அத்துடன் இவர்களை தற்போழுது பிணையில் விடுவிப்பதால் அமைதிக்கு பங்கம் ஏற்படும் அபாயம் தோன்றும் வாய்ப்பு இருப்பதாக பொலிஸாரால் மன்றில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் மூவரையும் தொடர்ந்து 07.02.2019 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். (2-285)

# யானை பாதுகாப்பு வேலி சேதம் தினமும் வாழ்வாதாரப்பயிர்கள் அழிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு ஐயன்கன் கிராமத்தில் பல மில்லியன் ரூபா செலவில் யானை பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டும் பயன் இல்லை என்றும் தினமும் காட்டு யானைகள் தமது பயிர்களை அழித்து வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஐயன்கன்குளம் கிராமத்தில் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பல மில்லியன் ரூபா செலவில் யானை பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டன.

குறித்த வேலிகள் அமைக்கப்பட்டு மூன்றுமாத காலத்திற்குள் வேலிகள் அனைத்தும் சேதமடைந்துள்ளன.

தற்போது வேலி முழுமையாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

குறித்த வேலி தொடர்பில் பிரதேச மக்களும் கிராமட்ட அமைப்புக்களும் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோருக்கு தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ள போதும் இன்று வரை அந்த வேலிகளுக்கு எந்தவித மான தீர்வுகளும் இல்லை.

குறித்த வேலியைப் புனரமைத்து தமது விவசாயச் செய்கையைப் பாதுகாக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர் (2-315)

# அருளகம் சிறுவர் இல்லத்தில் புதிய கட்டடம் திறந்துவைப்பு



(வவுனியா)

வவுனியா கோவில்குளம் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் அனுசரணையில் இயங்கும் அருளகம் சிறுவர் இல்லத்தில் அவுஸ்திரேலிய தமிழர் ஒன்றியத்தின் உதவியில் அமையப்பெற்ற கட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. (2)

# பாரதம்

## என் மகன் விடுதலையாகும் வரை மக்களை சந்தித்து முறையிடுவேன்

### பேரறிவாளனின் தாயார் தெரிவிப்பு





(கோவை)

என் மகன் விடுதலையாகும் வரை மக்களை சந்தித்து முறையிடுவேன் என்று பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள் தெரிவித்தார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் விடுதலைக்காக, பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் 'மாநிலம் தழுவிய மக்கள் சந்திப்பு' பயணத்தை கோவையில் நேற்று முன்தினம் தொடங்கினார். முன்னதாக அற்புதம்மாள் நிருபர்களிடம் தெரிவித்ததாவது.

28 ஆண்டுகளாக எனது மகன் பேரறிவாளனின் விடுதலைக்காக போராடி வருகிறேன். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, தமிழக அரசு முறையாக அமைச்சரவையை கூட்டி, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளனர். இதில் ஆளுநர் உடனடியாக கையெழுத்திடுவதே முறையாகும். ஆளுநர் 4½ மாதங்களாக கால தாமதம் செய்து வருகிறார்.

எனவே மக்களிடம் எங்களது தரப்பு நியாயத்தை கொண்டு சேர்க்கும் வகையில் சுற்றுப்பயணம் செய்து மக்களை சந்திக்க உள்ளேன். மக்களின் கருத்துகளை கேட்டு இறுதி போராட்டம் பற்றி முடிவெடுப்பேன். எனது இந்த பயணம் 7 பேர் விடுதலைக்கானது. அவர்களுக்கு விடுதலை கிடைக்கும்வரை எனது பயணம் தொடரும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## இஸ்ரோ விஞ்ஞானிகளை பாராட்டினார் மோடி



(ஸ்ரீஹரிகோட்டா)

பி.எஸ்.எல்.வி. ரொக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில்ஏவியமைக்காக, இஸ்ரோ விஞ்ஞானிகளை பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலுள்ள 1 ஆவது ஏவுதளத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி.-சி.44 ரொக்கெட்டை, இஸ்ரோ விஞ்ஞானிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளனர்.

இந்த ரொக்கெட்டில் 690 கிலோ எடைகொண்ட 'மைக்ரோசாட்-ஆர்' செயற்கைகோள்மற்றும்'கலாம்சாட்'என்ற செயற்கைக்கோள் ஆகியன பொருத்தப்பட்டு விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

அந்த வகையில் 'மைக்ரோசாட்-ஆர்' செயற்கைகோள் பூமியை கண்காணிக்கவும், 'கலாம் சாட்' செயற்கைகோள் ஹாம் வானொலி சேவைக்காகவும் பயன்படுத்தப்படவுள்ளது.

மேலும் இவ்விரு செயற்கைக்கோள்களும் வெற்றிகமாக விண்ணில் ஏவப்பட்டுள்ளதாகவும் இவ்வருடம் 32 ரொ்க்கெட்களை ஏவுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பி.எஸ்.எல்.வி.ரொக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் ஏவியமைக்காக இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் பாராட்டுச்செய்தியை வெளியிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில், "திறமை வாய்ந்த இந்திய மாணவர்களின் கலாம்-சாட் செயற்கைக்கோள் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டுள்ளது. புவிசுற்றுவட்டப் பாதையில்4ஆவது நிலையை பயன்படுத்தி செயற்கைக் கோள்களை அனுப்பிய முதல் நாடு இந்தியா' என மோடி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-7)

## அரசதுறை பணி முடக்கத்தை முடிவுக்கு கொண்டு வரும் சட்டமூலங்கள் நிராகரிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நீடித்து வரும் பகுதியளவிலான அரச துறை பணிமுடக்கத்தினை நிறைவுக்குக் கொண்டு வரும் வகையிலான இரண்டு சட்ட மூலங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் கடந்த ஒரு மாதங்களாக பகுதியளவிலான அரசதுறை பணி முடக்கம் நீடித்து வருகின்றது.

இதனை நிறைவுக்கு கொண்டுவரும் வகையிலான இரண்டு சட்ட மூலங்கள் அமெரிக்க செனட் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் குறித்த இரண்டு சட்டமூலங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜனநாயகக் கட்சியினரின் முன்மொழிவுகளுக்கேற்ப, குடியரசுக் கட்சியினர் பெரும்பான்மையாகவுள்ள செனட்டின் தலைவர் மிட்ச் மெக்கோனெல், (Mitch McConnell) இந்த வாக்கெடுப்பினை நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடத்தியுள்ளார்.

இதேவேளை, சம்பளம் வழங்கப்படாமல் பணியாற்றிக்கொண்டிருப்போர் அல்லது வேலையை விட்டு நீங்கியவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படக் கூடிய அறிகுறிகள் எவையும் தென்படவில்லை என சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (4-7)

## கொலைக் குற்றவாளிக்கு மரண தண்டனைத் தீர்ப்பு

(பீஜிங்)

சீனாவில் நால்வரை கொலை செய்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒருவருக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் Xi'an நகர நீதிமன்றத்தினால் நேற்று வெள்ளிக்கிழமை இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சீனாவில் கடந்த ஜூன் மாதம் பேருந்து ஒன்றில் Xin Haiping என்ற ஆயுததாரியினால் மேற்கொள்ளப்பட்ட கத்திக்குத் தாக்குதலில் நால்வர் உயிரிழந்திருந்ததுடன், 7 பேர் காயமடைந்திருந்தனர்.

இந்த நிலையில் இது தொடர்பிலான வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேக நபருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டமையினைத் தொடர்ந்து அவருக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (4-7)

## இந்தோனேசியா

## உயிரிழப்பு 30

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தோனேசியா மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த பகுதியாகும். இதன் தெற்கு சுலவேசி மாகாணத்தில் நேற்று காலை கடும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தினால் தென் சுலவேசியில் வீடுகள், பாலங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



## ஆஸியில் வெப்பக்காற்



(அடிலெய்ட்)

அவுஸ்திரேலியாவில் வரலாறு காணாத வகையில் வெப்பக்காற்று வீசி வருவதாகவும், இதனால்பல்வேறு நோய் தாக்கங்களுக்கு உள்ளான சுமார் 44 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவுஸ்ரேலியாவில்தற்போது கோடை காலம் ஆரம்பமாகியுள்ளது. இதனால் அங்கு கடும் வெப்பம் நிலவுகிறது. தெற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்ட் நகரிலும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் வெப்பக் காற்று வீசிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிலெய்ட் வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 49.5 டிகிரி சென்டிகிரேட் வெப்பம் பதிவாகியுள்ளது. அடிலெய்ட் நகரில்

## எலி வலையில்

## 42 நாட்களுக்கு

(டில்லி)

இந்தியாவின் மேகாலயா மாநிலத்தின் 'எலி வலை" என்ற சுரங்கத்தில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கைகள் கடந்த 42 நாட்களாக இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்று முதன்முறையாக ஒரு தொழிலாளியின் உடல் அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்திய கப்பல் படையினர், குறித்த தொழிலாளியின் உடலை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்டுள்ள உடல், கடந்த வாரமே மீட்புப் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், அதை எடுக்க முற்படும்போது, அது



# வெளிநாடு

## ...ாவில் நிலச்சரிவு

## ...0 ஆக உயர்வு



...இந்நிலையில், இந்தோனேசியாவில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்துள்ளது. இதில் 2 குழந்தைகளும் அடங்குவார்கள்.

மேலும் காணாமல்போன 24 பேரை தேடி வருகின்றனர். சுமார் 3 ஆயிரத்து 321 குடும்பத்தினர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

46 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (4-7)

## மலேசியாவின் புதிய மன்னராக சுல்தான் அப்துல்லா தெரிவு

### 31ஆம் திகதி பதவியேற்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவின் புதிய மன்னராக சுல்தான் அப்துல்லா தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் எதிர்வரும் 31 ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

மலேசியா நாட்டில் மன்னரின் முடியாட்சியின்கீழ், கூட்டாட்சி முறையிலான அரசியல் சட்டம் அமுலிலுள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மன்னர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மன்னரின் தலைமையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர், துணைப் பிரதமர் ஆகியோர் அந்நாட்டின் ஆட்சியை நடத்தி, நிர்வகித்து வருகின்றனர்.

இந்நிலையில், மலேசிய மன்னராக கடந்த 2016 ஆம் ஆண்டு இறுதியில் பதவியேற்ற மன்னர் ஐந்தாம் சுல்தான் முஹம்மது, தனது பதவிக்காலம் முடிவதற்கு முன்பாகவே கடந்த 6ஆம் திகதி பதவி விலகினார்.

கடந்த ஆண்டு மருத்துவ விடுப்பில் சென்ற மன்னருக்கு ரஷ்ய தலைநகரான மொஸ்கோவில் ஒரு முன்னாள் மிஸ் மொஸ்கோ அழகியுடன் திருமணம் நடந்ததாக சமூக ஊடகங்களில் புகைப்படங்கள் வெளியாகின.

இந்த தகவல்களை உறுதிப்படுத்தும் வகையில் மன்னரின் இராஜினாமா அமைந்துள்ளதாக கருதப்படுகிறது. ஆனால், இந்த வதந்திகள் தொடர்பாக மன்னரின் அரண்மனை வட்டாரங்கள் எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

பல்லாயிரம் ஆண்டுகாலமாக இஸ்லாமிய மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்துவரும் மலேசியாவில், 9 மாநிலங்களில் அரச பரம்பரையினர் ஆட்சி செலுத்தி வருகின்றனர்.

இந்த மாநிலங்களில்உள்ள மன்னர் குடும்பத்தில் உள்ளவர்கள், சுழற்சி முறையில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்வு செய்யப்பட்டு மன்னராக முடிசூட்டப்படுகின்றனர்.

அவ்வகையில், மன்னர் ஐந்தாம் சுல்தான் முஹம்மது பதவி விலகியதைத் தொடர்ந்து, அடுத்த மன்னரைத் தேர்ந்து எடுப்பதற்கான நடைமுறை நேற்று தொடங்கியது. இதற்காக நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில், சுல்தான் அப்துல்லா சுல்தான் அஹமது ஷா, புதிய மன்னராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நாட்டின் 16ஆவது மன்னர் ஆவார். புதிய மன்னர் சுல்தான் அப்துல்லா, ஜனவரி 31 ஆம் திகதி பதவியேற்க உள்ளார்.

விளையாட்டில் அதீத ஆர்வம் கொண்ட சுல்தான் அப்துல்லா, உலக கால்பந்து அமைப்பான பிபா உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு அமைப்புகளில் பொறுப்பு வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. (4-7)

## ...ாற்று; 44 பேர் பாதிப்பு



...47.7 டிகிரி பதிவானது. இது 1939-ம் ஆண்டில் பதிவான வெப்பத்தை விட அதிகம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதேபோன்று தெற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள 13 நகரங்களிலும் கடும் வெப்பமான காலநிலை நிலவுகிறது. வெப்பத்தின் கடுமையில் இருந்து தப்பிக்க மக்களுக்கு குளிர்ச்சியான பானங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

அதிக வெப்பம் காரணமாக மக்கள் மர நிழலில் தஞ்சமடைந்துள்ளனர். வெப்பக் காற்றின் தாக்குதல் கடுமையாக உள்ளது. இதனால் பலவிதமான வெப்ப நோய்களினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 44 பேர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## தாய்லாந்து பொதுத்தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளதாக அறிவிப்பு

(தாய்வே)

தாய்லாந்து பொதுத்தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அந்நாட்டின் தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

இதன் மூலம் தாய்லாந்தில் மீண்டும் மக்களாட்சி மலர்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டின் அரசியல் விமர்சகர்கள் பலரும் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னர் தாய்லாந்து மன்னர் நாட்டின் முதல் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு அரசாணையைப் பிறப்பித்தார்.

இந்த நிலையிலேயே எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் பிரசாரங்களும் அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையம் கடந்த மாதம் அறிவித்திருந்தது.

எனினும் மன்னரின் முடிசூட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் முன்கூட்டியே நடைபெறவுள்ளமையினால் தேர்தல் நடவடிக்கைகள் அதற்கு இடையூறாக அமையலாம் என எதிர்வுகூறப்பட்டிருந்தது.

இதேவேளை, தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழா மே மாதம் 4ஆம் திகதியிலிருந்து ஆறாம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ...சிக்கியவர்கள் ...க்கு பின்பு மீட்பு



...தவறி மேலும் சுரங்கத்துக்குள் விழுந்துவிட்டது.

ஆனால், அந்த உடலை நேற்று மீட்புப் படையினர் வெற்றிகரமாக எடுத்துள்ளனர். மேலும் சுரங்கத்தில் சிக்கிய ஏனைய தொழிலாளர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி ஜனிதா மலைத் தொடரில் உள்ள, சட்டவிரோத நிலக்கரி சுரங்கத்தில் வேலை பார்த்து வந்த 15 தொழிலாளிகள் திடீர் நீர்வரத்துக் காரணமாக அதற்குள்ளேயே சிக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## அரசுத்துறை முடக்கம்

## நாடாளுமன்றத்தில் உரையாற்ற மாட்டேன்

### ட்ரம்ப் திட்டவட்டம்



(வோஷிங்டன்)

அரசுத்துறை முடக்கம் முடிவுக்கு வரும் வரை நாடாளுமன்றத்தில் உரையாற்றப் போவதில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் நாடாளுமன்றத்தில் செனட் மற்றும் பிரதிநிதிகள் சபைகளின் உறுப்பினர்கள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றுவது வழக்கம்.

பிரதிநிதிகள் சபையின் தலைவர் விடுக்கும் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த உரையை நிகழ்த்துவார். வரவு-செலவுத்திட்ட செய்தி, நாட்டின் பொருளாதார நிலை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் ஜனாதிபதியின் உரையில் இடம்பெறும்.

அந்த வகையில், எதிர்வரும் 29ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்ற வருமாறு ஜனாதிபதி ட்ரம்பிற்கு பிரதிநிதிகள் சபையின் தலைவர் நான்சி பெலோசி அழைப்பு விடுத்தார். எனினும் அவர் அடுத்த நாளே தனது அழைப்பை மீளப் பெற்றுக்கொண்டார்.

மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்பும் பிரச்சினையால் அமெரிக்காவின் பல்வேறு அரசுத்துறைகள் 4 வாரங்களுக்கும் மேலாக முடங்கி இருப்பதால், முதலில் அதற்கு தீர்வுகாண வேண்டும் எனவும், பின்னர் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் அதனை ஏற்றுக்கொள்ளும் விதமாக, அரசுத்துறைகள் முடக்கம் முடிவுக்கு வரும் வரை நாடாளுமன்றத்தில் உரையாற்ற மாட்டேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள ட்ரம்ப்,

"அரசுத்துறைகள் முடக்கம் நீடிக்கும் வேளையில், நாடாளுமன்றத்தில் உரையாற்ற நான்சி பெலோசி என்னை அழைத்தார். நான் அதனை ஏற்றுக் கொண்டேன்.

ஆனால் பின்னர் அவர் முடிவை மாற்றிக்கொண்டார்.

நாடாளுமன்ற உரைக்கு தாமதமான ஒரு திகதியை அவர் பரிந்துரைக்கிறார். அரசுத்துறைகள் முடக்கம் எப்போது முடிவுக்கு வருகிறதோ, அப்போது தான் நான் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவேன்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# பயங்கரமான மனிதன்

## கோத்தபாயவுக்கு பயப்படும் ரஞ்சன்



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ புனர்வாழ்வு பயிற்சி பெற்றவரா? என்று ஆராய்ந்து பார்க்க சந்தர்ப்பம் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி - உங்களுக்கு கோத்தபாய மீது பயம் உள்ளதா?

பதில் - பயங்கரமான மனிதன் தம்பி. கௌதம புத்த பகவானை மக்கள் வழிபடுகின்றனர். அவரால் தொந்தரவுகளோ துயரங்களோ இல்லை. ஆனால் அங்குலிமாலவைப் பார்த்தால் நாங்கள் பயந்து ஓடுவோம்.

சில கொடூரமான மனிதர்களைக் கண்டால் நாங்கள் பயந்து ஓடிவிடுவோம். கோத்தபாயவைக் கண்டால் மக்களுக்கு பயம். வெள்ளை வான் கலாசாரம் இருக்கின்றது. லசந்த விக்கிரமதுங்கவை கொன்றது யார் என்று தெரியும்.

இதனால், கோத்தபாய மீது எமக்கு பயம் உள்ளது. எனது மாமனார் விஜய குமாரதுங்கவை கண்டு எவரும் பயப்பட மாட்டார்கள்.

கோத்தபாய புனர்வாழ்வு பயிற்சி பெற்ற நாம் ஆராய்ந்து பார்க்கலாம். அமெரிக்கக் குடியுரிமையை இரத்துச் செய்வீர்களா? என ஊடகவியலாளர்கள் கேட்கும் போது கோத்தபாய பயங்கரமாக சிரிக்கின்றார்.

ஒரு விதமாக பார்க்கின்றார். அவர் மனிதாபிமான மற்றவர் என ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொலைக் குற்றச்சாட்டுடையவர்கள் ஜனாதிபதி வேட்பாளராக முடியாது

## கோத்தபாயவுக்கு வெல்கம எதிர்ப்பு

(களுத்துறை)

"நீங்கள் தயார் என்றால் நான் தயார்" என்று தற்போது பலர் கூறுவதால், அவை கேலிக்குரியதாக மாறியுள்ளது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தை மதிக்கும் ' கொலைகளைச் செய்யாத, கொலை குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்காத மற்றும் சிறுபான்மை இன மக்களின் வாக்குகளை பெறக் கூடியவரே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றின் பின், செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் பற்றி தற்போது எப்படியான கதைகளைக் கூறினாலும் இந்த வருடத்தின் இறுதியிலேயே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். அப்போது அதற்கு தகுதியான நபர் தெரிவு செய்யப்படுவார் எனவும் குமார வெல்கம தெரிவித்தார்.



ஜனாதிபதித் தேர்தலுக்கு மக்கள் தயார் என்றால் தானும் தயார் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இந் நிலையில், கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பாகவே குமார வெல்கம மேற்கண்டவாறு கருத்தை வெளியிட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவது தொடர்பில் குமார வெல்கம தொடர்ந்தும் எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளராக ருவான்

(கொழும்பு)

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவை, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளராக கட்சியின் செயற்குழு நியமித்துள்ளது.

அத்துடன், அமைச்சர் சாகல ரத்நாயக்க கட்சியின் உள்ளக நடவடிக்கைக்குப் பொறுப்பான செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.தே.க.தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தின் போதே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது, எதிர்வரும் தேர்தல்களை எதிர்கொள்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்கும் பொறுப்பு, அமைச்சர் கபீர் ஹாசிமுக்கு வழங்கப்பட்டுள்ள அதேவேளை, இந்த வேலைத்திட்டத்தை கட்சியின் அதிகாரிகள் சபையில் முன்வைத்து பின்னர் செயற் குழுவிடம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட வேண்டுமெனவும் யோசனை முன்வைக்கப்பட்டது.



அத்துடன், கம்பரெலிய வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கும் முறைமை தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது. (இ-7)

# அரசியலில் திறமைகளுக்கு முதலிடம் வழங்க வேண்டும்

## சம்பிக்க ரணவக்க வலியுறுத்து

(பதுளை)

அரசியலில் திறமைகளுக்கு முதலிடத்தை வழங்கும் நிலைமையை உருவாக்க வேண்டும் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற



நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

திறமை மற்றும் இயலுமைக்கு முதலிடத்தை கொடுக்கும் நிலைமையை உருவாக்கினாலேயே அரசியலில் முக்கியமான முன்னேற்றம் ஏற்படும்.

நாட்டின் அரசியலில் இந்த நிலைமையை ஏற்படுத்தினால், அரசியல் சிறந்த திசையை நோக்கிச் சென்று தானாகவே வித்தியாசமான நிலைமையை உருவாக்கும் எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வளரும் உறுப்புகள்

"இந்த உலகத்தில் பல்லியாகப் பிறந்திருக்கலாம்... பாவம் மனிதனாகப் பிறந்துவிட்டேன்!" என்று கவலைப் பட்டுக்கொண்டே வந்தார் ஒருவர். "ஏன் ஒரேடியாக இப்படி சலித்துக்கொள்கிறீர்கள்..." என்றேன்.

''பின்ன என்ன சேர்... இதோ பாருங்கள் என் கையை!'' என்று காட்டினார். பார்த்தால்... விரலில் ஏதோ கட்டுப் போட்டிருக்கிறார்! ''ஏன் எங்கேயாவது தவில் வாசிக்கப் போகிறீர்களா'' என்றேன்.

"என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதீர்கள் சேர்! நான் ஏற்கனவே நொந்து போயிருக்கிறேன். என் விரலும் நொந்து போயிருக்கிறது" என்றார்! "விரலுக்கு என்ன ஆகியது சொல்லுங்கள்" என்றேன்.

"கதவு இடுக்கில் கையை வைத்துவிட்டேன்! கதவு பத்திரமாக இருக்கு... விரல் நசுங்கிப் போய்விட்டது!" என்றார். "வெறுமனே கதவு இடுக்கில் கையை வைத்து விட்டால் அது நசுங்கிப் போய்விடுமா" என்றேன். "ஒரு கையைக் கதவு இடுக்கில் வைத்தேன்! அது ஞாபகம் இல்லாமல் இன்னொரு கையாலே சாத்தினேன்... வலித்ததற்கு பின்னர் தான் தெரிந்தது... இன்னொரு கை அங்கே இருக்கும் விடயம்" என்றார்...!

"அதுசரி... இப்போது எப்படி இருக்கிறது நிலைமை" என்றேன். ''டாக்டரிடம் போனேன்... படம் எல்லாம் பிடித்துப் பார்த்தார்... இப்போது கெடு வைத்திருக்கிறார்" என்றார்.

"யாருக்கு?" என்றேன் அதிர்ச்சியோடு...! "விரலுக்குத்தான்... இந்த விரலை சேர்த்துக்கொள்வதா? விட்டு விடுவதா? என்பதை பின்னர் முடிவு செய்து கொள்ளலாம்'' என்று சொல்லியிருக்கிறார்.

அது இருக்கட்டும்... "இந்த உலகத்தில் பல்லியாக பிறந்திருக்கலாம்'' என்று புலம்பிக்கொண்டே வந்தீர்களே. அது எதற்காக என்று கேட்டேன். "அதே கதவில் ஒரு பல்லி அடிக்கடி வாலைக் கொடுத்து விடுகிறது... அப்போது எல்லாம் கதவு இடுக்கில் சிக்கி வால் துண்டாக விழுந்துவிடுகிறது! ஆனால் பாருங்கள்... அதே பல்லிக்கு வால் மறுபடியும் முறைத்து விடுகிறது!

ஆனால் என் நிலைமையைப் பாருங்கள்... இந்த விரலை எடுத்துவிட்டால் மறுபடியும் முளைக்குமா? போனது போனது தானே! அதற்குப்பின்னர் நான் நான்கு விரலுடன் நடமாட வேண்டியதுதானே! ஏன் சேர்! பல்லியினுடைய வாலைவிட மனிதனுடைய விரல் மட்டமாகப் போய்விட்டதே சேர்!"

அவருடைய கஷ்டம் அவருக்கு... அதனால் அவர் பாட்டுக்குப் புலம்பிக்கொண்டே இருக்கிறார்... அவர் ஒரு பக்கம் புலம்பிக்கொண்டே இருக்கட்டும்... அதற்கு இடையில் நான் உங்களுக்கு ஒரு தகவலைச் சொல்லிவிடுகிறேன்...

மனித உறுப்புக்கள் துண்டிக்கப்பட்டால் அது மறுபடியும் வளர்ந்ததில்லை. ஆனால் மரக்கிளையை வெட்டினால் அது மறுபடியும் வளர்ந்துவிடுகிறதே! நம்மிடம் இல்லாதது அதனிடம் அப்படி என்ன அதிகப்படியாக இருக்கிறது!

. தாவரங்கள் வளருவதற்குக் காரணமாக இருப்பது "மெரிஸ்டம்" என்னும் செல்கள். நாம் கிளையை வெட்டினாலும் சரி! இலையைக் கிள்ளினாலும் சரி! இந்த "மெரிஸ்டம்" செல்கள் சும்மா இருக்காது! உடனே வளர ஆரம்பிக்கும். அப்படி வளர்ந்து புதுக் கிளையை உண்டாக்கும்! புது இலையை உண்டாக்கும்!

நமது உடம்பில் அதுமாதிரி ''மெரிஸ்டம்'' செல் இல்லை! அதனால் கை, கால் போனால் மறுபடியும் வளரும் அதிர்ஷ்டமும் இல்லை! பல்லி, மண்புழு இது மாதிரி சில இனங்களுக்கு இந்தச் செல் இருக்கிறது!

அதனால்தான் பல்லி கவலைப்படாமல் கதவு இடுக்கில் கொண்டு போய் வாலை வைக்கிறது! வால் துண்டாகப் போனாலும் "செயற்கை வால்" எங்கே கிடைக்கும் என்று தேடிக்கொண்டு போகவேண்டிய அவசியம் அதற்கு இல்லை!

என்ன சேர் யோசிக்கிறீர்கள்! நமக்கு எல்லாம் ''மெரிஸ்டம்'' செல் இருந்தால் நல்லா இருக்குமே என்றால்? "கதவு இடுக்கில் ஒரு கை இருக்கும்போது இன்னொரு கையாலே அதே கதவை சாத்தக்கூடாது" என்று தெரியவில்லை என்றால் அவன் என்ன சேர் மனிதன்!

ஆனால் ஒன்று... காலம் போகும் போக்கில் வன்முறைகள் அதிகமாக போய்விட்டன! மனிதன் அடிக்கடி கையை இழப்பதும் காலை இழப்பதும் சகஜமாகப் போய்விடும்! செயற்கை கால், செயற்கைக் கை என்று தேடி அலைய வேண்டிய அவசியமும் ஏற்பட்டுப் போய் விட்டது...

அதனால் இதற்கு மேல் பிறக்கும் மனிதன் எல்லாம் ''மெரிஸ்டம்'' செல்லுடன் பிறந்தால் சௌகரியமாக இருக்கும்! படைப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவருக்கு இந்த தகவல் காதில் விழுந்தால்... மனிதனுடைய இந்தக் கோரிக்கையை அவசியம் அவன் பரிசீலனை செய்யவேண்டும்.

# யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சி - 2019

## இன் பிளாட்டினம் அனுசரணையாளராக பிரவுண்ஸ் கைகோர்ப்பு

10 ஆவது யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சியின் பிளாட்டினம் அனுசரணையாளராக பிரவுண் அன்ட் கம்பனி பி.எல்.சி கைகோர்த்துள்ளது. இதனூடாக யாழ்ப்பாணத்தின் சந்தை அபிவிருத்திக்கு தனது உதவிகளை வழங்குவதை மேலும் உறுதி செய்துள்ளது. பல்வேறு அம்சங்களை கொண்டதாக ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்வு "யாழ்ப்பாணத்துக்கான திறவுகோல்" என அழைக்கப்படுவதுடன், ஜனவரி 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை யாழ்ப்பாண நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில்வருடாந்தம் சுமார் 60,000க்கும் அதிகமான விருந்தினர்கள் கலந்து கொள்வதுடன், இந்நிகழ்வுக்கு அனுசரணை வழங்குவதன் மூலமாக குடாநாட்டைச் சேர்ந்த நுகர்வோர்கள் மற்றும் விநியோகத்தர்களுடன் தமது உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

தமது பாரசாதனங்கள், வலுக்கட்டமைப்புகள், சூழல்சார் பொறியியல், விவசாய, மருந்துப்பொருட்கள், பொதுவ்ணிகம் மற்றும் பற்றரி, டயர்கள், நுகர்வோர் இலத்திரனியல் பொருட்கள் மற்றும் வாயு தொடர்பான சேவைகள் பிரிவுகள் போன்றன பிரவுண்ஸ் நிறுவனத்தினால் இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தப்படும். பார்வையாளர்களுக்கு இதனூடாக நிறுவனத்தின் பொருட்களை பயன்படுத்தி பார்க்கக்கூடிய வாய்ப்பு வழங்கப்படும் என்பதுடன், நவீன நுகர்வோர் தொழில்நுட்பங்கள் மற்றும் பார இயந்திரங்களை செயற்படுத்துவது பற்றியும் அறிவை பெற்றுக் கொள்ள முடியும்.

பிரவுன்ஸின் கனரக இயந்திரப் பிரிவானது புத்தாக்க இயந்திரங்கள் மற்றும் கட்டுமான உபகரணங்களில் நவீன மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை பார்வையாளர்களுக்கு முதற் பார்வைக்கு விருந்தாக்குகின்றது. இவை வீல் லோடர்கள், அகழ் இயந்திரங்கள், ஸ்கிட் ஸ்டியர் லோடார்கள், பெக்கோ லோடர்கள், சுயமாக இயங்கும் கொங்க்ரீட் மிக்சர்கள் மற்றும் ஒளி கெட்டிப்பு உபகரணங்கள் உள்ளடக்குகிறது. இப்பிரிவானது உலகப்பிரசித்தம் வாய்ந்த தயாரிப்புகளான **Tata Hitachi** அகழ் இயந்திரங்கள் மற்றும் **ELGI** காற்றமுத்திகள் ஆகியவற் றிற்கு விஷேட விற்பனை ஊக்குவிப்புக்களை வழங்குகின்றது.

நிறுவனத்தின் வலுகட்டமைப்புகள் பிரிவினால் பிரித்தானியாவின் **FGWilson**, இந்தியாவின் **Tata** மற்றும் ஜப்பானின் **Kuboto** போன்றவற்றின் நவீன புத்தாக்கமான வர்த்தக நாம தயாரிப்புகள் காட்சிப்படுத்தப்படும்.




(இடமிருந்து) 1. திரு. வீ.கே.விக்னேஷ், யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கத்தின் தவிசாளர் திரு. ஆஸிம் முக்தார், **Lanka Exhibition & Conference Services (Pvt.) Ltd** நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் கென்னடி ஜோசப், **Brown & Company** யினது வலுப் பிரிவின் சிரேஷ்ட உப தலைவர்.

சூழல் பொறியியல் பிரிவினால் நிகழ்வில் நிபுணர்கள் அமர்த்தப்பட்டு விஜயம் செய்யும் பார்வையாளர்களுக்கு நீரசுத்திகரிப்பு தொடர்பான கேள்விகளுக்கு பதில்கள் வழங்கப்படும்.

பொதுவர்த்தக பிரிவும் சர்வதேச புகழ்பெற்ற வர்த்தக நாமங்களான **Makita, Hyundai, Eclipse, Tailin, Spear & Jackson, and Fire man** போன்றவற்றின் தயாரிப்புகளை காட்சிப்படுத்தும். வர்த்தகசந்தையின்போது 25% விசேட விலைக்கழிவும் வழங்கப்படும்.

நிறுவனத்தின் நுகர்வோர் இலத்திரனியல் பிரிவான பிரவுண் ஸ் டீல் ஸ் ஊடாக, வாடிக்கையாளர்களுக்கு கையடக்க தொலைபேசிகள்முதல்நவீன தொலைக்காட்சிகள் போன்றவற்றுக்கு 75% வரைவிலைக் கழிவுகள் வழங்கப்படும். மேலும் **Sanford** வீட்டு மற்றும் சமையலறை பாவனை பொருட்களுக்கு மேலதிக 10% விலைக்கழிவும் வழங்கப்படும்.

பற்றரிகள் மற்றும் டயர்கள் மீது சிறந்த விலைக் கழிவுகளை எதிர்பார்க்கும் பார்வையாளர்களுக்கு சந்தையில் முன்னணியில் திகழும் பற்றரி நாமங்களான **Exide** மற்றும் **Lucas** என்பவற்றிற்கும் அத்துடன் உலகப்பிரசித்தம் வாய்ந்த **Servis** மற்றும் **Aoteli** டயர்களுக்கும் இந்த நிகழ்வில் விசேட விலைக் கழிவுகளை பிரவுண்ஸிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். இச்சலுகைக்கான மேலதிக வசதியொன்றாக ப்ரவுண்ஸ் பற்றரிகள் மற்றும் டயர்களுக்கு யாழ்ப்பாண விநியோக வலையமைப்பிற்கு உட்பட்ட விநியோகத்தர்களிடமிருந்தும் எந்நேரத்திலும் இவ் விலைக் கழிவுக்ளை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளன.

யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சியினூடாக கிடைத்துள்ள பாரிய வாய்ப்பு பற்றி பிரவுண் அன்ட் கம்பனி பிஎல்சியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி தனேஷ் அபேரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "பத்து வருடகாலமாக நாட்டின் வடக்கு பகுதி வியாபார செயற்பாடுகளுக்காக திறக்கப்பட்டுள்ள போதிலும், பெருமளவான பகுதிகள் இன்னமும் அணுகப்படாமல் காணப்படுகின்றன. எமது பல துறைகளுக்கு யாழ்ப்பாணத்தில் பெருமளவு வாய்ப்புகள் காணப்படுகின்றதை எம்மால் அவதானிக்க முடிந்துள்ளது. இதன் காரணமாக இவ்வாண்டு இடம்பெறும் யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக சந்தை நிகழ்வுக்கு நாம் பிளாட்டினம் அனுசரணை வழங்க முன்வந்துள்ளோம். இது போன்ற நிகழ்வுகளினூடாக, நுகர்வோருக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்பதுடன், சந்தையை முதிர்ச்சி நிலைக்கு கொண்டு செல்ல அடிப்படையாக அமையும். அத்துடன் பிரதேசத்தில் முதலீடுகளை ஏற்படுத்த உதவியாக அமைந்திருக்கும். யாழ்ப்பாணத்தில் காணப்படும் வரையறைகளற்ற வாய்ப்புகளை இது முழுத் தேசத்துக்கும் வெளிப்படுத்துவதுடன், அதில் ஒரு அங்கமாக நாமும் இணைந்துள்ளதையிட்டு பெருமை கொள்கிறோம்." என்றார்.

இந்நிகழ்வை **Lanka Exhibition & Conference Services (Pvt.) Ltd (LECS)** நிறுவனம், யாழ்ப்பாணம வணிகர்சங்கத்துடன் இணைந்து, யாழ்.நகர சபை மற்றும் இலங்கை மாநாடுகள் சபை மற்றும் சர்வதேச வியாபார சம்மேளனம் ஆகியவற்றுடன் உதவியில் ஏற்பாடு செய்துள்ளது. இலங்கை வணிக மற்றும் கைத்தொழில்அமைச்சு மற்றும் தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனம் ஆகியன இந்நிகழ்வை ஊக்குவிக்கின்றன.

**Brown & Company PLC** நிறுவனமானது பல்வகைமை வாய்ந்த்தொரு கூட்டு நிறுவனமாகும். இது சக்தி பிறப்பாக்கம், வீட்டு மற்றும் அலுவலக சாதனங்கள், விவசாய மற்றும் பயிரிடல் துணை சேவைகள், மருந்துப் பொருட்கள், முதலீடுகள், கடல்சார் உற்பத்திகள் மற்றும் ஆரோக்கியம் பேணலுக்கான சாதனங்கள் முதலான பல்வேறு முக்கிய தொழிற்றுறை வணிகச் செயற்பாடுகளை உள்ளடக்கியதும் மிக வேகமாக வளர்ந்து வரும் மிகப் பெறுமதி வாய்ந்த தரநாமங்களின் தொகுப்பினைக் கொண்ட நிறுவனமாக திகழ்கின்றது.

## INSEE Cement Drives Rebuilding Efforts in Flood - Ravaged North

*Over 250 Families to receive 10 cements bags each torebuild destroyed homes*

**23rd January 2019, Jaffna:** INSEE Cement together with the Divisional Secretariats of Puthukkudiyiruppu, Oddusuddan and District Secretariat of Killinochchi, supported rebuilding and renovation efforts of the flood-affected Northern Province today with the distribution of INSEE SANSTHA Cement to over 250worst-hit families across the region. As the country's fore most cement manufacturer with a strong distribution network established island-wide including the northern region, INSEE Cement took swift action to extend assistance to the affected communities, aligning with the company's man date of **'Building the Nation'.**

To address the most immediate and pressing issue of reconstruction of demolished homes, INSEE Cement distributed 10 bags of INSEE SANSTHA each to over 250 displaced families. INSEE SANSTHA, the country's first-ever blended cement product (blended with Portland Limestone under SLS 1253) is known for producing highly workable and durable concrete, meeting the demand for accelerated construction cycles and rapid rebuilding following the flood. INSEE SANSTHA brand draws from a decades-long legacy as the most recognized home-building cement brand in Sri Lanka, with one in every 3 homes in the country built with INSEE SANSTHA Cement.

"We have been active and present in the north over the past few years, and have supported the region's development throughout," commented Jan Kunigk, Executive Vice President – Sales, Marketing & Innovations of INSEE Cement. "The flash floods have indeed been devastating with severe damage sustained by families and homes as well as the region's infrastructure. As the trusted partner in construction across the country, we at INSEE Cement understand our responsibility towards these communities, and will continue to monitor the situation and extend our support beyond this initial donation. We are committed to carrying out our duty in rebuilding the nation."

INSEE SANSTHA, a trusted cement product that has been acclaimed as 'Construction Brand of the Year' for 7 consecutive years is both SLS certified and recognized as a low-Carbon emission product by the Green Building Council of Sri Lanka.

## 1,000 ரூபா சம்பள இணக்கப்பாட்டை எட்ட இரண்டு நாட்கள் காலக்கெடு விதிப்பு-ரவீந்திர

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு இரண்டு நாட்களுக்குள் இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால் அரசாங்கம் தலையிட்டு இம்மாத இறுதிக்குள் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்கும் என தொழில் மற்றும் தொழிற்சங்கம் தொடர்பான அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்தார்.

பெருத்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை 1,000 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சபை ஒத்திவைப்பு பிரேரணையொன்றை நேற்று முன்தினம் முன்வைத்தார். இது தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் ரவீந்திர சமரவீர இதனைத் தெரிவித்தார்.

தோட்டத்தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை 1,000 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. பெருந்தோட்டக் கம்பனிகள் தரப்பிலும், தொழிற் சங்கங்கள் சார்பிலும் பரஸ்பரமான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இன்று முக்கியமான பேச்சுவார்த்தையொன்று நடைபெறவுள்ளது. இதில் பெருந்தோட்டத் துறை அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு ஆகியனவும் கலந்துகொள்கின்றன. இரண்டு நாட்களுக்குள் இணக்கப்பாடொன்றுக்கு வருவதற்கு நாம் காலக்கெடு வழங்குவோம். இரண்டு, மூன்று நாட்களுக்குள் அவர்கள் இணக்கப்பாட்டுக்கு வராவிட்டால் தொழில் அமைச்சு என்ற ரீதியில் எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு இம்மாத இறுதிக்குள் தொழிலாளர்களுக்குத் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் என்றும் அவர் உறுதி மொழி வழங்கினார்.

கடந்த பல வருடங்களாக இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சம்பள அதிகரிப்பு தொடர்பில் தீர்மானம் எடுக்கப்ப்ட்டு வருகிறது. கடந்த ஒக்டோபர் மாதத்தில் இறுதி முடிவு எடுக்கப்படவிருந்த நிலையிலேயே ஆட்சி மாற்றம் ஏற்பட்டு குழப்பம் ஏற்பட்டது. அரசியல் குழப்பத்தின் பின்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கமும் இரண்டு மாதங்களில் எந்தத் தீர்வையும் பெற்றுக் கொடுக்கவில்லை.



இவ்வாறான நிலையில் 2019 ஆம் ஆண்டில் கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் முடிவெடுக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. பெருந்தோட்டத்துறை மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவன் என்ற ரீதியில் அவர்களுக்கு 1,500 ரூபா அடிப்படைச் சம்பளத்தை வழங்கினாலும் மகிழ்ச்சியடைவேன்.

பெருந்தோட்டத்துறை மக்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ச்சியாக அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. எமது ஆட்சிக்காலத்திலேயே பெருந்தோட்ட மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுதும் அங்குள்ள மக்களுக்கு 7 பேர்ச்காணிகளை வழங்கி அவர்களுக்கு வீடுகளையும் கட்டிக்கொடுக்கின்றோம்.

இவ்வாறான நிலையில் அவர்களின் சம்பளப் பிரச்சினைக்கும் தீர்க்கமான முடிவொன்றை இம்மாத இறுதிக்குள் பெற்றுக் கொடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (7)

# விவசாயிகளின் ஜீவனோபாயத்தை பாதிக்கும் படைப்புழு குறித்து ஐ.நா. எச்சரிக்கை!

(கொழும்பு)

**இயற்கையான கட்டுப்பாட்டு முறைகளும் சிறந்த நிர்வாகமும் இல்லாத பட்சத்தில், படைப்புழுப் பீடை, பயிர்களில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி, விவசாயிகளின் ஜீவனோபாயத்தைப் பாதிக்குமென, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் (UNFAO) எச்சரித்துள்ளது.**

இலங்கையில் பரவியுள்ள படைப்புழு பற்றி, குறித்த ஸ்தாபனம் விடுத்துள்ள அறிக்கையிலேயே, மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதியதொரு பிரதேசத்தில் படைப்புழு பரவும்போது, அதனை முற்றாக இல்லாதொழிப்பது நடைமுறையில் இயலாத காரியம் என்றும் எனவே, விவசாயிகள் முறையாக அறிந்து கட்டுப்படுத்த வேண்டிய இன்னுமொரு பீடையாக படைப்புழு மாறியிருக்கிறது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தப் பீடை, அமெரிக்காக் கண்டத்துக்குச் சொந்தமானது. இது 2016ஆம் ஆண்டின் முற்பகுதியில், மத்திய மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் முதற்றடவையாக கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர், ஆபிரிக்க உப-சஹாரா பிராந்தியம் முழுவதிலும், விரைவாகப் பரவியிருந்தது.

2018ஆம் ஆண்டு ஜூலை, இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் படைப்புழு இருந்தமை உறுதிசெய்யப்பட்டதுடன், தொடர்ந்து தமிழ்நாடு உள்ளிட்ட ஏழு மாநிலங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டில், ஏமனிலும் கண்டுபிடிக்கப்பட்ட படைப்புழு, தற்போது இலங்கையிலும் பரவியுள்ளதென, ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

படைப்புழு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கான தெரிவுகள் அடங்கலாக உலகின் பல பாகங்களில் கற்றறிந்த பாடங்களைப் புரிந்துகொள்வதும் இலங்கையின் நிலைமைக்கு போதியளவிலான பதிலளிப்புக்குரிய முதற்படிகளில் அத்தியாவசியமான செயற்பாடுகளாகும் என்றும், அந்த ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்காக, குறித்த ஸ்தாபனமானது, படைப்புழுவின் உயிரியல் மற்றும் சூழலியல் காரணிகள், பீடை பற்றிய தகவல் அறியும் விதம், அதனைக் கட்டுப்படுத்தும் மூலோபாயங்கள் அடங்கலாக பீடையின் பின்புலத் தகவல்களை, விவசாய அமைச்சுடனும் விவசாயத் திணைக்களத்துடனும் பகிர்ந்துகொண்டுள்ளது.

ஆபிரிக்காவில் படைப்புழு பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, குறிப்பாக விவசாயக் களநிலைப் பாடசாலைகளால் வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட படைப்புழு பீடைக் கட்டுப்பாடு (IPM) மூலோபாயங்கள் தொடர்பான களநிலை வழிகாட்டல்கள் மற்றும் வழிகாட்டல் குறிப்புகள், விவசாய அமைச்சுக்கும் விவசாயத் திணைக்களத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன.

கள ஆய்வு அல்லது பொறிகளின் பயன்பாடு மூலம், படைப்புழுக்களின் எண்ணிக்கை மட்டங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்காக, உணவு விவசாய ஸ்தாபனம் வடிவமைத்த **Fall Armyworm Monitoring and Early Warning System (FAMEWS)** என்ற திறன் பேசிச் செயலி போன்ற கருவிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

FAMEWSஆனது, படைப்புழுவை சகல மட்டங்களிலும் கட்டுப்படுத்த உதவுகிறது. அவையாவன, பீடையை இனங்காணுதல், தீர்மானங்களை மேற்கொள்வதற்காக, பீடையின் வியாபகம் பற்றிய வரைபடங்களை உருவாக்கி ஊடுருவல் மட்டத்தை கண்காணித்தல், முக்கியமான இயற்கை எதிரிகளையும் பயனுறுதி வாய்ந்த முறையில் படைப்புழுவைக் கட்டுப்படுத்துவதற்கான முறைகளைக் கற்றுக் கொள்ளுதல் போன்றவையாகும்.

படைப்புழு பீடையைக் கட்டுப்படுத்தி, இலங்கையின் விவசாய சமூகத்தவர்களது ஜீவனோபாயத்தைப் பாதுகாப்பதில், உள்ளூர் அதிகாரிகள் கொண்டுள்ள கரிசனைக்கு ஆதரவு வழங்குவதற்கு உணவு விவசாய ஸ்தாபனம் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

இந்த ஸ்தாபனமானது இலங்கையின் நிலவரத்தை தொடர்ந்து கண்காணித்து, அரசாங்கம் கோரும் தொழில்நுட்ப உதவிகளையும் நிபுணத்துவத்தையும் வழங்குமென, மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# வழுக்கி விழுந்த குடும்பஸ்தர் பரிதாபமாக உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

குளிக்கும் போது சவர்க்காரம் வழுக்கியதில் நிலத்தில் விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் கைதடிப் பகுதியில் இடம்பெற்றது. கைதடி தெற்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான வ.தேவராஜா (வயது-62) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் கிணற்றடியில் குளிப்பதற்கு சென்றுள்ளார். தரையில் இருந்த சவர்க்கார நுரையில் தவறுதலாக வழுக்கி அருகில் இருந்த தொட்டியின் விளிம்பில் தலை அடிபட்டதில் மயக்கமடைந்தார்.

அவரை உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இவரது மரண விசாரணையை தென்மராட்சி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இ.இளம்கீரன் மேற்கொண்டிருந்தார். (இ-9+10)



மக்கள் ஆதரவு மையமானது தன்து சேவை பிரதேசத்தினை விரிவாக்கும் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக குருநகர் பிரதேசத்தினை சேர்ந்த பொருளாதார ரீதியான வலு சேர்க்க வேண்டிய கடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 7 மாணவர்களினை தெரிவு செய்து ஒரு வருடத்திற்கு தேவையான அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை புத்தகப்பை மற்றும் பாடசாலை பாதணிகளினை கொள்வனவு செய்வதற்குரிய உறுதிச்சீட்டு என்பவற்றினை நேற்று முன்தினம் வழங்கியிருந்தனர்.

இந் நிகழ்விற்கான நிதி அனுசரணையாளரும் கணக்காளரும் மக்கள் ஆதரவு மையத்தின் சிறுவர் நல திட்ட இணைப்பாளரும் சமூக சேவையாளருமாகிய ச.சஞ்ஜீவ்பாபு கலந்து சிறப்பித்தார். இவர்களுடன் மக்கள் ஆதரவு மையத்தின் பிரதம நிறைவேற்று பணிப்பாளர் ச.சுரேந்திரன் , தபால் நிலைய ஊழியர் ஜெ.சிம்சன் மற்றும் பெற்றோர்கள், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# தொழிற்சங்கங்கள் வெளியேறினால் அரசிலிருந்து நானும் வெளியேறுவேன்

## பழனி திகாம்பரம் அறிவிப்பு

(கொழும்பு)

கூட்டு ஒப்பந்தப் பேச்சுவார்த்தையிலிருந்து தொழிற்சங்கங்கள் வெளியேறினால், அரசாங்கத்திலிருந்து வெளியேறி தொழிலாளர்களுக்காக போராடுவதற்கு தாம் தயார் என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.



பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இலங்கையிலேயே பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்குத்தான் குறைந்த அளவு சம்பளம் வழங்கப்படுகின்றது. இன்று வெள்ளவத்தையிலிருந்து புறக்கோட்டைக்கு ஆட்டோவில் வருவதாக இருந்தால்கூட 500 ரூபாவுக்கு அதிக தொகையை கட்டணமாக செலுத்த வேண்டும்.

எனவே, அடிப்படை சம்பளமாக 500 ரூபாவை பெறும் எம் தொழிலாளர்கள் எவ்வாறு வாழ்வது? காலத்துக்கு காலம் மட்டும் கூட்டு ஒப்பந்தம் குறித்து பேசாமல், அப் பிரச்சினைக்கு நிரந்தரமான தொரு தீர்வு காணப்பட வேண்டும்.

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தமது உரையின்போது தெரிவித்த சில கருத்துகளை நாம் ஏற்கின்றோம். ஆனால், சில விடயங்களை ஏற்கமுடியாது.

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு தற்போது தனி வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் சில உரிமைகளையும் பெற்றுக்கொடுத்து வருகின்றோம். இவையெல்லாம் இந்த அரசின் கீழ்தான் நடக்கின்றன.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பிரதான தொழிற்சங்கமொன்று தொழிலாளர்களிடம் ஒரு முகத்தையும், முதலாளிமார் சம்மேளனத்திடம் மற்றுமொரு முகத்தையும் காட்டுகின்றது.

எனது தாயும் மலையில் கொழுந்து பறித்தவர். தொழிலாளர்களின் வலி, வேதனை என்னவென்பது எனக்கு தெரியும். எனவே, அவர்களை ஒருபோதும் ஏமாற்றவோ, காட்டிக் கொடுக்கவோமாட்டேன்.

பெருந்தோட்டங்கள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். உரம் உள்ளிட்ட நிவாரணங்களை அரசாங்கம் வழங்கவேண்டும்.

தற்போதைய நிலை தொடருமானால் இன்னும் 20 ஆண்டுகளுக்கு பிறகு தோட்டங்களில் வேலைசெய்ய ஒருவர்கூட இருக்கமாட்டார்கள்.

கூட்டு ஒப்பந்த பேச்சில் தொண்டமானே தன்னிச்சையாக முடிவெடுக்கின்றார். என்ன நடக்கின்றது என்பது ஏனைய தொழிற்சங்கங்களுக்கு தெரிவதில்லை.

அதேவேளை, கூட்டு ஒப்பந்த பேச்சிலிருந்து தொழிற்சங்கங்கள் வெளியேறினால், நானும் அரசிலிருந்து வெளியேறி தொழிலாளர்களுக்காக போராட தயாராகவே இருக்கின்றேன். எமக்கு பதவிகள் முக்கியமில்லை." என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அடிப்படைச்சம்பளம் 1000 ரூபா தராவிட்டால் தோட்டங்களை விட்டு உடன் வெளியேறுங்கள்

## ஆறுமுகன் தொண்டமான் கோரிக்கை

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 1,000 ரூபா என்ற கோரிக்கையிலிருந்து ஒருபோதும் பின்வாங்கப்போவதில்லை. உரிய சம்பளத்தை வழங்க முடியாவிட்டால் பெருந்தோட்டக் கம்பனிகள் தோட்டங்களை அரசாங்கத்திடம் கையளித்துவிட்டு வெளியேற வேண்டும்என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர்ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.



கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள், 600 ரூபாவுக்கு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருப்பதாக வதந்திகள் வெளியாவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை 1,000 ரூபா வாக அதிகரிக்கக் கோரி ஜே.வி.பி கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பைக் கோரி இளைஞர்கள், யுவதிகள் எனப் பலரும் போராடிவருகின்றனர். வருடாவருடம் தோட்டத்தில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. எனினும், கம்பனிகளின் அடக்கு முறை இன்னமும் குறையவில்லை.

தோட்டங்களில் காணப்படும் பல்வேறு குறைபாடுகள் குறித்து தொழில் அமைச்சுக்குப் பல கடிதங்களை அனுப்பியுள்ளோம். தோட்டங்கள் காடாகிப்போயுள்ளமை பற்றிச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இவ்வாறான நிலையில் தோட்டத்தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பள மாக 1,000 ரூபாவைக் கோரியுள்ளோம். சில தோட்டங்களில் கைக்காசாக 1,000 ரூபா வழங்குவதுடன், உணவுக்காக 200 ரூபாவும், போக்குவரத்துக்கு 50 ரூபாவும் வழங்குகின்றனர். இப்படியான சூழலிலேயே நாம் அடிப்படைச் சம்பளமாக 1,000 ரூபாவைக் கோருகின்றோம். கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களான நாம் எமது இந்தக் கோரிக்கையிலிருந்து பின்வாங்கப்போவதில்லை.

2014ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் ஆறு மாதங்கள் இழுபறியாகப் போனபோது அவற்றுக்கான நிலுவைப் பணத்தையும் பெற்றுக் கொடுத்தோம். 2015ஆம் ஆண்டு ஒன்றரை வருடங்கள் இழுபறி ஏற்பட்ட போது நிலுவைப் பணத்தைப் பெற்றுக் கொடுக்க முற்பட்டபோது அரசாங்கத்தின் தலையீட்டினால் இடைக்கால ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

இம்முறை கூட்டு ஒப்பந்தப் பேச்சுவார்த்தையில் அடிப்படைச் சம்பளத்தை 1,000 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரினோம். ஆரம்பத்தில் 600 தருவதற்கு இணங்கினர். போராட்டங்களின் பின்னரும், மகிந்த ராஜபக்ஷ பிரதமரான பின்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 700 ரூபாவாக அதிகரிக்க முன்வந்தனர். எனினும், எமது 1,000 ரூபா கோரிக்கையை முன்வைக்கவில்லை. கேட்ட சம்பள அதிகரிப்பை வழங்காவிட்டால் தோட்டத்தில் பணியாற்றுவதற்கு எவரும் இருக்க மாட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

154

அப்பிரதேசங்களின் நிலையங்களைத் தனித்து நோக்கும்போது அதிகம் அங்கு செய்யப்படாதது போல் தோன்றினாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் முன்னேற்றத்தின் அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன.


சுதேச மிஷனரியின் ஏனைய செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் வருடாவருடம் கிளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் காண்கின்றோம். மேலும் சொல்வதானால் குறிப்பாக இந்த மாவட்டத்தில் எமது பணிக்கு ஆதரவாக இருக்கும் மாவட்டக் கொள்கைகளுக்கும் நடைமுறைக்கும் நாம் நன்றியுடையவர்களாக உணர்கின்றோம்.

இதே அறிக்கையில் மேலும் காணப்படுவதாவது, கிட்டத்தட்ட 24 ஆயிரம் மக்கள் உள்ள இத்திருகோணமலை மாவட்டத்தில் நாங்கள் தான் ஒரேயொரு புரட்டஸ்தாந்து மிஷனாக இருக்கின்றோம். எமக்கு மேலும் அதிகாரம் தேவை. இல்லையேல் இங்கு ஆற்றப்படும் வேலையின் வெற்றி ஈற்றில் காலவரையறையின்றிப் பின்தள்ளப்படும்.

வெஸ்லியன் மிஷனுடைய 1876 ஆம் ஆண்டு அறிக்கையில் காணப்படும் மேலிரண்டு பகுதிகளும் கிழக்கு மாகாணத்தில் கிறிஸ்தவ மதப் பரப்புதல், வெஸ்லியன் மிஷனுடைய கைகளிலேயே உறுதியாக இருந்தென்றும் அங்கு அவர்களின் முன்னேற்றம் குறிப்பிடும்படியாகக் காணப்பட்டதென்றும் எமக்குப் போதுமான சான்றை அளிக்கின்றன.

அதே வருடத்தில் வெளியான மோனிங் ஸ்ரார் இதழும் அந்தக் கூற்றுக்களை ஆதாரப்படுத்துகின்றது. நீண்டகாலமாக இந்த மாவட்டம் இருளில் மூழ்கியிருந்தது. வெஸ்லியன் மிஷனரிமாரின் ஊக்கமிகு செயல்களினால் ஒளி பிறந்துள்ளது.

1885 செப்டெம்பர் 3 ஆம் திகதி மோனிங்ஸ்ராரில் உள்ள அறிக்கையின்படி முல்லைத்தீவு மாவட்ட்மும் வெஸ்லியன் மிஷனின் கல்வி, மத முயற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டது எனத் தெரிகின்றது.



WESLEYAN MISSION-CHAPEL AND SCHOOL-ROOMS, BATTICALOA, CEYLON.

"1871 இல் திருகோணமலை மாவட்டத்தில் 230 புரட்டஸ்தாந்து கிறிஸ்தவரும் 12668 இந்துக்கள் இருந்ததுடன் மட்டக்களப்பில் 52097 இந்துக்களும் 480 புரட்டஸ்தாந்து கிறிஸ்தவரும் காணப்பட்டனர். இத் தொகை சிறியதாகத் தோன்றினாலும் மிஷனரிமாரின் ஆரம்பப் பணிக்காலத் தொகையை விட பிரமிக்கும் வகையில் அதிகரித்திருந்தன. பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் அமெரிக்கன் சிலோன் மிஷனும் சிறிய அளவில் வன்னியிலும் கிழக்கு மாகாணத்திலும் தமது மத கல்விச் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்திருந்தது"

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

இருந்தபோதிலும் கிழக்கு மாகாணத்துடன் ஒப்பிடுகையில் வன்னியில் சுதேசிகள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியது மிகக் குறைவாகும். இப்பிரதேசங்களில் கிறிஸ்தவ மிஷனரிச் சங்கம் குறைவான கவனத்தைச் செலுத்தியிருந்தமையும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் தாம் நிலையாக இருந்து அங்கு செய்தது போலன்றி அமெரிக்கன் சிலோன் மிஷன் வருடம் ஒரு தடவை இந்த மக்களிடம் மதமாற்ற நடவடிக்கைகளுக்காகச் சென்றமையும் இதற்குக் காரணங்களாக இருக்கலாம்.

உண்மையில் கிழக்கு மாகாணத்தின் அனைத்து சுவிசேஷ வேலைகளும் வெஸ்லியன் மிஷன் பொறுப்பிலேயே விடப்பட்டிருந்தன.

ஆயினும் பத்தொன்பதாவது நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் அமெரிக்கன் சிலோன் மிஷன் ஈட்டிய பெறுபேறுகளைப் போன்று கிழக்கு மாகாணத்தில் லெஸ்லியன் மிஷன் பெறவில்லை.

1871 இல் திருகோணமலை மாவட்டத்தில் 230 புரட்டஸ்தாந்து கிறிஸ்தவரும் 12668 இந்துக்கள் இருந்ததுடன் மட்டக்களப்பில் 52097 இந்துக்களும் 480 புரட்டஸ்தாந்து கிறிஸ்தவரும் காணப்பட்டனர். இத் தொகை சிறியதாகத் தோன்றினாலும் மிஷனரிமாரின் ஆரம்பப் பணிக்காலத் தொகையை விட பிரமிக்கும் வகையில் அதிகரித்திருந்தன.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுப்பகுதியில் அமெரிக்கன் சிலோன் மிஷனும் சிறிய அளவில் வன்னியிலும் கிழக்கு மாகாணத்திலும் தமது மத கல்விச் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்திருந்தது.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் அரையிறுதிக் கால ஆரம்பத்தில் இப்பிரதேசங்களில் இவர்கள் மதம் பரப்பும் வேலையில் உற்சாகத்துடன் ஈடுபட்டனர் என்பதற்கு ஆதாரமுண்டு.

அமெரிக்கன் சிலோன் மிஷனின் 1863 ஆம் ஆண்டு உடுப்பிட்டி- யாழ்ப்பாண அறிக்கையில், அவர்கள் வன்னிப் பிரதேசங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்குச் சென்றனர் என்பது தெளிவாகின்றது. இந்த அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகின்றது,

ஏப்ரலில் நான் உங்களுக்கு எழுதிய பின்னர் சாண்டசும் (Sanders) நானும் இருபத்து மூன்று நாள் பயணமொன்றை வன்னியில் மேற்கொண்டிருந்தோம். நாம் மே 28 புறப்பட்டு ஜூன் 19 திரும்பினோம். இது வேதாகம புத்தக விநியோகத்தர்கள், இரண்டு வினாவிடை உபதேசிமார், மட்டக்களப்பு பயிற்சிப் பாடசாலை இளைஞர் இருவர் ஆகியோர் எம்முடன் இந்த மாட்டுவண்டிப் பயணத்தில் இணைந்திருந்தனர்.

நாம் 227 மைல்கள் மாட்டு வண்டியிலும் மன்னாரிலிருந்து 70 மைல்கள் படகிலும் பயணித்து 65 கிராமங்களுக்குச் சென்றோம். அங்கு நாம் ஏறத்தாழ 5 ஆயிரம் மக்களைக் குழுக்களாகவும் தனித்தனியாகவும் சந்தித்து அவர்களுக்கு உரையாற்றியதுடன் பல இடங்களில் நாம் சந்தித்தவர்களுடன் பிரார்த்தித்தோம்.

497 புத்தகங்கள் 10.6 ஸ்ரேலிங் பவுண்களுக்கு விற்கப்பட்டன. இவற்றில் 206 சுவிசேஷ நூல்களும் வேதாகமப் பகுதிகளுமாகும். சங்கத்தின் 175 சிறு பிரசுரங்களும் கிட்டத்தட்ட 26 ஆயிரம் பக்கங்களைக் கொண்ட துண்டுப் பிரசுரங்களும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

(தொடரும்)

# ஹர்த்தாலால் முடங்கியது மட்டக்களப்பு




(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் பிரசேத்தில் ஹர்த்தால் நேற்று வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆளுநரை மாற்றுமாறு கோரி தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு நேற்று வெள்ளிக்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுத்தது.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழும், மட்டுநகர், கல்லடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, பட்டிப்பளை, வெல்லாவெளி மற்றும் வாழைச்சேனை போன்ற பல பகுதிகளிலும் தமிழ் மக்கள் அவர்களது வர்த்தக நிலையங்களை மூடியுள்ளனர். வீதிகளிலும் சன நடமாட்டம் மிகக் குறைந்த அளவிலே காணப்பட்டது.

இருந்த போதிலும் இலங்கை போக்குவரத்திற்குச் சொந்தமான பேருந்துகள் சேவையிலீடுபடுவதையும் ஒரு சில தனியார் பேருந்துகள் சேவையிலீடுபடுவதையும் அவதானிக்க முடிவதோடு, பயணிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதையும் அவதானிக்க முடிந்தது.

அரச காரியாலயங்களுக்கு உத்தியோகத்தர்கள் சென்றுள்ளதோடு பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் சென்றுள்ள போதிலும்மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகம்கொடுக்கவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் பிர தேசங்களில் பொதுவாக அனைத்து நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# காரை. பிரதேச செயலரின் வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்து



(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச செயலாளரின் வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. காங்கேசன்துறை வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் முன்பாக உள்ள மின்கம்பத்துடன் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது. காரைநகரில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது, காங்கேசன்துறை எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு அண்மித்த பகுதிகளில் வாகனத்திற்கு முன்பாக நாய் ஓடியதனால், வாகனத்தை வீதிக்கு அடுத்த பக்கம் திருப்பிய போது எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் முன்பாக இருந்த மணல் சறுக்குண்டு வாகனம் மின்கம்பத்துடன் மோதியதில் வாகனத்தின் முன்பக்கம் முற்றாக சேதமடைந்தது. வாகனத்தில் பயணித்த பிரதேச செயலாளர் மற்றும் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பினார்கள். (7-101)

# மகிந்தவின் சுயரூபம் எவருக்கும் தெரியாது

## ரில்வின் சில்வா கூறுகிறார்



(கொழும்பு)

உண்மையான மகிந்த ராஜபக்ஷவினுடைய சுயரூபம் மறைக்கப்பட்ட பொய்யான ஒருவரே மக்கள் முன் காண்பிக்கப்படுகின்றார். அதனையே மக்கள் நம்புகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஒரு சிறந்த தலைவர் அல்ல. கடந்த காலங்களில் முதலாளித்துவக் கொள்கையினடிப்படையில் செயற்பட்ட ஒருவராவார் எனவும் அவர் தெரிவித்தார்.

சோசலிச மகளிர் சங்கத்தின் விசேட நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இதனைத் தெரவித்தார்.

மக்கள் வாழ முடியாத பாரிய பிரச்சினைகள் நாட்டில் காணப்படுகின்றன.

நாட்டை எவ்வாறு முன்னேற்றுவது என்ற நோக்கத்தை விட எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யார் போட்டியிடுவது என்பதே தற்போதுள்ள பிரதான கட்சிகளுக்கு பெரும் போட்டியாகக் காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1625

Search for people, places and things

### சஞ்சீவ்

கோபத்தில் மிருகத்தை மிஞ்சுகிறான் மனிதன்
பாசத்தில் மனிதனை மிஞ்சுகிறது மிருகம்



### பிரீத்தா

அறிவாளிகளுக்கு அறிவு அதிகம்.
ஆனால் முட்டாள்களுக்கு அனுபவம் அதிகம்



### அம்சா

மற்றவரை ஏமாற்றிவிட்டு சந்தோஷமா
வாழலாம்னு மட்டும் நினைக்காதீங்க...
உங்களுக்கும் அந்த நிலைமை வரும்



### வேணி

நீ நீயாக வாழக் கற்றுக்கொள் சிலர் உன்னை
விரும்புவர், சிலர் உன்னை வெறுப்பர்..
கவலைப்படாதே... இது உன் வாழ்க்கை



### கிருஷ்ணா

விட்டுக்கொடுக்கும் தன்மை நமக்கிருந்தால்
நாம் விட்டுக்கொடுத்த அனைத்தும்
ஒருநாள் நம்மைத் தேடிவரும்



### ராகினி

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் நீ
அன்னையை மட்டும் இழந்தால் நூறு
சதவீதம் நீ அநாதைதான்!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# எழுதி வைத்துக் கொள்ளுங்கள் நாங்களே வெற்றி பெறுவோம்

## அகிலவிராஜ் காரியவசம் உறுதி

(கொழும்பு)


ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் உருவாகும் கூட்டணியின் வேட்பாளர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் வெற்றிபெறுவார் என அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதனை எழுதி வைத்துக் கொள்ளுங்கள் எனவும் அவர் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது தற்போது செயற்படும் மத்திய செயற்குழுவே தொடர்ந்தும் செயற்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணியே வெற்றி பெறும் என தெரிவிக்கப்படுவது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார். இதற்கு பதிலளித்து பேசிய அவர்,

"ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் உருவாகும் கூட்டணியின் வேட்பாளர் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் வெற்றிபெறுவார். இதனை எழுதி வைத்துக்கொள்ளுமாறு" அவர் தெரிவித்தார். (இ-7)

போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ். ஊரெழு கணேச வித்தியாசாலை சமூகத்தினரால் போதை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த பேரணி பாடசாலையில் ஆரம்பித்து திலீபன் வீதியூடாக சென்று பலாலி வீதியூடாக ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத்தை அடைந்தது. பின்னர் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டு குறித்த பேரணி பாடசாலையை வந்தடைந்தது. (படங்கள்:- பொ.சோபிகா)

# மாலியில் குண்டு வெடிப்பு; இரு இலங்.படையினர் பலி

மாலியில் ஐ.நா. அமைதிப்படையினர் மீது இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் இலங்கையர் இருவர் இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்ட இலங்கை படையினரில் ஒருவர் இராணுவக்கப்டன் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. அமைதிப்படையில் இடம்பெற்றுள்ள இலங்கை படையினர் மாலியின் டௌன்ட்ஜா என்ற பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை அவர்களது கவசவாகனத்தை இலக்கு வைத்து குண்டு தாக்குதல் இடம்பெற்றதில் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த தாக்குதலில் கப்டன் தர அதிகாரியொருவரும் மற்றொரு இராணுவ வீரரும் கொல்லப்பட்டுள்ளதை இலங்கை இராணுவ வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

காயமடைந்த மூன்று இலங்கை இராணுவத்தினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இலங்கை இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.நா. இந்த சம்பவம் குறித்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (7)

## இ.போ.ச.பஸ் மீது கல்வீச்சு

### மூவர் படுகாயம்




(கொழும்பு)

வாழைச்சேனையிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் வாழைச்சேனை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் மீது, வந்தாறுமூலை பிரதேசத்தில் வைத்து நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்கள் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் பஸ்ஸின் முன் கண்ணாடி சேதமடைந்ததுடன், பஸ் சாரதி, பயணிகள் இருவர் உட்பட மூவர் காயமடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாண ஆளுநராக எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா நியமிக்கப்பட்டதைக் கண்டித்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதால், குறைந்த எண்ணிக்கையிலான போக்குவரத்துச் சேவையே நேற்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 130 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 250 | 200 | 250 |
| தக்காளி | 80 | 80 | 100 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 80 | 40 | 60 |
| கோவா | 80 | 60 | 80 | 70 | 80 |
| கரட் | 80 | 120 | 100 | 100 | 120 |
| பூசணி | 50 | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 120 | 80 | 65 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 55 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 160 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 80 | 80 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 40 | 50 | 40 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 140 | 100 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 80 | 80 |
| கறிமிளகாய் | 150 | 200 | 140 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 800 | 550 | 1000 |
| போஞ்சி | 50 | 80 | 100 | 80 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | – | 130 | 100 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 130 | 140 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 100 | 30 | 120 |
| முள்ளங்கி | 30 | 60 | 60 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 15 | 50 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | 50 | 80 | 50 | 100 | 80 |

# செய்தித்துளிகள்

## பாடசாலைக்குள் நுழைந்த மர்ம குழு மாணவன் மீது கொடூரத் தாக்குதல்!

(மாத்தறை)

மாத்தறை- வெலிகம பகுதியிலுள்ள பாடசாலைக்குள் நுழைந்த குழுவொன்றால் மாணவர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நான்கு பேர் கொண்ட குழுவால் அவர் தாக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தாக்குதலுக்குள்ளான மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கான காரணம் இதுவரை அறியப்படாத நிலையில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## இலங்கையில் கடந்த வருடம் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த ஆண்டில் இலங்கையில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு 307 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி இடம்பெற்றுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டு அது 4 மில்லியன் கிலோகிராமால் குறைவடைந்துள்ளது.

வரட்சி, இரசாயன பதார்த்தங்களின் பயன்பாடு மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை ஆகியன தேயிலை உற்பத்தி வீழ்ச்சிக்கு காரணமாகியுள்ளன.

எனினும் கடந்த ஆண்டு உலக தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளதை எடுத்துக்காட்டுவதாக சர்வதேச தேயிலை குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பழுதான அரிசியை வர்ணம் தீட்டி விற்பனை செய்தவருக்கு எச்சரிக்கை

பழுதான அரிசி வகைகளை வர்ணம் தீட்டி விற்பனை செய்த வர்த்தகருக்கு பதுளை நீதவான் நீதிமன்ற நீதிபதி சமிந்த கருணாதாச கடும் எச்சரிக்கை செய்து மூவாயிரம் ரூபாவினை அபராதமாகவும் விதித்தார்.

இவ் அபராதப்பணம் செலுத்தத் தவறின் ஒரு மாதம் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியும் ஏற்படுமென்றும் நீதிபதி தெரிவித்தார்.

ஹாலி-எலப் பகுதியின் கீரியகொல்லை என்ற இடத்தின் வர்த்தகரான டி.எம்.ஜயசேன என்பவருக்கே மேற்படி எச்சரிக்கையும் அபராதமும் விதிக்கப்பட்டது.

ஹாலி-எல சுகாதார சேவைப் பிரிவிற்கு கிடைக்கப் பெற்ற தகவலொன்றினையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் பாவனைக்குதவாத பழுதான அரிசி வகைகளுக்கு வர்ணம் தீட்டி கூடிய விலைக்கு அவ் அரிசியை விற்பனை செய்தமை குறிப்பிடத்தக்கது. (7)

## அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன உள்ளிட்டோரை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் பேர்பெச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன, நுவன் சல்காது மற்றும் சசித் தேவதந்திரி ஆகியோரை நீதிமன்றில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த நபர்களை நாளை மறுதினம் 28 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதான நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார். (7)

## புதையல் தோண்டிய இருவர் கைது

மாத்தளை - எடிபொல - தல்கஹகொட ரஜமஹா விகாரையில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த விகாரையில் 05 சிலைகளை சேதப்படுத்தியுள்ளதாக பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 20 மற்றும் 25 வயதுடையவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (7)

## வெளிநாட்டு துப்பாக்கிகளுடன் இருவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டு தயாரிப்பு துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றையதினம் களுத்துறை பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் நடத்திய சுற்றிவளைப்பில் அனுமதிப்பத்திரம் இன்றி வைத்திருந்த 05 துப்பாக்கிகள் மற்றும் 05 தோட்டாக்களுடன் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

பதுரலிய, அத்வெல்தொட்ட பாலத்துக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்ட இருவரும் இரத்தினபுரி, கலவானை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)




# நான் உயிர் துறக்கமாட்டேன்



பண்டைக் காலத்தில் சீன நாட்டில் ஒரு மூதாட்டி வாழ்ந்து வந்தாள். அவளுக்கு ஐந்து மகன்கள் இருந்தனர். ஐவரும் ஒரே மாதிரியாக இருப்பர். உடல் தோற்றத்தை கொண்டு அவர்களை அடையாளம்கண்டு கொள்வது கடினமே. ஆனால், அவர்களின் ஆற்றலில் வேறுபாடு இருந்தது. முதல் மகன் கடலையே குடித்து விடுவான். இரண்டாம் மகனுடைய கழுத்து இரும்பைப் போல் வலுவானது.

அடுத்தவனின்ஆற்றல்என்ன தெரியுமா? அவசியம் ஏற்பட்டால் அவன் தன் கால்களின் நீளத்தை அதிகப்படுத்திக்கொள்வான். அந்த நீளத்திற்கு வரம்பே கிடையாது. அதற்கும் அடுத்தவனைத் தீ நெருங்கவே நெருங்காது. ஐந்தாமவனால் மூச்சு விடாமல் உயிர் வாழ முடியும். இப்படிப்பட்ட அபூர்வ ஆற்றல் பெற்றிருந்தாலும் அவர்கள் அதை வெளிக் காட்டிக் கொள்வதில்லை.

மூத்த மகன் மீன் பிடிப்பதில் வல்லவன். நாள்தோறும் கடலுக்குச் சென்று ஏராளமான மீன்களைப் பிடித்து வருவான். இதைப் பார்த்த அக்கம் பக்கத்தார், "நீ காலையில் மீன் பிடிக்கப் போகும் போது எங்கள் வீட்டு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு போ... தயவு செய்து அவர்களுக்கு மீன் பிடிக்கும் வித்தையை கற்றுக் கொடு" என்று கெஞ்சி கேட்டுக் கொண்டனர்.

ஒரு நாள் அவன் கடற்கரைக்குச் சென்ற போது பையன்கள்,பலரும் கூடப் போயினர். எல்லாரும் கரை மீது நின்றனர். மூத்த மகன் வாயை வைத்து கடல் நீரை குடித்தான். குடித்துக் கொண்டே இருந்தான். கடல் நீர் வற்றிக் கொண்டே போனது. கடைசியில் கட்டாந்தரைபோல் ஆகிவிட்டது. மீன்கள் எல்லாம் துடித்துக் கொண்டு தரையில் கிடந்து தவித்தன. கூட வந்த பையன்கள் உள்ளே இறங்கி அங்கிருந்த மீன்களையும், நண்டு முதலியவற்றையும் பார்த்து ரசித்த வண்ணமாய் இருந்தனர்.

"உங்களுக்கு வேண்டிய மீன்களை அள்ளிக் கொண்டு வாருங்கள். நேரமாயிற்று. வீட்டுக்கு திரும்ப வேண்டுமல்லவா?" என்று கத்தினான் மூத்த மகன். அவன் கூறியதை அந்த சிறுவர்கள் காதில் போட்டுக் கொண்டால்தானே? அவர்கள் வரவில்லை. எவ்வளவு நேரத்திற்குத் தான் அந்த மூத்தமகன் தன் குடலுக்குள் கடல் நீர் முழுவதையும் வைத்திருக்க முடியும்? கடைசியாய் ஓர் எச்சரிக்கை விடுத்தான்.

"வந்து விடுங்கள்! விரைவில் கரைக்கு வந்து விடுங்கள். இனியும் என்னால் கடல் நீரை வயிற்றுக்குள் வைத்துக் கொண்டிருக்க முடியாது" என்றான்.

சிறுவர்கள் அவன் சொற்களைக் கொஞ்சம் கூட செவி மடுத்ததாகத் தெரியவில்லை. அவனாலோ அதற்கு மேலும் தண்ணீரை வயிற்றுக்குள் நிறுத்தி வைத்திருக்க முடியவில்லை. வேறு வழியின்றி தண்ணீர் முழுவதையும் உமிழ்ந்து விட்டான். அத்தனை பேரும் நீரில் மூழ்கி இறந்து போயினர்.

மிகுந்த வருத்தத்துடன் வீடு திரும்பினான். அந்த சிறுவர்களுடைய பெற்றோர் அவனிடம் வந்து, "எங்கள் பிள்ளைகளுக்கு மீன் பிடிக்கும் வித்தையைக் கற்று கொடுத்தாயா? அவர்கள் எவ்வளவு மீன் பிடித்தனர்..." என்றெல்லாம் ஆசை மிகுந்த ஆர்வத் துடிப்புடன் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போயினர். மூத்த மகனின் நெஞ்சு சஞ்சலப்பட்டது. உண்மையில் நடந்ததை எடுத்து சொன்னான்.

"அவர்களுக்கு நான் எத்தனையோ முறை எச்சரிக்கை செய்தேன். அவர்கள் கேட்கவில்லை. என்னால் கடல் நீரை வயிற்றுக்குள் அடக்கிக் கொள்ள முடியாத நிலை வந்தது" என்றான்.

பிள்ளைகளை இழந்த பெற்றோர் நிம்மதி அடையவில்லை. வழக்குத் தொடுத்தனர். விசாரணை நடந்தது. நீதிபதி அவன் கழுத்தை வெட்டிக் கொல்லுமாறு தீர்ப்பு வழங்கினார்.

தண்டனை நிறைவேற்றப்படும் முன்பு குற்றவாளி நீதிபதியைப் பார்த்து "மாட்சிமை தங்கிய கருணை உள்ளம் வாய்ந்த நீதிபதி அவர்களே! நான் சாகும் முன் என் அருமைத் தாயைப் பார்த்து வர எனக்கு அனுமதி வழங்க வேண்டும்" என்று வேண்டினான். நீதிபதியும் அனுமதி கொடுத்தார்.

அந்த மூத்தவன் தன் வீட்டை அடைந்தான். தாயிடமும், சகோதரர்களிடமும் தனக்கு நேர்ந்த கதியை எடுத்துக் கூறினான். அப்பொழுது இரண்டாம் மகன், "உனக்குப் பதிலாக நான் போகிறேன். சகோதரர்களாகிய நாம் எல்லாரும் ஒருவரைப்போல் ஒருவர் இருப்பதால் யாராலும் ஆள் மாறாட்டத்தைக் கண்டு கொள்ள முடியாது" என்றான்.

ஆகவே, மூத்த மகனுக்குப் பதிலாக இரண்டாம் மகன் நீதிமன்றத்தை அடைந்தான். தண்டனையை நிறைவேற்ற ஆயத்தம் செய்யப்பட்டது. அவன் கழுத்து ஒரு கட்டையின் மீது இருக்குமாறு வைக்கப்பட்டது. வாள் ஓங்கி அவன் கழுத்தில் வீசப்பட்டது. அந்த வாள் இரும்புக் கழுத்துக்குள் பாய முடியுமா? முனை மழுங்கிப் போயிற்று. அவ்வாளைத் தீட்டினர். மீண்டும் வாள் வீசப்பட்டது. வாள் தெறித்துஒடியது. எனவே, அதிகாரி நீதிபதியிடம் முறையிட்டார்.

"இவன் கழுத்து இரும்புக் கழுத்து என்று நினைக்கிறேன். யாராலும்இவனை வாள்கொண்டு கொல்லவே முடியாது" என்றான்.

நீதிபதி தம் தீர்ப்பை சற்றே மாற்ற வேண்டியதாயிற்று.

"நீரில்மூழ்க வைத்து இவனை சாகடியுங்கள்" என்றார். தீர்ப்பு நிறைவேற்றப்படும் முன் குற்றவாளி அவரைப் பார்த்து தன் வீட்டுக்குப் போய் தன் தாயைப் பார்த்து வர அனுமதி கேட்டான். இம்முறையும் அவனுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது.

வீட்டிற்கு போய் நடந்ததை சொன்னான் அந்த இரண்டாம் மகன். அப்போது மூன்றாம் மகன், "உனக்காக நான் போகிறேன்" என்றான்.

அதிகாரிகள் அவனைப் படகில் ஏற்றிச் சென்று கடலில் தள்ளினர். அவன் தண்ணீருக்குள் விழுந்தான். அவன் கால்கள் விடுவிடு என்று வளர்ந்தன. அவ்ன் தலை தண்ணீருக்கு மேலேயே இருந்தது. அவன் மூழ்கிப் போய் விடவில்லை. அதிகாரிகள் ஆச்சரியப்பட்டனர். அவனை இன்னும் ஆழமான இடத்திற்கு கொண்டு சென்று தள்ளினர். அந்த இடத்திலும் அவன் தலை யும், கழுத்தும் தண்ணீருக்கு மேலேயே இருந்தன. அந்த அளவுக்கு அவன் கால்கள் நீண்டன.

இதைக் கேள்விப்பட்ட நீதிபதி தம் தீர்ப்பில் மீண்டும் ஒரு மாற்றம் செய்தார். கொதிக்கும் எண்ணெயில் இவனை தள்ளி விடுங்கள் என்றார். முன்போலவே குற்றவாளி தன் தாயாரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டான்.

வீடு சென்றவன், குடும்பத்தில் உள்ளவர்களிடம் பேசிக் கொண்டிருந்த போது அவனுக்கு நேர் இளையவன் போய் தண்டனையை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லிவிட்டு சென்றான்.

அதிகாரிகள் ஒரு கொப்பறையில் எண்ணெயைக் கொதிக்க வைத்து அதனுள் அவனை இறக்கினர். ஆனால், அவனோ அதனுள் நீச்சலடிக்கத் தொடங்கி விட்டான். தீயை மேலும் அதிகப்படுத்தினர். என்ன தான் செய்தாலும் அவனை நெருப்பில் வேக வைக்க முடியவில்லை. அதிகாரிகளுக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அப்போது ஊரார் அங்கு வந்தனர். "இவனைக் கொல்வது எப்படி?" என்று எங்களுக்குத் தெரியும். அதை நாங்கள் செய்திட கட்டளை இடுங்கள்!" என்று வேண்டினர். நீதிபதியும் இசைவு தந்தார்.

ஆழக்குழி நோண்டி அதற்குள் அவனை நிக்க வைத்து மண்ணைப் போட்டு மூடினர்.

ஆனால் நடந்தது என்ன? அவனுக்குத் தான் நாள் கணக்கில் மூச்சை அடக்கி உயிருடன் இருக்கத் தெரியுமே! ஓரிரு நாட்கள் சென்றதும் யாரும் அங்கு இல்லாத பொழுது, மண்ணை தோண்டி தள்ளிக் கொண்டு வெளியே வந்தான். வீடு திரும்பிய அவன் தாயிடமும் சகோதரர்களிடமும் தன் அனுபவத்தைச் சொன்னான். அதன் பிறகு வெகுகாலம் அச்சகோதரர்கள் தங்கள் தாயுடன் மகிழ்ச்சியாய் வாழ்ந்தனர்.

## பொது அறிவு தகவல்கள்

- இந்தியாவின் விடிவெள்ளி ராஜாராம் மோகன்ராய்.
- ஈகிள் என்ற நட்சத்திரம் சூரியனை விட 8 ஆயிரம் மடங்கு பிரகாசமுடையது.
- மனித உடல் 60 சதவீதம் நீரால் ஆனது.
- காகிதம் கண்டுபிடிப்பதற்கு முன்பு பட்டங்கள் பட்டுத் துணியால் செய்யப்பட்டன.
- மிகப்பெரிய விரிகுடாவான வங்களா விரிகுடாவின் நீளம் 2,250 மைல்கள்.
- ஸ்ரீவெங்கடேஸ்வரா தேசியப் பூங்கா ஆந்திராவில் உள்ளது.
- உலகில் எந்த ஒரு நாட்டின் மீதும் போர் தொடுக்காத ஒரே நாடு - இந்தியா

## ஒளி வரும் தூரம் என்றால் என்ன?

பூமியில் உள்ள தூரங்களைக் குறிப்பிட கிலோ மீற்றர், மைல் போன்ற அளவுகளைப் பயன்படுத்துகிறோம். ஆனால், விண்வெளியில் இருக்கும் நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்களுக்கு இடையே உள்ள தூரத்தைக் குறிப்பிட இந்த அளவுகள்பயன்படாது. எனவே, 'ஒளிவருட தூரம்' என்ற அளவைப் பயன்படுத்துகிறோம்.

ஒரு விநாடிக்கு ஒரு இலட்சத்து 86 ஆயிரம் மைல் தூரத்திற்குப் பாய்ந்து செல்லக் கூடிய ஆற்றல் படைத்தது ஒளி. இந்த ஒளி ஒரு வருடத்தில் செல்லும் தூரம் 6 டிரில்லியன் மைல். அதாவது 60 இலட்சம் கோடி மைல். இதையே ஒரு 'ஒளிவருட தூரம்' என்கிறோம்.

சூரியனுடைய ஒளி பூமியை வந்தடைய 8 நிமிடங்கள் ஆகின்றன. இதைப்போல கடைசி கிரகமான புளூட்டோவைச் சென்றடைய 4 1/2 மணி நேரமாகிறது. எனவே, புளூட்டோ கிரகம் சூரியனில் இலிருந்து 4 1/2 ஒளிமணி நேர தூரத்தில் உள்ளது என்று சொல்லலாம்.

அதேபோல 'பிரக்சிமா சென்டாரி' என்ற நட்சத்திரத்தை சூரியஒளி சென்றடைய 4 1/2 வருடங்கள் ஆகின்றன. எனவே, இந்த நட்சத்திரம் சூரியனில் இருந்து 4 1/2 ஒளிவருட தூரத்தில் இருப்பதாகக் குறிப்பிடலாம்.

தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிவும், திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும் தான் வெற்றிபெறுவதற்கான இரு வழிகள். – லெனின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கின் ஆளுநர் அவர்களே! யாரிடம் முறையிடுவது?

வடக்கின் ஆளுநராகப் பதவி ஏற்றுள்ள கலாநிதி சுரேன் ராகவன் அவர்களுக்கு அன்பு வணக்கம். இது நாம் தங்களுக்கு எழுதும் முதலாவது கடிதம்.

ஏலவே இரண்டு மூன்று விடயங்களை இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம். எனினும் அது பற்றி தாங்கள் கவனம் செலுத்துவீர்களா என்பதைக் கூட அறிய முடியவில்லை.

அல்லது ஊடகச் சார்பின் காரணமாக இவ்விடத்தில் எழுதப்படும் விடயம் பற்றி தாங்கள் கவனிக்கத் தேவையில்லை என்று நினைக்கிறீர்களா என்பது கூட எமக்கு தெரியவில்லை.

எதுவாயினும் எங்கள் மக்கள்படும் கஷ்டங்கள் பற்றி தங்களின் கவனத்திற்கு கொண்டு வருவதென்பது ஒரு பொறுப்பு வாய்ந்த பத்திரிகையின் கடமையென்ற வகையில் இக் கடிதத்தை தங்களின் மேலான கவனத்திற்காக எழுதுகின்றோம்.

இப்போது வடக்கு மாகாணத்தில் அரச உயர் அதிகாரிகளிலும் அரச உத்தியோகத்தர்களிலும் பலர் அலுவலகங்களின் இருப்பதில்லை என்றும் இதனால் பொதுமக்கள் மிகப்பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர் என்ற குற்றச்சாட்டும் பரவலாக பேசப்படுகிறது.

இதை நாம் கூறும்போது செய்யும் தொழிலே தெய்வம் என்ற மனச்சாட்சியுடன் கடமை ஆற்றுகின்ற அரச சேவையாளர்களும் நம் மத்தியில் இருக்கிறார்கள் என்பதும் அவர்கள் என்றும் மக்களால் போற்றப்படுகின்றனர் என்பதையும் இவ்விடத்தில் கூறிவைக்க விரும்புகின்றோம்.

அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் உரிய நேரங்களில் கடமையில் இல்லாமையால் பொதுமக்கள் அலைந்து திரிகின்றனர். எனினும் இதுபற்றி யாரிடம் முறையீடு செய்வது என்ற எந்த அறிவித்தலும் கிடையாது.

சுகவீனம் என்றால் அன்புலன்ஸ் வண்டிக்கு அறிவிக்க தொலைபேசி இலக்கம் உண்டு. இதை போல் தீயணைப்பு, மனித உரிமை, போதைவஸ்து, தகவல் அறிதல், அனர்த்த முகாமைத்துவம், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு என எல்லாவற்றுக்கும் அவசர தொலைபேசி இலக்கம் உண்டு.

ஆனால் ஒரு நிறுவனத்தில் அதிகாரி இல்லை, அவரைச் சந்திக்க முடியவில்லை என்றால் யாருக்கு அறிவிப்பது என்பது தான் நம் கேள்வி.

பொது மக்களுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் சில அதிகாரிகள் இருப்பதே இல்லை. எப்போது சென்றாலும் கூட்டத்திற்கு சென்று விட்டார் என்பது தான் அங்கு கிடைக்கின்ற பதிலாக இருக்கிறது.

ஐயா, நாம் கேட்பதெல்லாம் கூட்டம் யாருக்கானது? ஒவ்வொரு நாளும் கூட்டம் நடக்கிறது என்றால் அந்தக் கூட்டத்தில் என்னதான் சொல்லப்படுகிறது என்பது புரியவில்லை.

எனவே, அரச அமைப்புகளில் அதிகாரிகள் இருப்பதில்லை என்ற பொதுமக்களின் குற்றச்சாட்டை நீங்கள் கட்டாயம் நிவர்த்திக்க வேண்டும். இது தொடர்பில் விசேட தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிவித்து எந்த அலுவலகங்களில் அதிகாரிகள் இல்லையோ; அரச உத்தியோகத்தர்கள் இல்லையோ அது பற்றி தொலைபேசியில் தகவல் தரக்கூடியதான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்பதுடன், மாதத்தில் ஒரு தடவைக்கு மேல் உயர்மட்டக் கூட்டம் நடப்பதை தவிர்ப்பதும் இங்கு முக்கியமானது.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக அலுவலக செயற்பாடுகளை கண்காணிக்க சி.சி.ரி.வி கமராக்கள் பொருத்துவது முக்கியமானது. இதை நாம் கூறும் போது சிலர் நம்மீது கோபம் கொள்ளலாம்.

**ஆனால், அவர்களுக்கு நாம் கூறக்கூடியது அலுவலகக் கதிரைகளில் குந்தியிருந்து பொதுமக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைத்துப்பாருங்கள். உங்களை அறியாமல் உங்களுக்கு தெய்வீகஞானம் திரட்சிபெறும். இது சத்தியம்.**

# மாகாணத் தேர்தலை பிற்போடுவதே அரசின் தேவையாக உள்ளது

## விஜித ஹேரத் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தலை பிற்போடுவதற்கான ஆயுதமாக தேர்தல் முறையை அரசாங்கம் பயன்படுத்தி வருவதாகமக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றம் சாட்டியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், மாகாண சபை தேர்தலை பிற்போடுவதே அரசாங்கத்தின் உண்மையான தேவையாகவுள்ளது. அரசாங்கத்திற்கு உண்மையான தேவையிருந்தால் தேர்தலை நடத்தலாம்.

ஆனால், தேர்தல் முறையை ஒரு ஆயுதமாக பயன்படுத்தி அரசாங்கம் தேர்தலை பிற்போட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், எந்த முறையிலான தேர்தலை எதிர்கொள்வதற்கும் நாம் தயார்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதில் எவ்வித தொழில்நுட்ப ரீதியான பிரச்சினையும் இல்லை. முதலில் மாகாண சபை தேர்தலை நடத்துங்கள். பிற்போடுவது நல்லதல்ல.

அரசியல் அதிகார போராட்டத்தில் மூழ்கி மக்களின் வாக்குரிமையை மறுக்க வேண்டாம். தேர்தலை துரித கதியில் நடத்துவதற்கான உரிய நடவடிக்கை எடுங்கள் எனத் தெரிவித்தார். (ம-3)

# முஸ்லிம் நிலமீட்பு போராட்டத்தை ஜனநாயகமுறையில் தொடரலாம்

## நீதிமன்றம் அறிவுறுத்தல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்கள் நில மீட்பிற்காக தொடர்ச்சியாக கேப்பாப்பிலவு மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

இன்றைய தினமும் பாரிய தொரு போராட்டம் ஒன்றினை நடத்தவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர். இந் நிலையில் முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேப்பாபுலவு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இருவருக்கும் கேப்பாபுலவு பாதுகாப்பு பிரிவு படை தலைமையகத்திற்கு முன்னால் அமைதியினை சீர்குலைக்கும் நோக்குடன் போராட்ட சதி தொடர்பானது என அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டு நேற்று முன்தினம் மாலை வேளை இருவரின் வீடுகளுக்கும் சென்ற பொலிஸார் அழைப்பாணைகளைக் கொடுத்து, நேற்றுக் காலை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலை யாகுமாறு அறிவித்திருந்தனர்.

இந் நிலையில் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்ட இருவரும் நேற்றையதினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில், நீதிபதி லெனின் குமார் அவர்களின் முன்னிலையில் முன்னிலையாகியிருந்தனர்.

அந்த வகையில் நடைபெற்ற வழக்கு விசாரணைகளில், ஜனநாயக முறையில் தொடர்ந்தும் போராட்டத்தினை முன்னெடுக்குமாறு நீதிமன்றம் தெரிவித்ததாக, நீதி மன்றில் முன்னிலை யானவர்களில் ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-281)

### தோல்வியைக் கண்டு...

● தோல்வி என்பது நல்ல பாடம், நல்ல அனுபவம், இன்றுவரை பல சாதனைகளைப் படைத்தவர்கள் தோல்வியைச் சந்தித்திருக்கமாட்டார் கள் என்று சொல்லமுடியாது. 100 இற்கு 90 பேர் ஏதாவது ஒரு வகையில் அல்லது ஒருமுறையாவது தோல்வியைச் சந்தித்திருக்கக்கூடும். அவர்கள் சோர்வு அடைந்திருந்தால் எப்படி? சாதனைகளைப் படைத்திருக்க முடியும்.

● தோல்வியைக் கண்டு பயப்படாதவர்கள்தான் வெற்றியடைகிறார்கள். தொடர்ந்து வெற்றியைப் பெறுவதன்மூலம் சாதனை படைத்திருக்கின்றனர்.

● தோல்வியைக் கண்டு துவண்டுவிடக்கூடாது. முழு மனதோடும் ஈடுபாடுகளுடனும் முயற்சி செய்தால் வெற்றி என்பது விரல் நுனியில் என்பதை உணர்ந்திட வேண்டும். தோல்விக்கு அஞ்சுபவன் கோழை. எனவே தோல்வி என்பது வெற்றிக்கு முன்மாதிரி என்று நினைத்து வென்றிட வேண்டும். கோடைக்காலத்தில் உதிர்ந்து சருகுகள், வசந்த காலத்தில் மீண்டும் துளிர்க்குமென்று கருதி வாழ்ந்தால் தோல்வியே இல்லாது வாழலாம்.

### இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

கோவிலின் கோபுரத்தின் மேல் கலசங்கள் நிறுத்தப்படும் தத்துவம் இதுதான். கோபுரத்திற்கு மேலே அமைகின்ற கலசம் சிகை போன்றது. அது ஞானச்சுடராக விளங்குகின்றது. கோபுரத்தின் அளவுக்கு ஏற்ப 3,5,7,9 என்று கலசங்கள் சிற்ப நூலில் விதித்தபடி அமைக்கவேண்டும். கோபுரம், ஸ்தூல லிங்கம், மூலஸ்தானத்தில் இருப்பது சதாசிவ லிங்கம், பலிபீடம் மந்திரலிங்கம்.

# சிங்கப்பூர் ஒப்பந்தத்தில் தமது தரப்பில் குறைபாடுகள்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் வர்த்தக ஒப்பந்தத்தில், தமது தரப்பில் குறைபாடுகள் உள்ளதாக சிங்கப்பூர் பிரதமரிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். குறித்த குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

உத்தியோகப்பூர்வ விஜயத்தினை மேற் கொண்டு சிங்கப்பூருக்கு சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், சிங்கப்பூர் பிரதமர் Lee Hsien Loong இடையில் நேற்று வெள்ளிக்கிழமை சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்த சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்,

ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் பிராந்திய சுற்றாடல் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் நிறுவன தலைவர்கள் மாநாட்டில் முதன்மை உரையாற்றவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ளார்.

ஏற்கனவே அவர் சிங்கப்பூர் பிரதமர் ஜனாதிபதி மற்றும் தேசிய அபிவிருத்தி அமைச்சர் டெஸ்மன்ட் லீ ஆகியோரை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ். பிரதேசத்தில் ஊரி, களபூமி, CTB, தோப்புகாடு, Jetty, பாலகாடு, Sri Lanka Navy, ஊர்காவற்றுறை, நாரந்தனை, தம்பாட்டி, ஊர்காவற்றுறை நீதிமன்றக் கட்டடத் தொகுதி, துணவி, சங்கானை, தொட்டிலடி, பண்டத்தரிப்பு, விழிசிட்டி, தொல்புரம், சுழிபுரம், கள்ளவேம்படி, வடலியடைப்பு, சில்லாலை, சாந்தை, விளான், பெரிய விளான், இளவாலை, மாரீசன் கூடல், சேந்தான்குளம், மாதகல், காஞ்சிபுரம், ஜம்புகோளப் பட்டினம், குசுமாந்துறை, காட்டுப்புலம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் திருக்கேதீஸ்வரப் பிரதேசம், மாந்தை சந்தி, நாகதாழ்வு, சிறுநாவற் குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- எப்போதும் விரிந்து மலர்ந்து கொண்டே இருப்பது தான் வாழ்க்கை. யாருக்கும் பயனில்லாமல் சுருங்கி விடுவது தான் மரணம்.
- தோல்வியின் மூலம் நாம் புத்திசாலிகள் ஆகிறோம். அதனால், எத்தனை முறை தோற்றாலும் குறிக்கோளை அடைவதற்கான முயற்சியை கைவிட்டுவிடாதீர்கள்.
- ஒரு நிமிடம் கூட ஓயாமல், ஏதாவது ஒரு பணியைச் செய்து கொண்டே இருங்கள். அது தவறோ சரியோ, எதுவாக இருந்தாலும் பொருட்படுத்தவேண்டாம்.
- நமது அகவாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டுமே நாம் காணும் உலகமும் சிறப்பும் தூய்மையும் கொண்டதாக இருக்கும்.
- சண்டையிடுவதோ, குறைசொல்வதோ தேவைஇல்லை. நிலைமையைச் சீர்படுத்தி அமைக்க அவை சிறிதும் உதவப்போவதில்லை.
- நாம் எண்ணும் ஒவ்வொரு எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு சூட்சும தன்மையை அடைந்து நம்மிடமே வந்து விடும்.

# மோகன்ராஜ் சகல துறையாட்டம் ஜப்னா பந்தேர்ஸ் அணி வெற்றி



யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் சுப்பர் லீக் என்னும் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது பருவகாலப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானங்களில் இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஏ பிரிவில் ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ், அரியாலை வோரியர்ஸ், நல்லூர் பிறவுண்கொஸ் அணிகளும், பி பிரிவில் வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்ரார்ஸ், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் மற்றும் ரில்லியூர் றைரன்ஸ் ஆகிய அணிகளும் உள்ளன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஆட்டமொன்றில் ஜப்னா பந்தேர்ஸ் அணியை எதிர்த்து அரியாலை வோரியர்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற ஜப்னா பந்தேர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கிணங்க களமிறங்கிய அரியாலை வோரியர்ஸ் அணி, துவாரகசீலனின் துடுப்பாட்டத்தின் உதவியுடன் 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 163 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் துவாரகசீலன் 63 ஓட்டங்களையும், ஜெரிக் துசாந்த் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜப்னா பந்தேர்ஸ் அணி சார்பாக, மோகன்ராஜ் 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், சுரேந்திரன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

164 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய ஜப்னா பந்தேர்ஸ் அணி, 6 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் மோகன்ராஜ் 37, அருண்குமார் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

அரியாலை வோரியர்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் மது 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக ஜப்னா பந்தேர்ஸ் அணியின் மோகன்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

# பதிலடி கொடுத்தே தீருவோம் இந்தியாவுக்கு எச்சரிக்கை

இந்திய அணிக்கெதிரான முதல் ஒருநாள் போட்டியில் தோல்வியடைந்ததிலிருந்து நியூசிலாந்து அணி விரைவில் மீண்டு வரும் என அந்தணியின் வீரர் பெர்குசான் தெரிவித்துள்ளார்.

இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இரு அணிகளுக்கிடையேயான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. இரு அணிகளுமே பலம் வாய்ந்த அணியாக இருந்தாலும், சொந்த மண்ணில் விளையாடுவதால், நியூசிலாந்து அணி ஆதிக்கம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் முதல் போட்டியிலே 157 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இந்திய அணியின் தலைவ ஹோலி கூட, நாங்கள் நியூசிலாந்து அணி 300 ஓட்டங்களுக்கு மேல் அடிக்கும் என்று எதிர்பார்த்தோம், ஆனால் ஆட்டம் இப்படி முடிந்துவிட்டது என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் இது குறித்து நியூசிலாந்து அணியின் நட்சத்திர வீரர் பெர்குசான், முதல் ஒருநாள் போட்டியில்,

நாங்கள் சிறப்பாக செயற்படவில்லை என்பது தான் உண்மை. எங்களது தவறால் தான் தோல்வியடைந்தோம்.



கிரிக்கெட்டில் இதுபோன்ற நிகழ்வுகள் நடப்பது சகஜம் தான். அந்த தோல்வியில் இருந்து அடைந்த தோல்வியில் இருந்து மீண்டு வருவோம். முதல் போட்டியில் செய்த தவறுகளை சரி செய்து கொண்டு அடுத்தடுத்த போட்டிகளில் களமிறங்கி வெற்றி பெறுவோம் என்று கூறியுள்ளார். (க)

# ஐ.சி.சி.கனவு அணியில் அதிகம் இடம்பிடித்தவர்கள்





பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்களின் பெயரை சேர்த்து ஐ.சி.சியின் சிறந்த டெஸ்ட் கனவு அணி பட்டியல் வருடா வருடம் வெளியிடப்பட்டு வருகிறது.

அப்படி இதுவரை வெளியிடப்பட்ட பட்டியலில் ஐந்துக்கும் அதிகமான முறை கனவு அணியில் முன்னணி வீரர்களில் பலர் இடம் பிடித்துள்ளனர்.

இந்த பட்டியலில் தென்னாபிரிக்காவின் ஸ்டெயின் பெயர் 8 முறை இடம்பிடித்துள்ளது.

பட்டியலில் இரண்டாமிடத்தில் உள்ள இலங்கை ஜாம்பவான் சங்கக்காரவின் பெயர் 7 முறை இடம்பிடித்துள்ளது. மூன்றாவது இடத்தில் தென்னாபிரிக்க வீரர்கள் கலிஸ் மற்றும் டிவில்லியர்ஸ் ஆகிய இருவர் உள்ளனர். (க)

# இலங்கைக்கு எதிரான டெஸ்டில் சாதனை படைத்த மிட்செல் ஸ்டார்க்



அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் 200 டெஸ்ட் விக்கெட்டுகளை கைப்பற்றி சாதனை பட்டியலில் இணைந்துள்ளார்.

இலங்கை-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்து விளையாடி வருகிறது.

ஸ்டார்க், கம்மின்ஸ் மற்றும் ரிச்சர்டுசனின் அபார பந்துவீச்சில் இலங்கை அணி வீரர்கள் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.

சுரங்கா லக்மல் 7 ஓட்டங்களில் இருந்தபோது ஸ்டார்க்கின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இது சர்வதேச டெஸ்ட் அரங்கில் ஸ்டார்க்கின் 200ஆவது விக்கெட் ஆகும். இதன்மூலம் டெஸ்ட் போட்டிகளில் 200 விக்கெட்டுகளை கைப்பற்றிய 17வது அவுஸ்திரேலிய வீரர் என்ற பெருமையை ஸ்டார்க் பெற்றார்.

ஸ்டார்க் 50 டெஸ்ட் போட்டிகளில் இந்த மைல்கல்லை எட்டியுள்ளார். டெஸ்டில் அவரது சிறந்த பந்துவீச்சு 6/50 ஆகும்.

மேலும் 9 முறை ஒரே இன்னிங்சில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். (க)

# ஆயிரம் விக்கெட்டுக்களை வீழ்த்திய இங்கிலாந்து அணி வீரர்கள்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் ஜேம்ஸ் ஆண்டர்சன்-ஸ்டுவர்ட் பிராட் இணைந்து 1000 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளனர்.

இங்கிலாந்து-மேற்கிந்தியதீவுகள் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பார்பேடாஸில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி, முதல் நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 264 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இங்கிலாந்து தரப்பில் ஜேம்ஸ் ஆண்டர்சன் 4 விக்கெட்டுகளையும், பென் ஸ்டோக்ஸ் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். டெஸ்ட் அரங்கில் ஆண்டர்சன் மொத்தமாக 567 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

அதேபோல் ஸ்டுவர்டு பிராட் டெஸ்டில் 433 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இதன்மூலம் இவர்களின் கூட்டணி 1000 விக்கெட்டுகளை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. பிராட் தற்போது அணியில் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜேம்ஸ் ஆண்டர்சன் 146 டெஸ்ட்களில் மொத்தமாக 569 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இதற்கு முன்பு அவுஸ்திரேலியாவின் கிளென் மெக்ராத்-ஷேன் வார்னே கூட்டணி 1001 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தது.



இலங்கையின் முரளிதரன்-சமிந்தா வாஸ் கூட்டணி 895 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளது.

இந்திய வீரர்களில் ஹர்பஜன் மற்றும் கும்ப்ளே கூட்டணி 501 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளது. (க)

## எனது தீர்மானம்...

மையில் கூடியது. இதன்போது சபாநாயகரின் அறிவிப்பு நேரத்தில் அரசியலமைப்பு சபை தொடர்பாக விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசியலமைப்பு சபையில் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் அதன் தலைவரான என்னால் எடுக்கப்பட்ட அனைத்து தீர்மானங்களும் சட்டபூர்வமானதாகவும் பக்கச்சார்பு அல்லாமலும் எடுக்கப்பட்டதாகும்.. இதன்போது உறுப்பினர்கள் எவரும் எந்த அழுத்தமும் இல்லாமல் அவர்களது கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அனைவரதும் கருத்துக்களை கவனித்தே பக்கச்சார்பு இன்றி இத்தீர்மானத்துக்கு வருகின்றோம்.

அத்துடன் கருத்து பேதங்களுக்கு உட்பட்ட சில பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் எமக்கு அனுப்பப்பட்ட பெயர் பட்டியலை ஆராயும்போது சபையில் அனைவரது விருப்பத்தின் அடிப்படையில் அந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மேலும் சில சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிரேஷ்ட நீதிபதிகளின் கடமை தொடர்பில் தேவையற்ற கருத்துக்களை தெரிவிப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். அதேபோன்று நீதிமன்றங்களுக்கான நீதிபதிகள் நியமிக்கப்படும்போது அவர்களின் சிரேஷ்ட நிலையை மாத்திரம் கருத்திற்கொள்ளாது பிரதம நீதியரசரின் பரிந்துரையையும் கவனத்திற்கொள்வோம். இலங்கையின் நீதிமன்றங்களுக்கு அரசியலமைப்பு பேரவை தொடர்பாக நம்பிக்கை இருக்கின்றது என்றார்.(ம-3)

## மாகாண சபை...

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர் டலஸ் அழகபெருமவினால் மாகாண சபைகளை நடத்தக்கோரிய சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை கொண்டு வரப்பட்டது. இதன்போது கலைக்கப்பட்டுள்ள மாகாணசபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்ற கோரிக்கையினை பிரதான எதிர்க்கட்சியும், ஜே.வி.பி மற்றும் ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகள் முன்வைத்தன.

எனினும் நேற்று காலை பிரதான எதிர்க்கட்சி தலைவர் குறித்த பிரச்சினையில் சபையில் வாதாடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாணசபை தேர்தல் குறித்த விவாதத்தின் போது சபையில் இருக்கவில்லை.

மேலும் சிங்கள அரசியல் கட்சிகள் வடக்கு கிழக்கு தேர்தல் குறித்து சுட்டிக்காட்டி பேசிய போதிலும் கூட வடக்கு கிழக்கு பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் விவாதத்தில் கலந்துகொள்ளாது வெளியேறியிருந்தனர்.

எனினும் ஈ.பி.டி.பியின் பொதுச்செயலாளர் டக்ளஸ் தேவானந்தா மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டும் என்ற அழுத்தமாக கோரிக்கையை முன்வைத்து பேசினார்.(ம-3)

## இந்த ஆண்டுக்கு...

களை அமைப்பது குறித்து பேச்சுவார்த்தை நேற்று பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அவரின் செயலாளர் மற்றும் ஆலோசகர் ஆகியோருக்கும் இடையில் இடம்பெற்றது.

இதன்படி இந்த வருடத்தில் இரண்டு கட்டமாக 17 ஆயிரம் வீடுகளை வடக்கு, கிழக்கில் நிர்மாணிப்பதென முடிவானது. முதற் கட்டமாக 10 ஆயிரம் வீடுகளும், இரண்டாம் கட்டமாக 7ஆயிரம் வீடுகளும் இந்த வருடத்தில் கட்டுவதென முடிவானது.

இந்த சந்திப்பில் கூட்டமைப்பின் எம்.பிக்கள், பிரதமர், வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, பொருளாதார ஆலோசகர் பாஸ்கரலிங்கம் மற்றும் அதிகாரிகள் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தனது தமிழ் அதிகாரிகளையும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரையும் பேசி இணக்கப்பாட்டிற்கு வரும்படி கூறிவிட்டு, இருதரப்பும் தமிழில் கலந்துரையாடியதை பார்த்துக் கொண்டிருந்தார் பிரதமர்.

வீடமைப்பு திட்டம் பற்றி விளக்கமளித்த பாஸ்கரலிங்கம்- முதற்கட்டமாக 10ஆயிரம் கல் வீடுகளை அமைப்பதாகவும், இரண்டாம் கட்டமாக 7 ஆயிரம் பொருத்து வீடுகளை அமைக்கலாமென்றும் யோசனை தெரிவித்தார்.

எனினும், கூட்டமைப்பின் எம்.பிக்கள் பெரும்பாலானவர்கள் அதை ஏற்கவில்லை. அது மக்களிடையே மோதலை ஏற்படுத்தி, தமக்கு வீணாண வில்லங்கத்தை தருமென குறிப்பிட்டனர். எனினும், மலையக பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி பொருத்து வீட்டை பார்வையிட்டதாகவும், அதில் ஆட்சேபனையிருக்கவில்லையென ஒரு சில எம்.பிக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். எனினும், பின்னர் கூட்டமைப்பினர் கூட்டாக கல் வீட்டை வலியுறுத்தினர்.

இதற்கு விளக்கமளித்த பாஸ்கரலிங்கம், கல்வீடு 10 இலட்சத்திலும், பொருத்து வீடு 13 இலட்சத்திலும் தயாராகிறது. எது என்றாலும் தமக்கு பிரச்சினையில்லை. ஆனால், கல்வீட்டிற்கு தேவையான மணல், மரம் என்பவற்றை பெறுவதில் தட்டுப்பாடு நிலவுகிறது. கல் வீட்டை தவிர்த்த வேறொரு வடிவமைப்பிற்கு செல்வதின் மூலமே சூழலை பாதுகாக்கலாம் என்றார்.

அதை மாவை சேனாதிராசா ஆட்சேபித்தார். கல்வீடுகள் கட்டுவதற்கு தேவையான மண்ல் போதியளவில் உள்ளதாகவும், யாழ்ப்பாணத்தில் மட்டும் 50ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கு தேவையான மணல் உள்ளதாக யாழ்.மாவட்ட செயலாளர் தன்னிடம் கூறியுள்ளார் என்றார்.

எந்த வீடென்றாலும் தமக்கு ஆட்சேபனையில்லை, ஆனால் வேறு முறைப்பாடுகளுடன் தம்மிடம் வரக்கூடாது என தெரிவித்த அதிகாரிகள், கல்வீட்டு திட்டத்திற்கு சம்மதித்தனர். இரு தரப்பும் இணக்கத்தை எட்டியதும் கூட்டமைப்பினரிடம் திருப்தியா என வினவி, சந்திப்பை நிறைவு செய்தார் பிரதமர்.(ம-3)

## நாட்டில் ஜனநாய...

பாராளுமன்றத்தில் நேற்று அரசியலமைப்பு பேரவை தொடர்பாக எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் உரையாற்றும் போதே பிரதமர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், நாட்டில் சுயாதீன ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சுயாதீனமான நீதிமன்றம் உள்ளது. உயர் நீதிமன்றம் கடந்த டிசம்பர் மாதம் வழங்கிய நீதியான தீர்ப்பை பொறுத்துக்கொள்ள முடியாமல் எதிர்க்கட்சியினர் அரசியலமைப்பு பேரவை மீது தற்போது குற்றம் சுமத்துகின்றனர்.

பாராளுமன்றத்தில் உயர் நீதிமன்ற நீதியரசர்களை அவர்களின் சமயத்தை கூறி விமர்சிக்கின்றனர். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட விதத்தை மக்கள் மறக்கவில்லை.

எனினும் தற்போதைய அரசாங்கம் அரசியலமைப்பு பேரவையின் மூலம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய அனைத்து நியமனங்களையும் வழங்குகிறது. இறுதி தீர்மானம் பாராளுமன்றத்திடமே உள்ளது எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## காலநிலை மாற்ற...

மாற்றத்தின் மோசமான தாக்கங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவுவதற்கான வளமானதொரு நிதியளிப்பு பொறிமுறையை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சிங்கப்பூரில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய சுற்றாடல் துறை அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் துறை நிறுவனங்களின் மூன்றாவது மாநாட்டில் முதன்மை உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், இலங்கை 2019 பூகோள காலநிலை இடர் சுட்டெண்ணில் இரண்டாவது இடத்தில் உள்ளது. ஒரு சமர்சீரான காலநிலையைக்கொண்ட தீவான இலங்கை, அதன் நிலப் பிரதேசத்தின் 70 வீதம் உலர் வலயத்திற்கு சொந்தமாக இருப்பதுடன், வருடத்தில் ஆயிரத்து 500 மில்லி மீற்றரை பார்க்கிலும் குறைவான மழைவீழ்ச்சியையே பெற்றுவருகிறது.

காலநிலை மாற்றத்தின் மோசமான பாதிப்புக்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியிலும் இலங்கை அண்மையில் அதன் பாரிய ப்சுமை முதலீடாக மொரஹகந்த - களுகங்கை பல்நோக்கு நீர்வள திட்டத்தை ஆரம்பித்தது. இது காலநிலை மாற்றத்தின் மோசமான பாதிப்புக்களை குறைக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும்.

அதிகரித்துவரும் பூகோள வெப்பமாதல் சவால்களை எதிர்கொண்டு, பசுமை சூழலை பாதுகாப்பதற்கான இந்த பசுமை திட்டங்களின் முன்னேற்றத்தை பார்ப்பதற்கு எமது நாட்டுக்கு வருகை தருமாறு நான் உலகத் தலைவர்களை அன்புடன் அழைக்கின்றேன்.

இதேவேளை, காலத்தின் தேவைகளுக்கேற்ற வகையில் புதிய நடவடிக்கைகளை எடுக்கவும், சுற்றாடல் மாநாடுகளை மீளாய்வு செய்வதற்கான் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சுற்றாடல் மாநாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட அர்ப்பணிப்புகளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு உறுப்பு நாடுகளை ஊக்குவிக்கின்ற ஒரு முறைமையை ஸ்தாபிக்க வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன்.

மேலும், கைத்தொழில், 'தூய சமுத்திரம்' வேலைத்திட்டம் போன்ற துறைகளை பலப்படுத்தும் வகையில் அபிவிருத்தியடைந்த நாடுகளினதும் பிராந்திய கூட்டுறவு அமைப்புகளினதும் ஒத்துழைப்பு விரிவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-3)

## மக்கள் உரிமை...

வருகின்றது என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று மாகாண சபைகள் தேர்தல் தொடர்பாக நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அதன்போது மேலும் தெரிவிக்கையில்,

இதேவேளை ஊடகமொன்றில் ஜனாதிபதித் தேர்தலையே முதலில் நடத்த வேண்டுமென அரசாங்கம் கூறியுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. இதன்படி ஜனாதிபதித் தேர்தல் வரை வேறு எந்த் தேர்தலையும் நடத்தாது இருப்பதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது.(ம-3)

## திடமான சான்றை...

கையர் மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொரளையில் கலாநிதி என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டில் அந்த மன்றத்தின் தலைவர் வசந்த கீர்த்திரத்ன கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

19 ஆம் சீர்திருத்தத்தினாலே தற்போது நாட்டில் சிக்கல் நிலை உருவாகியுள்ளது. அதேபோன்று நாட்டில் பிளவுகள் எதுவுமின்றி சமாதானமான ஆட்சிபலத்தை உருவாக்குவதற்கான பிரதிநிதிகளை தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## பிரதம நீதியரச...

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

உயர் நீதிமன்ற நீதியரசர்களை நியமிக்கும்போது சிரேஷ்ட நிலையை கருத்திற் கொண்டு நியமிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு கடந்த காலங்களில் நியமிக்கப்பட்டிருந்தால் சிரேஷ்ட நீதியரசராக இருந்த மாக்ஸ் பெர்ணான்டோ பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டிருப்பார்.

ஆனால் சரத் என் சில்வா பிரதம நீதியரசாக நியமிக்கப்பட்டார். பிரதம நீதியரசராக இருந்த சிராணி பண்டாரநாயக்கவுக்கு என்ன நடந்தது என்று அனைவருக்கும் தெரியும். (ம-3)

## நீதிக்காக மக்கள்...

இலங்கையின் பொறுப்புக்கூறல் கடப்பாடுகளில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து தெற்காசியப் பிராந்தியங்களுக்குப் பொறுப்பாக இயங்கிவரும் சர்வதேச மன்னிப்புச் சபை அலுவலகம் விடுத்துள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

# இந்தியாவே மாகாணசபை முறைமையை திணித்தது!

## இந்த முறை வேண்டுமா இல்லையா என தீர்மானிக்க வேண்டும் - மகிந்த அமரவீர

(கொழும்பு)

இந்தியாவின் தேவைக்கே மாகாண சபை முறைமை இலங்கைக்கு திணிக்கப்பட்டது. மாகாணசபை முறைமை வேண்டுமா? இல்லையா? என்பதை பாராளுமன்றத்தில் ஆராய்ந்து தீர்மானம் எடுக்க வேண்டும்.

ஆனால் மாகாணசபை இயங்க வேண்டும் என்றால் மாகாணசபைக்கான முழுமையான அதிகாரங்களை கொடுத்து சுதந்திரமாக செயற்பட அனுமதிக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக மைத்திரி, மகிந்த, சந்திரிகா ஆகிய மூவரும் வாக்குறுதிகளை கொடுத்துள்ளனர். அதற்கான மக்கள் ஆணையும் உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் மாகாணசபை தேர்தலை நடத்தக் கோரி எதிர்க்கட்சி உறுப்பினர் டளஸ் அழகபெரும கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையின் போது உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.(ம-3)

### தன நிதானய

திகதி 2019-01-25
சீட்டிழுப்பு இலக்கம் 106
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 27 44 56 72

### மஹஜன சம்பத

திகதி 2019/01/25
சீட்டிழுப்பு இலக்கம் 3841
ஆங்கில எழுத்து: D
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 1 0 2 7 7 1

### கொவிசெத

திகதி 2019.01.25
சீட்டிழுப்பு இலக்கம் 2015
ஆங்கில எழுத்து: B
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 03 12 13 53

### மெகா பவர்

திகதி 25/01/2019
சீட்டிழுப்பு இலக்கம் 336
வெற்றி எழுத்து: S
சுப்பர் இலக்க: 06
வெற்றி இலக்கங்கள்: 65 66 72 79

தேசிய லொத்தர் சபை

வாருங்கள்!

# இன்று இரண்டாம் நாள்

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

10 EDITION

JITF 2019

FOOD & BEVERAGE | CONSTRUCTION | AUTOMOBILE | ICT | AGRICULTURE | APPAREL

25th 26th 27th
ஜனவரி / January
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Ground - Jaffna

www.jitf.lk  jitf.lk

PLATINUM SPONSOR: INSEE CEMENT
GOLD SPONSOR: Browns A Heritage of Trust
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH: CCIY

OFFICIAL PARTNERS
HEALTH CARE: ASIRI HEALTH | FOOD: Ramona | BANKING: PEOPLE'S BANK | TELECOMMUNICATION: Sri Lanka Telecom Mobitel | FERTILITY CARE: NINEWELLS
SUPPORTED BY
ROOFING: ROOF | ONLINE MEDIA: MC creatives | PRINT MEDIA | RADIO | ELECTRONIC MEDIA: DAN
ENDORSED BY


## பதவியாசை என...

பான்மை மக்களினதும் உரிமைகள் பாதிக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. சிறுபான்மை கட்சிகளிற்கும் சிறுபான்மை மக்களிற்கும் உள்ள உரித்தானது பாதுகாக்கப்பட்டு பேணப்பட வேண்டும் என்பதற்காகவே நாம் போராடி வருகின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று காலை 27/2 இன்கீழ் விசேட கூற்று எழுப்பி உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். (ம-4)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## பணியாளர் தேவை

வடமராட்சியில் இயங்கும் சைவ உணவகத்துக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் / பார்சல் கட்டுபவர்
- சமையல் உதவியாளர்

உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் அனுபவத்திற்கேற்ப வழங்கப்படும்.

தொடர்பு: 077 219 0128 (C-5301)

Feb 17 நடக்கவுள்ள சுகாதார முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கான வகுப்புகள் ஆரம்பம்
இன்று 3.30pm,
நாளை ஞாயிறு 9.30 - 3.00pm
கோலாசிற்றி
234,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
0778435224

## வைத்தியர் தேவை

R.M.P அல்லது M.B.B.S வைத்தியர் பகுதி நேரமாகவோ, முழு நேரமாகவோ தேவை. ஓய்வுபெற்ற மருந்தாளரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு : (T.P- Viber)
075 459 2801 (அ-5299)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240
● மானிப்பாய் ●யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ●சாவகச்சேரி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS (அ-2446)

# M.சிவகுமாரின் அக்னியின் மாபெரும் இசைமழையில்

இந்திய தொலைக்காட்சி சரிகமப புகழ்
கலைஞர்கள் முதன்முதலாக
கிளிநொச்சி மண்ணில் கலந்து கொள்ளும்

## கலைகளின் சங்கமம்

இசை நிகழ்ச்சி




பெப்ரவரி
02 | 03
[சனி, ஞாயிறு]

மாபெரும் மலிவு விற்பனை
காலை 11.00 மணி - இரவு 12 மணிவரை

கலை நிகழ்ச்சிகள்
மாலை 03.00 மணி - இரவு 12 மணிவரை

கிளிநொச்சி மத்தியகல்லூரி மைதானம்



## கலைகளின் சங்கமம்

நுழைவுக்கட்டண விபரங்கள் (அ-5303)

1000/- 700/- 500/-

நுழைவுச்சீட்டு பெற்றுக்கொள்ளும் இடங்கள்

01 ரவி லேணர்ஸ் (சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
கிளிநொச்சி: 0777 526658
மல்லாவி: 077 9102 114
ஒட்டுசுட்டான்: 077 356 3530
முள்ளியவளை: 077 1321 885
புதுக்குடியிருப்பு: 077 1623 282

02 சிந்து நகை மாளிகை
கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்பாக

03 யேசுராசன் மரக்கறி வாணியம்
கிளிநொச்சி பொதுச் சந்தை
077 8666 737

04 சிற்றி மெடிக்கல்
A9 வீதி, கிளிநொச்சி.
077 627 4719

05 சிவா பதிப்பகம்
டிப்போ சந்தி, கிளிநொச்சி.
077 534 6766

06 ஆதவன் உணவகம்
வாடியடி சந்தி, பூநகரி
077 777 8395

07 நிரோ லேணர்ஸ்
A9 வீதி, பளை
077 0043 948

08 சிந்துஜா ரெக்ஸ்
இரணைமடு சந்தி.

09 செல்லா Hotel & Rest
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
077 744 2846, 021 492 5665

குறிப்பு: நுழைவுச்சீட்டு பாவிக்கும் நாளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
(ஒரு நுழைவுச்சீட்டு ஒரு நாளைக்கு மட்டும்)
பெற்றோருடன் வருகைதரும் 12 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு அனுமதி இலவசம்.
குறிப்பு - மாபெரும் மலிவு விற்பனையில் பங்குபெற விரும்பும் வியாபார ஸ்தாபனங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகட்கு: 0767699191, 0762948744, 0774599709
அனைவரும் வருக! ஆதரவு தருக!!

விழா ஏற்பாட்டாளர் : V.S மகேந்திரன்
Founder/ President
Poverty Free Welfare Organization

மட்டுப்படுத்தப்பட்டுள்ள அனுமதி என்பதால் நுழைவுச் சீட்டுக்களுக்கு முந்துங்கள்!


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.